பக்கங்கள் : பதினான்கு +

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2036 மார்கழி 11 திங்கட்கிழமை (26.12.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 30

# படுகொலையுண்ட ஜோசப் எம்.பிக்கு 'மாமனிதர்' விருது வழங்கிக் கௌரவம்



## அவரின் மறைவு தமிழீழத்தின் வரலாற்றில் மாபெரும் துயர நிகழ்வு என பிரபா வேதனை

மட்டக்களப்பு,டிசெம்பர்26

மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் நேற்று அதிகாலை நத்தார் ஆராதனையின் போது துப்பாக்கிதாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட மூத்த தமிழ் அரசியல்வாதியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடளுமன்ற உறுப்பினருமான ஜோசப் பரராஜசிங்கம் (வயது - 72) தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் மிக உன்னதமாகப் பணியாற்றியமைக்காக அவருக்கு மிக உயர்ந்த விருதான மாமனிதர் விருது வழங்கிக் கௌரவித்திருக்கிறார் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன். (14ஆம் பக்கம் பார்க்க)

### பதற்றத்தின் மத்தியில் நத்தார் தினம்

யாழ்ப்பாணம்,டிசெ.26

குடாநாட்டில் பதற்றம் மற்றும் நெருக்குவாரங்களின் மத்தியில் நேற்று கிறிஸ்தவ மக்கள் நத்தார் தினத்தைக்கொண்டாடினார்கள்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு தேவாலயங்களில்இடம்பெற்ற ஆராதனைகளில் அச்சம் காரணமாகடந்த ஆண்டைவிட இம்முறை மக்களின்எண்ணிக்கை குறைந்திருந்தது. பகல் வேளைகளில் இடம் (14ஆம் பக்கம் பார்க்க)

தொடரும் இராணுவ அராஜகங்களுக்கு எதிராக

## இன்றுமுதல் பணிப்புறக்கணிப்பு நாளை துக்கதினம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.26

தொடரும் இராணுவ அராஜகங்களுக்கு மூடிவுகாணும் முகமாக இன்றுமுதல் அரச ஊழியர்கள் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்புப் போராட்டதில் ஈடுபடவுள்ளனர். இதேவேளை நாளை குடாநாட்டில் துக்கதினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

பணிப்புறக்கணிப்புப் போராட்டத்திற்கு தமிழ்த் தேசிய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பும், துக்கதின அனுஷ்டிப்புக்கு யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையும் அழைப்பு விடுத்துள்ளன. (14ஆம் பக்கம் பார்க்க)

### கிரனேட் வீச்சு!

கரவெட்டி,டிசெ.26

வல்வெட்டித்துறையில் இராணுவத்தினரின் காவலரண்களை நோக்கி கிரனேட்டுக்கள் வீசப்பட்டுள்ளன. வல்வை மாவட்ட வைத்தியசாலை முன்பாக உள்ள இராணுவக் காவலரண் நோக்கியும், ஊறணி தீர்த்தக் கடற்கரைக்கு அருகிலுள்ள காவலரணை நோக்கியும் கிரனேட்டுக்கள் வீசப்பட்டுள்ளன.

இந்தத் தாக்குதலால் படையின (14ஆம் பக்கம் பார்க்க)

## வெட்டுக் காயத்துடன் சடலம் மீட்பு

அச்சுவேலி,டிசெ.26

புத்தூர் - சுன்னாகம் வீதியில் ஈவினை நரசிங்க வைரவர் கோயிலுக்கு அருகில் நேற்று ஞாயிற்றுக்கிழமை வெட்டுக் காயங்களுடன் சடலம் ஒன்று மீட்கப்பட்டது. சங்கரத்தை பத்திரகாளி கோயிலடியைச் சேர்ந்த அரியரத்தினம் கனகராசா (வயது 58) என்ற ஐந்து பிள்ளைகளின் தந்தையின் சடலம் இது என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

புத்தூர் நிலாவரையில் உள்ள 'பேக்கரி' ஒன்றில் பணிபுரியும் இவர் வேலைக்காக சைக்கிளில் புறப்பட்டார் என்றும் பின்னர் தலைசிதறி மூளை வெளியேறிய நிலையில் சடலம் வீதியோரத்தில் இருந்து நேற்றுக் காலையில் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதிகாலை ஒருமணியளவில் தொடர்துப்பாக்கிச் சத்தம் வீதியோரத்தில் கேட்டதாகவும், ஒருவர் அவலக்குரல் எழுப்பும் சத்தம் கேட்ட (1,4ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பஸ்தர் இருவர் சுட்டுக்கொலை

அச்சுவேலி,டிசெ.26

அச்சுவேலியில் இரு குடும்பஸ்தர்கள் நேற்றுமுன்தினம் இரவு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். நள்ளிரவு 11 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று அங்குள்ளவர்கள் தெரிவித்தனர்.

சுட்டுக்கொலை செய்யப்பட்டவர்கள் அச்சுவேலி செல்வநாயகபுரத்தை வதிவிடமாகக்கொண்ட ஏழு பிள்ளைகளின் தந்தையாரான மோகன் ரவி (வயது 44) மற்றவர் ஒரு பிள்ளையின் தந்தையாரான மாரியப்பன் விஜயராசா (வயது 25) ஆகியோராவர்.

கல் உடைக்கும் தொழிலாளிகளான இவர்கள் இரண்டுபேரும் உறவினர் வீட்டில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றிற்குச் சென்றுவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்த சமயம் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

குடியிருப்புக்கு அருகில் உள்ள பற்றைகளுக்குள் இராணுவத்தினர் இரவு பதுங்கியிருந்தனர் எனவும்-

இரவு 11மணியளவில் சரமாரியான துப்பாக்கிச்சூட்டுச் சத்தம் (14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் இராணுவத்தால் சுடப்பட்டவர்களில் இருவர் பொதுமக்கள் என இனங்காணப்பட்டனர்

### ஏனைய சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை

யாழ்ப்பாணம்,டிசெ.26

நேற்றுமுன்தினம் யாழ். கோட்டைப் பகுதியில் இராணுவத்தினர் சுட்டுக்கொன்ற ஐவரில் இருவர் பொதுமக்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் யாழ். மத்திய கல்லூரியில் இரவுக் காவலாளியாகக் கடமையாற்றி வந்தவர் எனவும் மற்றையவர் கொட்டடிப் பகுதியில் உள்ள 'கராஜ்' ஒன்றில் பணியாற்றி வந்தவர் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ். மத்திய கல்லூரியின் இரவுக் காவலாளியான கிருஷ்ணன் விமலேஸ்வரன் (வயது 31) என்பவரை அவரது தாயாரும் கராஜ்ஜில் பணியாற்றியவரான பாலசிங்கம் சந்திரகுமார் (வயது 24) என்பவரை அவரது உறவினரும் நேற்று (14ஆம் பக்கம் பார்க்க)

### மன்னார் கடலில் கடற்படை சிப்பாயின் சடலம் மீட்பு

மன்னார்,டிசெ.26

மன்னார் கடற்பரப்பில் காணாமற்போன மூன்று கடற்படையினரில் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

பள்ளிமுனைக் கடற்பரப்பில் கடந்த வியாழக்கிழமை கடற்படைப் படகுகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் மூன்று கடற்படையி (14ஆம் பக்கம் பார்க்க)

## புதுடில்லியில் சொல்ஹெய்மை சந்திப்பதற்கு ஜனாதிபதி மறுப்பு

### அதனால் சமாதான முயற்சிகளில் தாக்கம், தாமதம்

கொழும்பு,டிசெ.26

புதுடில்லிக்கு விஜயம் செய்யும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அங்கு வைத்துச் சந்தித்துப் பேசுவதற்கு இலங்கை அமைதி முயற்சிகளுக்கான நோர்வேயின் விசேட தூதுவரும் அந்நாட்டின் அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் எடுத்த முயற்சிக்கு இணங்குவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மறுத்துவிட்டார் எனத் தெரியவருகின்றது.

இந்தியாவிற்கான தனது 3 நாள் பயணத்தை நாளை ஆரம்பிக்கவுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இந்தியத் தலைநகர் புதுடில்லியில் வைத்துச் சந்திக்கத் திட்டமிட்டிருந்தார் எரிக்சொல்ஹெய்ம். அமைதிப் பேச்சுகளை மீள ஆரம்பிப்பது, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை வலுவாக நடைமுறைப்படுத்துவது (14ஆம் பக்கம் பார்க்க)

கிளைமோர் தாக்குதலை அடுத்து தேடுதலின் பின் காணாமற்போன

# நான்கு வயதுக் குழந்தை உட்பட 5 பேர் பேசாலையில் எரித்துக் கொல்லப்பட்டனர்!

கொழும்பு,டிசெ.26

மன்னார் பேசாலையில் கடற்படையினர் மீது கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலையடுத்து படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தேடுதலின்போது காணாமற்போன - நான்கு வயது குழந்தை உட்பட ஐந்து பேர் வெட்டி, எரித்துக் கொல்லப்பட்டுள்ளனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சடலங்களாக மீட்கப்பட்டவர்கள் 38 வயதுடைய இம்மானுவேல் குரூஸ், அவரது மனைவி மற்றும் திரேஸா (சுகந்தி) அவரின் 4 வயது குழந்தை திலக்ஷன், மாணவி அந்தோனிக்கா என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களது சடலங்கள் பேசாலை நூறுவீட்டுத்திட்டத்திற்கு அருகில் உள்ள வீடொன்றில் எரியூட்டப்பட்ட நிலையில் காணப்பட்டன.

பேசாலையில் இடம்பெற்ற (14ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# புலனாய்வுத்துறை வரை ஊடுருவியுள்ள இனவாத சக்திகளின் கைவரிசையே இது!

## ஜோசப் எம்.பி.கொலை தொடர்பாகப் புலிகள் அறிவிப்பு

கிளிநொச்சி,டிசெ.26

தமிழ்த் தேசப்பற்றாளர் ஜோஸப் பரராஜ சிங்கத்தை இலங்கைப் படைகளின் புலனாய்வுத்துறை வரை நீண்டு செயற்படும் இனவாத சக்திகளே படுகொலை செய்துள்ளன என்று தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இப்படுகொலை தொடர்பாக புலிகளின் அரசியல்துறை நேற்று அறிக்கை ஒன்றை விடுத்தது:-

''தமிழ்த் தேசபற்றாளரும் மனித உரிமைச் செயற்பாட்டாளருமான ஜோசப் பரராஜசிங்கம் நத்தார் பண்டிகை ஆராதனையில் ஈடுபட்டிருந்தவேளை ஸ்ரீலங்காப் படைப் புலனாய்வுத் துறையினரால் கொடூரமாகச் சுட்டுக் கொலை''

- என்ற தலைப்பில் வெளியான அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ்த் தேசப்பற்றாளரும், மனித உரிமை விழுமியங்களை மதித்து மனித உரிமை மேம்பாட்டுக்காக உழைத்தவருமான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் மட்டக்களப்பு நகரின் இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள சென்.மேரிஸ் தேவாலயத்தில், 24 டிசம்பர் 2005 நள்ளிரவு அன்று, நத்தார் பண்டிகை ஆராதனையில் ஈடுபட்டிருந்த வேளையில், ஸ்ரீலங்காப் படைப் புலனாய்வுத் துறையினராலும் அவர்களது கருணா குழு, ஈ.பி.டிபி உள்ளிட்ட ஒட்டுக் குழுவினராலும் கொடூரமாகச் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். இந்தத் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி அவரது மனைவி திருமதி சுகுணம் உட்பட ஆராதனையில் ஈடுபட்டிருந்த ஏழு பேர் காயமடைந்திருக்கின்றனர்.

வருகைக் கால ஆராதனையில் கலந்து தனது மக்களின் சமாதானத்திற்காகவும், விடுதலைக்காகவும் மன்றாட்டம் செய்துவிட்டுப் பேராயரிடமிருந்து நற்கருணைப் பிரசாதம் பெற்றுத் திரும்புகையில் தேவாலயத்தினுள் புகுந்திருந்த ஸ்ரீலங்காப் படைப் புலனாய்வாளர்களும், ஒட்டுக் குழுவினரும் இணைந்து இந்தத் தேசப்பற்றாளரைத் துப்பாக்கிச் சூட்டில் கொடூரமாகக் கொன்றுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

தமிழ் மக்களின் மனித உரிமைகளுக்காகச் சர்வதேச அரங்கிலும், இராஜதந்திர அரங்கிலும் குரல் எழுப்பி, மனித உரிமை அமைப்புகளோடு தொடர்புகளைப் பேணி, வடக்கு-கிழக்கு மனித உரிமைச் செயலகத்தின் உருவாக்கத்திற்காகவும் அதன் வளர்ச்சிக்காகவும் அரும்பாடுபட்ட இந்த மனித உரிமைச் செயற்பாட்டாளரை ஸ்ரீலங்காப் படைப் புலனாய்வுத் துறையினர் மண்ணில் வீழ்த்தியுள்ளனர்.

ஜாதிக ஹெல உறுமய போன்ற தெற்கின் இனவாத சக்திகளின் கரம் ஸ்ரீலங்காப் படைப் புலனாய்வுத்துறை வரை நீண்டு செயற்படுவதை திட்டமிட்ட இக்கொலை நிரூபித்து நிற்கின்றது.

மக்களின் தொண்டனாக தமிழ்த் தேச விடுதலைக்காகவும் மனித உரிமை மேம்பாட்டிற்காகவும் அயராது உழைத்த இவரை இந்த இனவாத சக்திகள் மரணிக்கச் செய்திருக்கின்றன.

இந்த ஈவிரக்கமற்ற கொடூரக் கொலையினை நாம் வன்மையாகக் கண்டிகின்றோம்.

அன்னாருடைய மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம் - என்று உள்ளது.(க)

## வீதியோரம் படுத்திருந்தவருக்கு துப்பாக்கிச் சூடு

தென்மராட்சி,டிசெ.26

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்தார். இராணுவக் காவலரண் மீது நடத்தப்பட்ட கிரனேட் வீச்சையடுத்து படையினரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. அவ்வேளையில் வீதியோரம் படுத்திருந்த இவரது தொடைப்பகுதியில் துப்பாக்கி ரவை பாய்ந்து காயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

நுணாவில் கிழக்கைச் சேர்ந்த ஏ.பரமநாதன் (வயது 67) என்பவரே காயமடைந்தவராவார்.

இதேவேளை, குண்டுவெடிப்புச் சத்தம் கேட்டு வேகமாக செலுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் வளைவுகளில் திரும்புகையில் சறுக்கி வீழ்ந்ததில் இருவர் காயமடைந்தனர். நுணாவிலை சேர்ந்த செல்வன் (வயது 25), மீசாலையைச் சே ந்த த.சிறிவர்ணன் (வயது 20) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்த மூவரும் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஓ 117)

## புலிகளின் மீது குற்றச்சாட்டு சுமத்துகிறது படைத்தரப்பு

கொழும்பு,டிசெ.26

நூற்றுக்கணக்கான கிறிஸ்தவர்களுடன் கிறிஸ்மஸ் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த ஜோசப் பரராஜசிங்கம் எம்.பியை தமிழீழ விடுதலைப்புலிகளின் பிஸ்டல் குழுவைச் சேர்ந்தோரே கொடூரமான முறையில் சுட்டுக்கொலை செய்தனர்.

- இவ்வாறு இலங்கை அரசின் கூட்டு நடவடிக்கைத் தலைமையகம் நேற்று முற்பகல் விடுத்த அறிக்கையில் குற்றம் சுமத்தியிருக்கின்றது.

ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலையை ஒட்டி இலங்கை அரசு வெளியிட்ட அறிக்கையில் கூட இச்சம்பவத்துக்குப் புலிகள் மீது குற்றம் சுமத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக உள்நாட்டிலும்,சர்வதேச மட்டத்திலும் பெரும் பிரசாரங்களை முன்னெடுத்து வந்த - புலிகளின் தலைமைக்கு மிக நெருக்கமானவராகவும், வேண்டப்பட்டவராகவும் செயற்பட்டு வந்த-மறைவின் பின்னர், விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனினால் மாமனிதர் பட்டமளித்து கௌரவிக்கப்பட்ட-ஜோசப் பரராஜசிங்கத்தைப் புலிகளே கொன்றனர் என நேரடியாகக் குற்றம்சுமத்தி, கூட்டு நடவடிக்கைத் தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கை தமிழர்கள் தரப்பில் பெரும் விசனத்தையும்,, எரிச்சலையும், கோபத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது. (க)

## ஜோசப் எம்.பியின் இறுதிக்கிரியை விவரம் இன்று அறிவிக்கப்படும்

மட்டக்களப்பு,டிசெ.26

நேற்று அதிகாலை வேளையில் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் இன்று அறிவிக்கப்படவுள்ளன.

1934 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதி பிறந்த ஜோஸப் பரராஜ சிங்கத்திற்கு இரண்டு மகன்மாரும், ஒரு மகளும் உள்ளனர்.

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் தனது கல்வியை நிறைவு செய்த அவர் மட்டக்களப்பு கச்சேரியில் நில அளவையாளர் பணிக்காகச் சேர்ந்தார். அதேநேரம் தினபதியின் பகுதிநேர ஊடகவியலாளராகவும் பின்னர் வீரகேசரியின் மட்டக்களப்பு மாவட்ட செய்தியாளராகவும் அவர் கடமையாற்றினார்.

1956 ஆம் ஆண்டில் தமிழரசுக் கட்சியுடன் தன்னை இணைத்துக் கொண்ட ஜோஸப் பரராஜசிங்கம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஸ்தாபக உறுப்பினரானார். கூட்டணியின் செயற்குழு உறுப்பினராக பின்னர் நியமிக்கப்பட்ட அவர் கட்சியின் மட்டக்களப்பு கிளையின் இணைச் செயலாளராகவும் செயற்பட்டார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சாம் தம்பிமுத்துவின் மறைவையடுத்து 1990 ஆம் ஆண்டு அவர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டார். 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும், 2000 ஆம் ஆண்டின் தேர்தலிலும் அதிக வாக்குகளைப் பெற்று எம்.பியானார் ஜோசப் பரராஜசிங்கம்.

2004 ஆம் ஆண்டுத் தேர்தலில் கிழக்கில் நிலவிய அப்போதைய சூழ்நிலையால் நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட முடியாமல் போன அவர், பின்னர் தேசியப் பட்டியலில் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

ஆங்கிலத்தில் தேர்ச்சியுடைய ஜோசப் எம்.பி. பொதுநலவாய மற்றும் சார்க் நாடுகளின் நாடாளுமன்றக் குழு உறுப்பினராகவும் பதவிகளை வகித்திருக்கிறாரென்பது குறிப்பிடத்தக்கது. (க)

## வடமராட்சி கிழக்குப் பகுதியில் இன்று சுனாமி நினைவு நிகழ்வுகள்

வடமராட்சி கிழக்கு சுனாமி அனர்த்த திட்டமிடல் ஒழுங்கிணைப்புச் செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆழிப் பேரலையால் உயிரிழந்தவர்களின் ஓராண்டு நிறைவு நாள் நிகழ்வு இன்று காலை 8.50 மணியளவில் நினை வுச் சுடர் ஏற்றலுடன் ஆரம்பமாகின்றது.

முதலில் காலை 8.50 மணிக்கு உடுத்துறைப் பகுதியில் புதைக்கப்பட்டவர்களுடைய கல்லறைகளுக்கு அனர்த்த செயலணியினரும் வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியல்துறையினரும் இணைந்து நினைவுச் சுடர் ஏற்றி வழிபாடு செய்வர்.

தொடர்ந்து செம்பியன்பற்று பங்குத் தந்தை மற்றும் அப்பகுதி மக்களாலும் அமைக்கப்பட்ட நினைவுத் தூபி திறப்பு விழா இடம் பெறும். அதேநேரம் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உடுத்துறைப் பகுதியில் நினைவுத் தூபி அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெறும்.

முற்பகல் 11 மணி முதல் மருதங்கேணி புனர்வாழ்வு புனரமைப்பு மண்டபத்தில் நினைவஞ்சலி நிகழ்கள் நடைபெறும்.

நண்பகல் 12 மணிக்கு வடமராட்சி கிழக்கு அரசியல்துறையினர் மருதங்கேணிச் சந்தியில் அமைக்கவுள்ள நினைவுத் தூபிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெறும். (ஒ-6)

## சைவ ஆலயங்களில் விசேட வழிபாடு

யாழ்ப்பாணம், டிசெ.26

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் முகமாக இன்றைய நாளில் சகல சைவ ஆலயங்களிலும் விசேட பிரார்த்தனைகள் நடத்தும்படி சிவ பூமி அறக்கட்டளை நிதியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்ந்து ஓராண்டு பூர்த்தி இன்றாகும். அதனை முன்னிட்டு சிவபூமி அறக்கட்டளை சார்பாக செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெ விக்கப்பட்டுள்ளதாவது:-

ஆழிப்பேரலையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் உறவுகளுக்கு ஆறுதல் கூறும் நாளாக இந்நாளைக் கருதி இனிய ஆறுதல் வார்த்தைகளைக் கூறுங்கள். அந்த வார்த்தைகள் அவர்களைத் தைரியப்படுத்தும்.

ஆடம்பரங்கள் அற்ற நிலையில் இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நாம் அனைவரும் இணைந்து உதவிக்கரம் நீட்டுவோம். எல்லா சைவ ஆலயங்களில் இன்றைய நாளில் சிறப்பு பிரார்த்தனைகளை மேற்கொள்வதோடு, இயற்கை பற்றிய சிந்தனையை மக்களுக்கு தெளிவுபடுத்துகின்ற நிகழ்வுகளையும் ஏற்பாடு செய்யுங்கள்.

எத்தகைய இடர் வரினும் வழிபாடே ஒவ்வொருவருக்கும் துணை எனக் கொண்டு எங்களைவிட்டுப் பிரிந்த எம் உறவுகளுக்காக பிரார்த்தனை செய்வோமாக என்றுள்ளது.

(ஒ-6)

## சாவகச்சேரியில் பதற்றம் தொடர்கிறது

தென்மராட்சி,டிசெ.26

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற குண்டு வீச்சு மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் ஆகியவற்றையடுத்து சாவகச்சேரி நகர்ப் பகுதியில் பதற்றநிலை தொடர்கிறது.

கிறிஸ்மஸ், புதுவருடம் ஆகியவற்றையொட்டி வர்த்தக நிலையங்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை திறக்க அனுமதிக்கப்பட்ட போதிலும் ஓரிரு கடைகளே திறந்திருந்தன. சாவகச்சேரி சந்தையிலும் வியாபாரிகள் குறைவாகவே காணப்பட்டனர்.

நத்தார் ஆராதனைகள் நேற்று காலையில் தேவாலயங்களில் நடைபெ றன. வீதிகளில் மக்கள் நடமாட்டம் குறைந்திருந்தது.

இதேவேளை,

பாடசாலை மாணவர்களையும்அப்பாவிப் பொது மக்களையும் பலி கொடுப்பதற்கு ஏதேனும் ஒரு சக்தி முயற்சிக்குமானால் நாம் அமைதிகாக்க மாட்டோம் என்று குறிப்பிடப்பட்ட சுவரொட்டி பாதுகாப்புப் படையினரின் பெயரில் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் ஒட்டப்பட்டுள்ளது.

(ஓ 117)

## சுனாமி ஒலிப்பேழை வெளியீட்டு விழா ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.26

யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று திங்கட்கிழமை நடைபெற இருந்த ஆழிப்பேரலை தொடர்பான பாடல் ஒளிப்பேழை வெளியீட்டு விழா தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

இந்த வெளியீட்டு விழா எதிர்வரும் ஜனவரி மாத முற்பகுதியில் இடம்பெறும் என ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (ஒ-6)



நேற்றுமுன்தினம் இரவு அச்சுவேலிப் பகுதியிலும் ஈவினைப் பகுதியிலும் படுகொலையுண்டவர்களின் சடலங்களை படங்களில் காணலாம். (படங்கள்:பிரபா)

**உதயன்**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் -- 222 2030, 222 2083, 222 3837.

## தமிழ்த் தேசிய எழுச்சியின் குரல்வளையை நசிக்கும் முயற்சி

சமாதானத் தூதுவன் - அமைதி நாயகன் - இயேசு பிரான் பிறந்த தினம் - அவதார நேரம் - மட்டக்களப்பில் பக்தி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில் கொடூர பாதகம் அரங்கேறியிருக்கின்றது. அதுவும் புனிதமும், தெய்வ அமைதியும், பக்தியும் கமழும் தேவாலயத்துக்குள் வைத்து மக்கள் பிரதிநிதி ஒருவர் கிறிஸ்மஸ் வேளையில் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்.

தமிழர்களின் மற்றொரு ஜனநாயகக் குரல் வேட்டுகள் மூலம் அடக்கப்பட்டிருக்கின்றது. தமிழ் மக்களின் நியாயமான ஜனநாயகக் குரலை அல்ல, ஆயுதக் குரலையே செவிமடுப்பதற்குத்தான் தயாராக இருக்கிறான் என்பதை எதிரி மீண்டும் ஒரு தடவை பலமாக எடுத்தியம்பியிருக்கின்றான்.

அஹிம்சை வழியிலான தமிழர்களின் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொண்ட மூத்த தலைவர்களுள் எஞ்சியிருந்த ஓரிருவரில் ஜோசப் பரராஜசிங்கம் முக்கியமானவர்.

ஒரு பத்திரிகையாளராகத் தனது பொது வாழ்வை ஆரம்பித்த ஜோசப் பரராஜசிங்கம், தந்தை செல்வாவின் கொள்கைகளால் கவரப்பட்டு, அவரது பாசறையில் இணைந்து அரசியலில் வளர்ந்தவர். கொண்ட கொள்கையில் தளராத பற்றுறுதியுடனும் அர்ப்பணிப்புடனும் விளங்கிய ஜோசப் பரராஜசிங்கத்தின் மனவுறுதியைக் கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் மக்களும் சர்வதேசத்தவரும் அடையாளம் கண்டனர்.

கருணா என்ற தனிமனிதப் பிறழ்வு காரணமாக இலங்கைத் தீவில் தமிழ்த் தேசியத்தின் எதிர்காலத்துக்கு பேராபத்து ஏற்பட்டபோது கிழக்கில் தனித்து நின்று அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுத்த அரசியல் போராளி ஜோசப் பரராஜசிங்கம். தமிழர் தாயகத்தைக் கூறுபோடும், இன விரோதிகளின் திட்டத்துக்கு - வெறிக் கூச்சலுக்கு - கடைசி வரை இடங்கொடாது, தமது உறுதியில் சிறிதுகூட சலனம் காட்டாது, மிகத் தெளிவாகவும் திடமாகவும் செயற்பட்டு, தனது கொள்கைப்பற்றின் ஆழத்தை அப்போது சகலரது மனதிலும் பதித்தவர் அவர்.

பெரும் உயிராபத்துகளுக்கு மத்தியிலும், தந்தை செல்வா முன்னெடுத்த விடுதலைப் போராட்டத்தை, தேசியத் தலைவர் பிரபாகரனின் வழி தடத்தில் வெற்றிப்பாதையில் இட்டுச் செல்வதற்காக தனது உயிர் பிரியும்வரை ஓயாமல் பணி புரிந்தவர் ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி.

தமிழர் தாயகத்தில் மட்டுமல்லாமல், இலங்கைத் தீவில் மட்டுமல்லாமல், சர்வதேச ரீதியிலும் தமிழர் தம் போராட்டத்தின் நியாயத்தை முரசறைவதில் நிகரின்றி - ஓய்வு, ஒழிச்சலின்றி - பணியாற்றிய மூத்த தமிழ்த் தலைவர் அவர்.

மனித உரிமைகளைப் பேணுவதிலும், அதற்காகக் குரல் எழுப்புவதிலும் தேசிய, சர்வதேச மட்டத்தில் அரும்பணியாற்றியவர். தமிழர் தாயகத்தில் தனியான மனித உரிமைகள் செயலகம் ஒன்றை உருவாக்குவதில் அவரின் பங்களிப்பு கணிசமாக அமைந்தது.

கிறிஸ்மஸ் வேளையில் - பிரபலமான தேவாலயத்துக்குள் - ஆராதனையில் ஈடுபட்டிருந்த ஒருவர் ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றார். அதுவும் இலங்கை அரசுப்படைகளின் முழுக் கட்டுப்பாட்டில் உள்ள மட்டக்களப்பு நகரத்தின் மத்தியில், உயர்பாதுகாப்பு வலயத்துக்குள், ஆயர் ஒருவர் கிறிஸ்மஸ் வழிபாடுகளை நடத்திக் கொண்டிருக்கையில், வலு சாவகாசமாக ஆயுததாரிகள் வந்து இந்தப் படுகொலையை நிகழ்த்தி விட்டுச் சென்றிருக்கின்றார்கள்.

தமிழர்களின் ஜனநாயகக் குரலுக்கு சாவு மணி அடிக்கும் இத்தகைய கொலைகளின் பின்னணியில் இருக்கும் அரூபக் கரங்கள் எவை என்பது உலகுக்கு நன்கு தெரியும்.

விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் அரசியல், வாழ்வியல் உரிமைகளுக்காக நடத்தும் சுதந்திரப் போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் விதத்தில் தாயகத்தில் வெளிப்படுகின்ற ஜனநாயக வழி எழுச்சிகளைத் தனது ஆயுத வலுக்கொண்டு அடக்கி, ஒடுக்கும் தென்னிலங்கைக் கைங்கரியம் இப்போது முழு வீச்சாக ஆரம்பிக்கப்பட்டிருப்பதை கடந்த சில நாள்களாக இப்பத்தியில் சுட்டிக் காட்டி வந்தோம்.

கடந்த சில நாள்களாக வடக்கில் அரங்கேறிய - வெகுஜன எழுச்சியை அடக்கும் - பேரினவாத அட்டகாசம், இப்போது கிழக்குக்கும் விஸ்தரிக்கப்பட்டிருப்பதை இந்தச் சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது.

போர் நிறுத்த ஒப்பந்த விதிகளுக்கு மாறாக ஒட்டுப்படைகளை வைத்துக் கொண்டு தமிழ்த் தேசியத்துக்கு எதிரான நாசகார வேலைகளைப் புரிந்து வரும் தென்னிலங்கைப் பேரினவாதம், இந்தப் படுகொலைக்கான பொறுப்பையும் 'இனந் தெரியாத ஆயுதக் குழு'வின் கணக்கில் சுமத்தித் தான் தப்பிக் கொள்ள எத்தனிக்கும்.

வடக்கு - கிழக்கில் - தமிழர் தாயகத்தில் - ஜனநாயக வழியில் தமது கருத்தை வெளிப்படுத்த விடாது தமிழ் மக்களின் வெகுஜன எழுச்சிக்கு எதிராக அடக்குவாரத்தை - ஒடுக்குமுறையை - தென்னிலங்கை அரசு கட்டவிழ்த்து விட்டிருக்கையில், அதைப் பார்க்காமல் - பாராமுகமாக - கண்டும் காணாமலும் - நடந்து கொள்ளும் சர்வதேச சமூகம், இந்தக் கொடூரக் கொலையை - அதுவும் தேவாலயத்துக்குள் வழிபாடு செய்து கொண்டிருந்த ஜனநாயக அரசியல் தலைவரை அங்கு வைத்தே சுட்டுப் படுகொலை செய்த கொடூரத்தை - எப்படிக் கையாளப் போகின்றது?

மக்களைத் தேர்தலில் சந்திக்காமலேயே பின் கதவால் அரசியலுக்குள் நுழைந்து, மக்களைச் சந்திக்காமலே 'மக்கள் தலைவராகி', தனது இனத் தேசியத்தைக் காட்டிக் கொடுத்த லக்ஷ்மன் கதிர்காமரை பெரும் பாதுகாப்புக்கு மத்தியில் குளித்துக் கொண்டிருந்த இடத்தில் வைத்துச் சுட்டுக் கொன்றதற்காக அளவுக்கு மீறித் துள்ளிக் குதித்த சர்வதேச சமூகம் -

மக்கள் தலைவனாக உயர்ந்து, தனது தேசியத்துக்காக நேர்மையுடன் பணியாற்றி, அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் அஞ்சாமல் சேவைபுரிந்து, தேவாலயத்துக்குள் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டவரான ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. விடயத்தில் எப்படி நடந்து கொள்ளப் போகின்றது?

# இராணுவ அராஜகங்களுக்கு முடிவைக் காணவும் இயல்பு வாழ்வை ஏற்படுத்தவுமே பணிப்புறக்கணிப்பு

### ழைப்புக் கோருகின்றது தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.26

குடாநாட்டில் தொடரும் இராணுவ அராஜகங்களுக்கு முற்றுப் புள்ளி காணவும், மக்களின் இயல்பு வாழ்வை உறுதிப்படுத்தவுமே பணிப்புறக்கணிப்பு. எனவே, சம்பந்தப்பட்ட சகலரும் இந்தப் பணிப்புறக்கணிப்புக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

- இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ள தமிழ்த் தேசிய தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பு.

அண்மைக்காலமாக, குடாநாட்டில் பொதுமக்கள் மீது படையினர் மேற்கொண்டு வரும் கெடுபிடிகள், தாக்குதல்கள் மற்றும் உயிரிழப்புகள் குறித்து விவரமாக இந்த அறிக்கையில் பட்டியலிடப்பட்டுள்ளன.

அந்த அறிக்கையில் -

தாமே உறுதிப்படுத்திய போர்நிறுத்த உடன்படிக்கையை முழுமையாக அமுலாக்காமல் விடுவது ஸ்ரீலங்கா அரசின் வஞ்சகமான தந்திரமாகும். அத்துடன் பேரினவாதத்திற்கு ஏற்ற வகையில் இராணுவ நோக்கில் தமக்குச் சாதகமாக உடன்படிக்கையை வளைத்து விடவும் திட்டமிடப்படுகிறது. போர்நிறுத்த உடன்படிக்கையின் அடிநாதமாக விளங்குவது மக்களது இயல்பு வாழ்க்கையே, இதனை எவ்வகையிலும் சிதைத்து தமிழ் மக்கள் மீது வன்முறையையும், அச்சுறுத்தலையும் பிரயோகிப்பது தமிழ் மக்கள் மீதான போரின் முதற்கட்டமாகும்.

பல்கலைக்கழக சூழலில் படையினர் குவிக்கப்பட்டு, பொது மக்களும் மாணவர்களும் தாக்கப்படுவதை கண்டித்து போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவிடம் முறைப்பாடு செய்ய அமைதியான முறையில் ஊர்வலத்தில் சென்ற யாழ்.பல்கலைக்கழக உபவேந்தர், பீடாதிபதிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள், மாணவர்கள் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் நடத்தப்பட்டது. படையினரால் துப்பாக்கிச் சூடும் நடத்தப்பட்டுள்ளது.

இதே நாளன்று, இனவெறி கொண்ட சிங்களத் தேசப்பற்றாளர் இயக்கம், விடுதலைப் புலிகளை ஐரோப்பிய ஒன்றியம் தடைசெய்ய வேண்டும் என்று கூறி கொழும்பில் நடத்திய ஊர்வலத்திற்கு படையினர் ஒத்துழைப்பையும் பாதுகாப்பினையும் வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதற்கு அடுத்த நாள் படையினரும், பொலீஸாரும் பல்கலைக்கழகத்திற்குள் அத்துமீறி நுழைந்து விரிவுரையாளர்கள், ஊழியர்கள், மாணவர்கள் மீது தாக்குதலை நடத்தியதுடன் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

இதேவேளை, யாழ்.குடாநாடெங்கும் மக்களது சுதந்திரமான நடமாட்டத்திற்கு இடையூறாக வழிமறிப்புகள், வீதித்தடைகள், உடற்சோதனை, தன்னிச்சையான கைதுகள், கண்மூடித்தனமான தாக்குதல்கள், துப்பாக்கிச் சூடுகள், வர்த்தக நிலையங்களை உடைத்துக் கொள்ளையடித்தல் என்பன தொடர்கதையாகவுள்ளன.

எனவே, ஸ்ரீலங்கா அரசும் அதன் ஏவலாளர்களுமாகிய இராணுவத்தினரின் இத்தகைய சமூகவிரோதச் செயற்பாடுகள் அனைத்துலக சமூகத்தின்முன் அம்பலப்படுத்தப்படவேண்டியவையாகும். மக்களது இயல்பு வாழ்க்கை குறித்தோ அல்லது போர்நிறுத்த உடன்படிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்துவது குறித்தோ -

முடங்கிவிட்ட சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது குறித்தோ ஸ்ரீலங்கா அரசுக்கு கிஞ்சித்தேனும் அக்கறையில்லை என்பதை அனைத்துலகத்தினது கவனத்திற்கும் கொண்டுவர வேண்டிய தேவை தமிழ் மக்களாகிய எமக்கு உள்ளது.

தமிழ் மக்கள் பாதுகாப்புடனும் கௌரவத்துடனும், சுதந்திரமாகவும், தமது வாழ்க்கையை முன்னெடுப்பதற்கு ஸ்ரீலங்கா பேரினவாதம் தடையாக உள்ளது என்பதை பாதிக்கப்படுகின்ற தமிழ் மக்களாகிய நாமே வெளிக்கொணரவேண்டும் என்ற பொறுப்பு எமக்கு உண்டு.

சிங்கள படைகளின் அராஜகங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து இயல்பு வாழ்க்கையையும் மனித கௌரவத்தையும் வென்றெடுக்க வேண்டும். எமது பாதுகாப்பை உறுதி செய்யும் வரை இயல்பு வாழ்க்கைக்கு உத்தரவாதம் வழங்கும் வரை இன்று திங்கட்கிழமை முதல் அரச பணியாளர்களாகிய நாம் பணிப்புறக்கணிப்பினை தொடர்சியாக மேற்கொள்வோம். உடனடி மனிதாபிமானப் பணிகள் தவிர்ந்த அனைத்துப் பணிகளையும் புறக்கணிப்போம். இன்று முதல் பணிப்புறக்கணிப்பினை தொடர்ச்சியாக செய்வது என்ற தீர்மானத்தை யாழ்.மாவட்டத்தில் இயங்குகின்ற தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பாகிய நாம் எடுத்துள்ளோம். இப் பணிப்புறக்கணிப்பிற்கான ஒத்துழைப்பை அரச பணியாளர்கள் மற்றும் அனைவரும் வழங்க வேண்டும் என்றும் கோருகின்றோம்- என்றுள்ளது.

(எ)

# ஜோசப் படுகொலைக்குக் காரணமானோர் நீதியின் முன்பாக நிறுத்தப்படவேண்டும்

### வவுனியா வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் வலியுறுத்து

வவுனியா, டிசெ.26

நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலைக்குக் காரணமானவர்களை அரசு நீதியின் முன் நிறுத்தவேண்டும்.

- இவ்வாறு கோரியுள்ளது வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம்.

தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலையைக் கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் -

25.12.2005 அன்று நள்ளிரவு வேளையில் கோரத்தனமான முறையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலையை மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தமிழ்த்தேசிய ஆன்மாவான விடுதலைப் பயணத்தில் இருபது வருடங்களுக்கு மேலாக குரல் கொடுத்த ஒப்பற்ற தமிழ்த் தேசிய அரசியல்வாதி ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள். சமாதானத்தின் தூதுவனாக மண்ணையும் மக்களையும் மீட்க வந்த மீட்பர் யேசு பிரான் பிறந்த நாளில் நற்செய்தி ஆராதனையின் போது இவர் படுகொலை செய்யப்பட்ட அநாகரிகமான செயலை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்தப்படுபாதகமான படுகொலைச் செயலை ஸ்ரீலங்கா அரசும், ஸ்ரீலங்கா இராணுவமும் அதனோடு சேர்ந்தியங்கும் ஒட்டுக் குழுக்களுமே பொறுப்பேற்கவேண்டும். தமிழர்கள் யாவரும் பொறுமையிழந்து பொறுமையின் விளிம்பிற்கே சென்றுவிட்டார்கள். ஸ்ரீலங்கா அரசே, தமிழர்கள் பொறுமைக்கும் எல்லை உண்டு. இதனைக் கடந்த நிலையிலும் நாம் சமாதான புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் காக்க விரும்புகிறோம்.

ஸ்ரீலங்கா அரசே, இந்தப் படுபாதகச் செயலுக்கு காரணமானவர்களை நீதியின் முன் நிறுத்தவேண்டும். சர்வதேசமே, சமாதானம் பற்றியும் அதன் தேவை பற்றியும் பேசிப் பயனில்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

ஸ்ரீலங்கா அரசின் படுமோசமான, ஈனத்தனமான, ஈவிரக்கமற்ற, இழிவான, காட்டுமிராண்டித்தனமான, கையாலாகாத்தனத்தை வவுனியா வாழ் தமிழ் பேசும் மக்கள் சார்பாக வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் மிக வன்மையாகக் கண்டிக்கின்றது.

தமிழ்த் தேசப்பற்றுள்ள ஓர் ஆன்மாவின் படுகொலை மரணத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம் - என்று அதில் உள்ளது. (எ)

# மயூரணி கொலை வழக்கில் பாலபிரசன்னாவுக்கு விடுதலை

மதுரை,டிசெ.26

திருகோணமலையைச் சேர்ந்த மாணவி மயூரணி மதுரையில் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் 24 வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட திருகோணமலை மாணவன் பாலபிரசன்னாவை மேன்முறையீட்டில் மதுரை உயர்நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பளித்தது. திருகோணமலையைச் சேர்ந்த தியாகராஜன் என்பவரது மகள் மயூரணி மதுரையில் உள்ள அம்பிகா கல்லூரியில் படித்து வந்தார். அந்தக் கல்லூரியின் உரிமையாளரான சோலைமலைத் தேவரின் வீட்டில் அவர் தங்கியிருந்தார். இந்நிலையில் வீட்டுக்குள் மயூரணி மர்மமான முறையில் கொலைசெய்யப்பட்டார்.

இதுதொடர்பாக சோலைமலைத் தேவர், அவரது மனைவி, மற்றொரு இலங்கை மாணவர் பாலபிரசன்னா ஆகியோர் கைதுசெய்யப்பட்டனர்.

பாலபிரசன்னா மூலம் மயூரணியைக் கொலை செய்வித்த சோலைமலைத் தேவர்தான் என்றும் புகார் எழுந்தது. முதலில் தேவர் மீதும், அவரது வீட்டு வேலையாள்கள் மீதும் கைது நடவடிக்கை எடுத்த பொலீஸார் பின்னர் தேவரைக் காப்பாற்றும் வேலையில் இறங்கினர் எனக் கூறப்பட்டது.

இந்நிலையில் இந்தக் கொலை வழக்கு விசாரணை மதுரை செஷன்ஸ் நீதிமன்றத்தில் நடந்தது. இதனை விசாரித்த நீதிமன்றம் பாலபிரசன்னாவைத் தவிர மற்ற அனைவரையும் விடுதலை செய்தது. பாலபிரசன்னாவுக்கு 24 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இதற்கிடையே, இந்த விவகாரத்தில் உண்மையை மறைக்கவும், உண்மைக் குற்றவாளிகளைத் தப்ப வைக்கவும் பொலீஸார் முயல்கின்றனர் எனக் கூறி மயூரணியின் மாமன் மோகன்தாஸ் வழக்குத் தொடர்ந்தார். விசாரணையை சி.பி.ஐ.க்கு மாற்றவும் மோகன்தாஸ் கோரியிருந்தார்.

அதேபோல, தனக்கு விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து பாலபிரசன்னா மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் மேன்முறையீடு செய்தார். இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் மிஸ்ரா, ராமலிங்கம் ஆகியோர் அடங்கிய ஆயம் கடந்த வெள்ளியன்று பரபரப்புத் தீர்ப்பை அளித்தது.

பாலபிரசன்னாவுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை ரத்து செய்து அவரை விடுலை செய்கிறார்கள் என நீதிபதிகள் தங்களது தீர்ப்பில் தெரிவித்துள்ளனர்.

**நாளை**

மார்கழி 12
செவ்வாய்க்கிழமை
27.12.2005
திதி: ஏகாதசி
பிற்பகல்: 1.36 வரை
நட்சத்திரம் : சுவாதி
காலை : 07.02 வரை
சுபநேரம் : 10.57 - 12.27
ராகுகாலம் : 03.27 - 04.57
(யாவும் பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

மனித சுதந்திரத்தை பறித்து நன்நடத்தையையும் ஊக்கத்தையும் உண்டாக்கமுடியாது.
-ஆபிரகாம் லிங்கன்.

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 740 |
| திகதி | 23-12-2005 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு

செல்லுபடியாகும் தொடர் இல. 5884784-5899066

லக்கினம் கடகம்

வெற்றி இலக்கங்கள்

**04 24 38 41**

ஜக்பொட் பரிசு ரூபா. 52,04,050/- வெல்லப்படவில்லை

இந்த செவ்வாய்க்கிழமை ரூபா. 55,60,350/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,19,097 | 10/- | 31,90,970/- |
| 2.இலக்கங்கள் | 29,272 | 20/- | 5,85,440/- |
| 1.இல லக்கினம் | 29,078 | 30/- | 8,72,340/- |
| 2.இல லக்கினம் | 2,685 | 100/- | 2,68,500/- |
| 3.இலக்கங்கள் | 763 | 500/- | 3,81,500/- |
| 3.இல லக்கினம் | 82 | 5,000/- | 4,10,000/- |
| 4.இலக்கங்கள் | 05 | 1,00,000/- | 5,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 52,04,050/- | - |
| | | மொத்தம் | 62,08,750/- |
| முச்சக்கர வண்டி | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 72,61,000/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 72,61,000/- தொடர் இல. 4959992 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2005 டிசம்பர் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கொழும்பு | 5896056-4-16 |
| குருநாகல் | 5887370-7-33 |
| கம்பஹா | 5896189-3-77 |
| மொனராகலை | 5889972-9-50 |
| கொழும்பு | 5888967-7-11 |

## 24.12.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 300787376 இலிருந்து 300802881 வரை

சீட்டிழுப்பு இல. 1670

வெற்றி எண்கள்

**02 04 14 48** சுப்பர் எண் **11**

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 43,42,150/- வெல்லப்பட்டுள்ளது

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 43,42,150/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 22 | 5,000/- | 1,10,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 419 | 1,000/- | 4,19,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,331 | 500/- | 6,65,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 20,306 | 40/- | 8,12,240/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 19,332 | 20/- | 3,86,640/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,87,608 | 10/- | 28,76,080/- |
| | | மொத்தம் | 72,69,460/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம்,பைசிக்கிள் | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 77,69,460/- |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 51,10,990/-

தொடர் இல. 200848857 க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுக்கள் 2005 டிசம்பர் 28 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகைகள், தையல் இயந்திரம் மற்றும் பைசிக்கிள் அடங்கிய பரிசு முறையை வென்றெடுத்த 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| திருகோணமலை | 300791138-2-56 |
| பதுளை | 300788362-0-23 |
| பொலன்னறுவை | 300790027-2-97 |
| கொழும்பு | 300787541-8-34 |
| கண்டி | 300798609-1-38 |

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

# மரண அறிவித்தல்

## கிருஷ்ணன் விமலேஸ்வரன் (செல்வம்)



தவசிகுளம், கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணன் விமலேஸ்வரன் அவர்கள் 24-12-2005 சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் கிருஷ்ணன் - செல்லம்மா தம்பதியரின் அன்புமகனும் வித்தியாதரனின் பாச மிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26-12-2005) திங் கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கொடிகாமம் ஈச்சங்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தவசிக்குளம்,
கொடிகாமம் (44625)(16-46-11)

தகவல்:
-குடும்பத்தினர்.

# சுனாமியில் உயிரிழந்த 59 பேர் நினைவாக நினைவுத் தூபி திறப்பு

வலி.தென்மேற்கு,டிசெ.26

ஆழிப்பேரலை அனர்த்தத்தின்போது முல்லைத்தீவு, செம்பியன்பற்று, தாழையடி ஆகிய பகுதிகளில் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது பலியான மாதகல் பகுதியைச் சேர்ந்த 59 பேரின் ஞாபகார்த்தமாக மாதகல் கத்தோலிக்க சேமக் காலை காணியில் தூபி ஒன்று நிர்மாணிக்கப் பட்டுள்ளது.

இந்தத் தூபி ஆழிப்பேரலை அனர்த்தத்தின் ஒரு வருட நினைவுத் தினமான இன்று திங்கட்கிழமை முற்பகல் திறந்து வைக்கப்படவுள்ளது.

உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் பிரார்த்தனையும் அங்கு நடைபெறவிருப்பதாகத் தெரிவிக்கப் பட்டது. (எ-135)

## கடற்றொழிலாளர் சங்க ஒன்றிணைப்புக் கூட்டம்

வலி.தென்மேற்கு,டிசெ.26

மாதகல் பகுதியைச் சேர்ந்த ஆறு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களை ஒன்றிணைத்து ஒரு சங்கமாக உருவாக்கும் பொதுக் கூட்டம் எதிர்வரும் 28ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மாதகல் புனித தோமையார் கடற்றொழிலாளர் கூட்டுவுச் சங்கம், மாதகல் புனித சூசையப்பர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் , மாதகல் லூர்த்துமேரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், மாதகல் துறைமுக விநாயகர் கடற்றொழிலார் கூட்டுறவுச் சங்கம், மாதகல் உதயதாரகை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், மாதகல் இராஜ இராஜேஸ்வரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகிய ஆறு சங்கங்களே இவ்வாறு ஒன்றிணைக்கப்படவுள்ளன.

இதற்கான புதிய நிர்வாகசபைத் தெரிவும் நடைபெறவுள்ளதாக வலி.தென்மேற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினர் தெரிவித்தனர். (எ-135)

## வலி.தென்மேற்கில் அமைதியான முறையில் நத்தார் கொண்டாட்டம்

வலி.தென்மேற்கு,டிசெ.26

வலி.தென்மேற்குப் பகுதியில் இன்று நத்தார் பண்டிகை மிகவும் அமைதியான முறையில் அனுஷ்டிக்கப்பட்டது.

மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயம், பண்டத்தரிப்பு புனித பத்திமா மாதா ஆலயம், சில்லாலை புனித கதிரை மாதா ஆலயம் ஆகியன உட்பட மற்றும் பல கிறிஸ்தவ ஆலயங்களில் நத்தாரை முன்னிட்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை விசேட ஆராதனையும் பூசைகளும் நடைபெற்றன.

பட்டாசு வெடிகள் ஆங்காங்கே குறைந்தளவில் வெடிக்க வைக்கப்பட்டன. பொதுவாக அமைதியான முறையில் இம் முறை நத்தார் பண்டிகை கொண்டாடப்பட்டது.

இரவு கறோல் இன்னிசை நிகழ்வுகளும் மிகவும் குறைவாகவே இப்பகுதியில் நடைபெற்றன. (எ-135)

# ஓராண்டு நினைவஞ்சலி



உதிர்வு:
2004.12.26

கிறிஸ்ரீன் அபிஷா
மலர்வு:1998.02.21

கிரேஸ் வர்ஷா
மலர்வு: 2004.11.27

*நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாள்களாய் நிலைத்திருப்பேன். (சங்,23:61)*

நவாலி தெற்கு,
மானிப்பாய். (44627)

R.ஜெபராஜா குடும்பத்தினர்.

# பன்னிரு திங்கள் பரிதவிப்புடன் ...



மண் மகிழ 1983 07 20

கண்நெகிழ 2004 12 26

செல்வன்
## இராஜேந்திரன் நிஷாந்தன்

அலைகடலில் அள்ளுண்டு
அணையாத் தீபமாகிவிட்ட
விலையில்லா மாணிக்கமே!
நிறைந்து போன உன்நினைவில்
நிலைதடுமாறியே நாம்
நித்தமும் தவிக்கின்றோம்.
உளம் உன் நினைவை மறந்திடுமோ?
கண்களில் கவலைத்துளி காய்ந்திடுமோ?
மதிகொண்டு வந்திடினும்
விதிதனை வென்றிடுமோ?
கண்ணீரைக் காணிக்கையாக்கி
உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்...

"விக்னபவனம்"
காளிகோயிலடி, மல்லாகம். (44489)

குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

## செல்வி குணசேகரம் வைஷ்ணவி

[தி/ மெதடிஸ்த பெண்கள் கல்லூரி 2006/ கலைப்பிரிவு மாணவி]

தாயின் மடியில் : 01.10.1987

கடல் அன்னையின் பிடியில் : 26.12.2004



பாசத்தை எம்முடன் பகிர்ந்து எம்மை
பரிதவிக்க விட்டு நீ சென்று பன்னிரண்டு
திங்கள் கடந்ததே - வைஷா
நீ மறைந்தாலும் உன் நினைவுகள்
எங்கள் விழியின் ஓரத்தில் வழியும்
ஈரத்தில் தவிக்க வைக்கிறதே - வைஷா
உன் இளமையின் மரணம் எங்கள் மனங்களின்
மாறாத வடுக்களாய் மருளச் செய்கின்றனவே - வைஷா
திருமலை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியில்
களிப்புடனே நீ கலைப்பிரிவில் கற்கையில்
ஆழிப்பேரலையில் அள்ளுண்டு போனாயே
கல்விப் பராயத்தில் உன்னை காலன் கொண்டு
சென்றதை எம்மை சொல்லி புரியா வேதனையில்
ஆழ்த்தியதே வைஷா

உன் ஆத்ம சாந்திக்காகவும்,
உன்னுடன் அன்றையதினம் உயிர் நீத்த
மக்களுக்காகவும் எல்லாம் வல்ல
இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

இ.குணசேகரம் (ஜீவன்)
நீர்ப்பாசனத் திணைக்களம்
வில்சன் வீதி,
கிளிநொச்சி.

(C/47034)

என்றும் உன் நினைவுடன்:
குடும்பத்தினர்,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்

# ஆழிப்பேரலை ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு மருதங்கேணி ஆஸ்பத்திரியில் மருத்துவ முகாம்

## பல நூற்றுக்கணக்கானோர் பங்கேற்பு

குருநகர்,டிசெ.26

ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டு ஒரு வருடம் பூர்த்தியானதை முன்னிட்டு யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட மருத்துவ முகாம் மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையில் கடந்த வெள்ளியன்று நடைபெற்றது.

இந்த மருத்துவ முகாமின் ஆரம்ப வைபவம் அன்றையதினம் முற்பகல் 10 மணியளவில் மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையின் உள்நுழைவாயில் முன்றிலில் யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தாளையடி பங்குத் தந்தை வண.பிதா அன்ரனி அடிகளார் ஆசியுரை நிகழ்த்தினார். யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற பொது வைத்திய நிபுணர்கள், யாழ். சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள், மருதங்கேணிப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் த.கணேசமூர்த்தி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

பொதுவைத்திய நிபுணர் டாக்டர் திருமதி நாகேந்திரா, மகப்பேற்று மற்றும் பெண் நோயியல் வைத்திய நிபுணர்கள் டாக்டர் திருமதி பவானி, டாக்டர் குழந்தைவடிவேல், சிறுவர்களுக்கான வைத்தியத்துறை நிபுணர் டாக்டர் மருதயினார், உளநல மருத்தவ நிபுணர் பேராசிரியர் தயா சோமசுந்தரம், பல் வைத்திய நிபுணர்கள் டாக்டர் ஜெயராஜ், டாக்டர் நிரஞ்சன்குமார், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை உளநல மருத்துவ நிபுணர் டாக்டர் ரமேஸ் ஜெயக்குமார், யாழ். பிராந்திய மலேரியா தடுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் கே.ரி.சிவபாதம், யாழ். பிரதிமாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன் ஆகியோர் விசேடமாக இந்த மருத்துவ முகாமில் கலந்துகொண்டு நோயாளர்களுக்குத் தமது ஆலோசனைகளையும் மருத்துவ சிகிச்சைகளையும் வழங்கினர். சாந்திகம் உளவளத் துணையாளர்களும் இதில் கலந்துகொண்டனர்.

மலேரியாவுக்கான இரத்தப் பரிசோதனை, இரத்த அமுக்கம், நீரிழிவு நோயாளர்களுக்கான இரத்தப்பரிசோதனை, எக்ஸ்ரே மற்றும் ஸ்கானிங் சேவைகளும் இந்த மருத்துவ முகாமில் வழங்கப்பட்டன.

மேற்படி மருத்துவ முகாமில் கலந்துகொள்ளுமாறு மருதங்கேணி கிராமிய வைத்தியசாலைப் பொறுப்பு வைத்திய அதிகாரி பணிமனைமூலமும் மற்றும் யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிமனையின் பிரசாரப் பிரிவு வாகனம் மூலமும் மருதங்கேணிப் பிரதேச செயலர் பிரிவு மக்களுக்கு பொது அறிவித்தல்கள் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தன.

இதனால், பெரும் எண்ணிக்கையான நோயாளர்கள் இந்த மருத்துவ சேவையில் கலந்துகொண்டு தமது நோய்களுக்கான சிகிச்சைகளைப் பெற்றுக்கொண்டனர் என மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி திருமதி யூடி ரமேஸ் தெரிவித்தார்.

இந்த மருத்துவ முகாமில் கலந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து மருதங்கேணிக்குச் சென்ற வைத்திய நிபுணர்கள் மற்றும் யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலக ஊழியர்களுக்கான இலகு பயண நடைமுறைகளை முகமாலையிலுள்ள படையினரும், தமிழீழ விடுதலைப் புலிகளும் வழங்கிருந்தனர் (எ-51)

# இலங்கை நிலைமை; பிரதமருடன் வைகோ பேச்சு

[illegible]லி,டிசெ.26

இலங்கையின் வ[illegible]ழக்குப் பகுதிகளில் உருவாகி இருக்கு[illegible] நெருக்கடி நிலை தொடர்பாக மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செய[illegible]ளர் வைகோ இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்.

பிரதமரையும் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முஹர்ஜியையும் நேற்றுமுன்தினம் சந்தித்த வைகோ யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் மீது ஸ்ரீலங்காப் படைகள் நடத்திவரும் தாக்குதல்கள் பற்றிப் பேசியிருக்கிறார்.

புங்குடுதீவில் யுவதி ஒருவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொலைசெய்யப்பட்டமை, பல்கலைக்கழக பேரணி மீது நடத்தப்பட்ட தாக்குதல் உட்பட பல சம்பவங்களை வைகோ இந்தியத் தலைவர்களிடம் சுட்டிக்காட்டினார் என்று செய்திகள் தெரிவித்தன. (ஐ)

# கோப்பாயில் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக அஞ்சலி நிகழ்வுக்கு ஏற்பாடு

கோப்பாய்,டிசெ.26

கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் ஆழிப்பேரலை அனர்த்த முதலாமாண்டு நினைவு தின நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை கிராம அலுவலர் பிரிவு ரீதியாக நடைபெறவுள்ளன.

காலை நிகழ்வுகளில் 9.30 மணிக்கு இந்து, கிறிஸ்தவ, கத்தோலிக்க ஆலயங்களில் சமய நிகழ்வுகள் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வுகளில் 3 நிமிடம் பிரார்த்தனை, ஆத்மசாந்திப்பிரார்த்தனை, இறந்தவர்களுக்கான அஞ்சலி வாசகம் ஓதுதல் மற்றும் நினைவுரைகள் இடம்பெறும்.

மாலை 7 மணிக்கு சகல வீடுகளிலும் தீபங்கள், மெழுகுதிரிகள் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்துதல் இடம்பெறும். (எ-12)






நேற்றுமுன்தினம் மாலை யாழ். கோட்டைப் பகுதியில் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டவர்களையே படங்களில் காண்கிறீர்கள்.
படங்கள்: பிரபா, நேசன்.

# சண்டிலிப்பாயில் வீதி ரோந்து தீவிரம்

வலி.தென்.மேற்கு,டிசெ.26

மானிப்பாய், சண்டிலிப்பாய், ஆனைக் கோட்டை பிரதான வீதிகளில் இராணுவத்தினரின் வீதிரோந்து அதிகரித்துள்ளது.

இதேவேளை, பிரதான வீதிகளின் கரையோரங்களிலுள்ள மரக்கிளைகள் அவ்வவ்ப் பகுதிகளிலுள்ளவர்களால் வெட்டித் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

படையினர் விடுத்த அறிவுறுத்தலை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (எ-135)

# சுனாமியால் தாய்,தந்தையரை இழந்த சிறுவரின் கல்வி மேம்பாட்டுக்கு நிதியம்

ஆழிப்பேரலை அனர்த்தத்தின்போது தாய், தந்தை அல்லது இருவரையும் இழந்த பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிற்கு உதவி வழங்குவதற்கான நிதியம் ஒன்றை யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலக நலன்புரிச்சங்கம் ஆரம்பித்திருந்தது.

இதற்காக சேகரிக்கப்பட்ட சுமார் இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வங்கியில் வைப்பிலிடப்பட்டிருந்தது என்றும் -

இந்த நிதியத்திலிருந்து கிடைத்த வடியிலிருந்து ரூ.3 ஆயிரத்துக்கான காசோலை கடந்த வெள்ளியன்று மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையில் நடைபெற்ற பொது மருத்துவ முகாமின்போது மருதங்கேணிப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் க.கணேசமூர்த்தியிடம் யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரனால் கையளிக்கப்பட்டிருந்தது என்றும் - கூறப்பட்டது.

இது மருதங்கேணிப் பகுதியில் சுனாமி அனர்த்தத்தால் தாய், தந்தையரை இழந்த பிள்ளைகளுக்கான முதலாம் கட்டக் கொடுப்பனவு என யாழ். பிரதி மாகாண சுகா தார சேவைப் பணிப்பாளர் அலுவலக நலன்புரிச் சங்கம் தெரிவித்தது. (எ-51)

# வலி.வடக்குப் பிரதேச செயலக ஏற்பாட்டில் ஆழிப்பேரலை ஆத்மசாந்திப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம்,டிசெ.26

ஆழிப்பேரலை ஏற்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாவதை முன்னிட்டு அதில் சிக்கி உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்திக்காக ஏற்பாடு செய்யப்பட்ட விசேட பிரார்த்தனை இன்று முற்பகல் 10.30 மணிமுதல் தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி அம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழைப் பிரதேச செயலகம் இந்த ஆத்மசாந்திப்பிரார்த்தனையை ஏற்பாடு செய்துள்ளது.

ஆழிப்பேரலையில் சிக்கி உயிரிழந்தவர்களின் ஆத்மாசாந்தியடைய வேண்டி முற்பகல் 10.30 மணிமுதல் விசேட கூட்டுப் பிரார்த்தனை இடம்பெறும். தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு விசேட பூசை நடைபெறும்.

வலி.வடக்குப் பிரதேச மக்கள்அனைவரையும் இந்த விசேட பிரார்த்தனைகளில் கலந்துகொள்ளுமாறு வலி.வடக்குப் பிரதேச செயலர் க.முரளிதரன் கேட்டுள்ளார். (எ)

# மறக்கமுடியாத டிசெம்பர் 26 அம்மணமாய் அங்கு உடல்கள்

என்றும் போல் அன்று ஒருநாள்
பொழுது ஒன்று புலர்ந்து
கடலும் அமைதியாய் கரைவந்து
அலைமோதி இயல்பாய்க் கருமம் செய்ய

கடற்கரை என்பதால் காகங்களும்
கரையும் சத்தம் வழமைபோல
காற்றோடு ஓசை கேட்க என்றும்
போல் அந்தக் கடல் - எவரும் எதிர்பார்க்கவில்லை

சூரியனும் தன் உருவை மெல்லத் திறக்க
இயற்கையின் சீற்றத்தை
புயல், காற்று, வெள்ளப்பெருக்கு, பூகம்பம்
எரிமலை என்ற பெயரால் அறிந்தவர்களுக்கு

கடலே மலையாக மாறி
கண்முன்னால் எழுந்து வந்தசெய்தி
நம்பாமல் இருக்கமுடியவில்லை
சில நிமிடங்களிலேயே பெரும் மனித
பேரவலத்தை முடித்துவிட்ட திருப்தியில்
பொங்கும் கடல் அடங்கியது.

அள்ளிச் செல்லப்பட்டோர் போக
அங்கும் இங்குமாய் அம்மணமாய் உடல்கள்
சில நிமிடங்களில் தான் சிரித்தவர்களும்
கதைத்தவர்களும் மௌனித்துப்போயினர்

பேசிய வார்த்தைகளுடன் உதடுகள்
அசைவற்றுக் கிடந்தன
கண்கள் இறுதியாய்ப் பார்த்த
காட்சிகளுடன் மரணித்துப் போயின

தளிர்முதல் மரம்வரை
கருவில் இருப்போர் முதல்
காலம் முடிவோர் வரை
கடலோடு இரையாகினர்

அள்ளித்தந்த கடல் அரவணைத்துச் சென்றது
பனை முதல் தலை வரை பலி எடுத்துச் சென்றது
அந்தப் பொழுதுகள் இறந்து
மலரும் ஓராண்டு இன்று

ஓங்கி அறைகின்ற அழுகைகளும்
புலம்பல்களும் மீண்டும் காற்றிலே - அசைகின்றன
மவுனத்தின் திரைகள் கிழிக்கப்படுகின்றன
ஆறாமையும் துயரமும் மனங்களில் ரணமாய்

வசந்தத்தின் வாசல்களை அடியோடு
வருடிவிட்ட காலச்சுவட்டில்
கண்ணீருடன் உறவுகளின் நினைவுகள்
மீண்டுவந்து இதயங்களைப் பிழிகின்றன.

- ம.ஆன்சிலின்
மிருசுவில்.

# சொர்க்கத்தில் வயது ஒன்று...



மடியில் 1981.07.18

அலையினில் 2004.12.26

செல்வி மரியநாயகம் மேரிபியூலா

(இறுதியாண்டு தாதியர் பயிற்சிக் கல்லூரி மாணவி)



மடியில் 2001.05.02

செல்வன் ஜெகதீஸ்வரன் மினோமேனுஷன் (மேனு)

இயற்கையின் சீற்றத்திற்கு இலக்காகி - எம்மை
மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு
அலைகடலுடன் சங்கமித்து - இன்றுடன்
சொர்க்கத்தில் வயது ஒன்றாகினாலும்
மீளாத்துயில் கொண்ட - எம் கண்மணிகளின் நினைவு
எம் உயிர் உடலைவிட்டுப் பிரியும் வரை நீர்
நடந்த பாதைகளை நினைத்து வாடுகின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் உங்கள்
உயிரின் உறவுகள்...

முகவரி
ம.மரியநாயகம்,
மணற்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

தகவல்:
Dr.ம. ஒஸ்மன் சாள்ஸ்
T.P:0777222411

(44347)(51)

---

தேகத்தை விட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனே கூட இருக்க எனக்கு ஆசையுண்டு,
அது அதிக நன்மையாயிருக்கும் பிலிப்பியர் 1.23

# நீங்கா நினைவுகளுடன் ஓராண்டு

மண்ணுலக வாழ்வுக்காய்
26.01.2004



செல்வந்தா ஆகாஷ்

மண்ணுலக வாழ்வுக்காய்
09.06.1975



செல்வந்தா ஜெயரஞ்சினி
(டிலானி)



விண்ணுலக வாழ்வுக்காய்
26.12.2004

தீங்கு வராததற்கு முன்னே
நீதிமான் எடுத்துக் கொள்ளப்படுகின்றான்
என்பதைச் சிந்திப்பார் இல்லை.
நேர்மையாய் நடந்தவர்கள்
சமாதானத்திற்குள் பிரவேசித்து,
தங்கள் படுக்கைகளில் இளைப்பாறுகின்றார்கள்.
ஏசாயா 57.1.2

இல.135,
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுடன்:
தாய், சகோதரர்கள்.

---

# நீங்கா நினைவுடன் வருடம் ஒன்று



அன்னையின் மடியில் : 11.08.1983

கடலன்னை மடியில் : 26.12.2004

உனை நாம் பிரிந்து
மறைந்தது வருடம் ஒன்று
மறையா உன்
நினைவுகள் பசுமையாய்
என்றும் எம் மனதில்
சோகத்தின் சுமைகள்
பாரமாய் எம் இதயத்தில்
மாறாக் காயங்களாய்
வலிக்கிறதடா- பிரதீப்
இன்று உனை நாம்
பிரிந்தது போல்.

குடும்பத்தினர்.

## முருகேசு பிரதீப்

திதி: 26.12.2005

வே.தம்பிப்பிள்ளை,
'திருப்பதி'நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

## குடத்தனையில் இன்று வழிபாடு

ஆழிப்பேரலையில் பலியான மக்களுக்காக யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் அனுசரணையுடன் குடத்தனை தென்னிந்திய திருச்சபையில் ஓராண்டு நினைவு தினமான இன்று பிற்பகல் 3 மணிக்கு வழிபாடு நடைபெறவுள்ளது.

இந்த வழிபாடு தென்னிந்தியத் திருச்சபையின் முதன்மைப் பேராயர், ஆணையாளர் வண.பி. ஆர். நவேந்திரனின் தலைமையில் நடைபெறவுள்ளது.

வழிபாட்டில் இன, மத வேறுபாடின்றி அனைத்து மக்களையும் கலந்து கொள்ளுமாறு குடத்தனை தென்னிந்தியத் திருச்சபையின் குரு வண. ராஜன்றொகான் வேண்டு கோள் விடுத்துள்ளார். (3-78)

## காக்கைதீவில் குழுமோதல் நீடிப்பு

யாழ்ப்பணாம், டிசெ.26 காக்கைதீவு பழம்றோட் பகுதியில் கடந்த வெள்ளி இரு குழுக்களுக்கிடையில் இடம் பெற்ற மோதல் சம்பவங்கள் தொடர்ந்து இடம் பெறுகின்றன.

இருகுழுக்களைச் சேர்ந்தவர்கள் வேறு கிராம இளைஞர்களையுத் தம்மோடு ஒன்று சேர்த்து மோதலில் ஈடுபட்டனர் என்றுகூறப்படுகின்றது. (ஐ-14)

## ஓராண்டு நினைவு 2006




ஆழிப் பேரலையே! எங்கள்
அன்புச் செல்வங்களை- நீ
அள்ளிச் சென்று இன்றுடன்
ஆண்டொன்றானதுவே.
பெற்றவர் கரங்கள் பற்றி இழுக்கப்
பறித்துச் சென்றாயே பாழும் சுனாமியே!
பிஞ்சுப் பாலகரை என்ன செய்தாய்
செல்வங்களின் பிரிவுத்துயர்
தாங்காது கலங்கி நிற்கும்...

அப்பா: ஜெயவீரசிங்கம்,
அம்மா: ராதா,
மாமா, மாமி, பிள்ளைகள்,
பெரியப்பா, சித்தப்பாமார்,
அன்ரிமார், பிள்ளைகள்.

தகவல்:
அம்மம்மா ஐ. இந்திராணி

கோயிற் சந்தை வீதி,
கரவெட்டி மத்தி,
கரவெட்டி. (44294)

## ஓராண்டு நினைவலைகள்



திரு.திருமதி
### தேசிங்கராஜா இளவரசி
பிறப்பு:19.04.1974 பிறப்பு:19.12.1979
இறப்பு: 26.12.2004

வாழ்வில் இணைந்து வசந்த அரையாண்டு கழியுமுன்னே
புது மணத்தின் புன்னகையும் பூரிப்பும் மறையுமுன்னே
சுனாமிப் பேரலையால் காவுகொண்ட செல்வங்களே!
ஆழிப்பெருநீராய் அஞ்சலித்து விழிநீர் பெருக்குகிறோம்.

செல்வபவன்
கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை. (44291)

கி. நஞ்சலிங்கம்
குடும்பத்தினர்.

## நீங்காத நினைவுகளுடன் முதலாம் ஆண்டு நினைவலைகள்





| சிவபாலசுந்தரம் பாக்கியலட்சுமி | ஶ்ரீசங்கர் சுலக்ஜனா | சந்திரசேகரம் அன்னகேஸ்வரி |
| --- | --- | --- |
| அன்னையின் மடியில் | அன்னையின் மடியில் | அன்னையின் மடியில் |
| 03.08.1960 | 03.05.2002 | 30.05.1964 |

ஆழியின் பிடியில்: 26.12.2004

அலைவீசும் கடலோரம் அழகாக வீடமைத்து
அன்புடனும் பண்புடனும் நாம் வாழ்ந்த வாழ்வை
அரவணைத்து அன்பு காட்டிய தாயே
எப்படியம்மா எமை விட்டுப் பிரிய முடிந்தது
நெஞ்சுருகித் தவிக்கும் உறவுகள்
எம் குரல் கேட்கிறதா உங்களுக்கு
முதல் நாளும் முழுநிலா முற்றத்தில் ஒளிவீச

முத்தான கதைகள் பேசி முறைப்புடன் உறவாடினீர்களே
அக்கா தங்கை அன்புப்பிணைப்பில் பேர்த்தியையும் இணைத்தீரே
முடிந்திடுமா உங்களை மறக்க முடியவில்லையே -எம்மால்
ஆண்டொன்று சென்றாலும் ஆறவில்லை
உங்களைப் பிரிந்த சோகம்
அழியாது எம்மனங்களில் அழகாக வாழ்கின்றீர்கள்

தகவல்:
ச.அகிலன்(ஜேர்மனி),
சி.அருள் (லண்டன்). (43826)

அனர்த்தத்தில் அறியாத உங்கள் நினைவுகளுடன்...
குடும்பத்தினர்
(மாமுனை, செம்பியன்பற்று).

## ஓராண்டு நினைவு




செல்வி தனுசியா கொன்சன்ரைன்

ஆழிப்பேரலையில் அகாலமரணமடைந்த தேசிய கல்வியியற் கல்லூரி முதிழ்நிலை உள்ளகப் பயிற்சி ஆசிரியையான செல்வி தனுசியா கொன்சன்ரைன் அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்
யா/ தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
(C/46879)

## ஆழிப்பேரலையில் ஆகுதியாகிய எம் அன்புச் செல்வங்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 14 - 04 - 1988




சுனாமியின் பிடியில் 26 - 12 - 2004

### செல்வன் விமலநாதன் தர்சன் (யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் 2004 O/L)

மு.பரமானந்தன், பி.ராம்குமார், இ.தயாபரன், அ.யதீசன், அ.காங்கேசன், மு.அற்புததேவன்

திதி: 13.01.2006

ஆசைக்கொரு தம்பியென்று
பாசமழை பொழிந்தோமே!
தலை காப்பாய் நீயென்று
தலை நிமிர்ந்து நின்றோமே!
ஆயிரம் கனவு கண்டோம்- ஆரமுதே நீ வாழ

மார்கழி இருப்பத்தாறு
காற்றும் கூடக் குளிர்ந்திருக்கும்
மழையும் கூடச் சுட்டிருக்கும்- சேற்றில்
நாற்றும் கூட நடுங்கியிருக்கும்
மனதுள் சோகத்தீ அனலிட - உங்கள்
வரவு பார்த்து அலையிடை சருகென
நாமலைந்தோம்.
சுனாமி என்னும் பெயரில் கோரத்தாண்டவமாடி
எம் விலை மதிக்க முடியாத அறிவுத் திறன்களை

அள்ளிச் சென்றாள் கடலன்னை
கடலலைக்கு உங்கள் விலை மதிப்புத்
தெரிந்திருக்க நியாயமில்லை
ஆழ்கடலுக்கு உங்கள் அறிவுத்திறன்
தெரிந்திருக்க நியாயமில்லை

எம தன்புச் செல்வங்களே! ஆண்டொன்றென்ன
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் - எம் நெஞ்சங்களில்
என்றும் நீங்கள் அணையாத தீபங்களே !
தண்ணீரில் காவியமாகிப் போன உங்களுக்கு- எம்
கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகிறோம்.

கடவைப்புலம், சுன்னாகம். (44317)

குடும்பத்தினர்.

விராட் விஸ்வப் பிரம்மனே நம

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மாயவன் படைப்பு | சுனாமியின் அழிப்பு |
| --- | --- |
| 03 | 26 |
| 10 | 12 |
| 1978 | 2004 |

### நல்லையா பிரகலாதன் (கண்ணன்)

அறுவருக்கு ஒரு சோதரனாய்
ஆனந்தமாய் வாழ்ந்தவனே -காலத்தால்
அழியாது உன் வாழ்வென்றிருந்த வேளை
அழைத்துச் சென்றாள் கடல் அன்னை கணப்பொழுதில்
ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறவில்லை எம் துயரம்
அஞ்சுகிறது நெஞ்சம் கண்ணா (நீ)
இல்லை என்று சொல்ல.

காளி கோயிலடி,
தாவடி வடக்கு,
கொக்குவில். (44457)

தாய்,சகோதரிகள்,
மற்றும் குடும்பத்தினர்.

## நெஞ்சைவிட்டு நீங்காத
## ஏழாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
பெற்றோர் மகிழ
24 - 01 - 1948



உதிர்வு
மனைவி மக்கள் கதற
26 - 12 - 1998

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.மாவட்ட முன்னாள் செயலாளர் நாயகமும் (TULF), அனைத்துலக எம்.ஜி.ஆர். பேரவைத் தலைவரும் அகில இலங்கை சமாதான நீதிவானும் (J.P.) திருமுருகன் களஞ்சிய உரிமையாளரும் வடபிராந்திய மினிபஸ் சங்க முன்னாள் தலைவருமாகிய

**அமரர் பொன்னுத்துரை மதிமுகராஜா (மதி)**

*திதி: 26.12.2005 திங்கட்கிழமை*

**நல்லவர்கள் வாழ்வதில்லை - இது நானிலத்தின் தீர்ப்பு!**

உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஈழ மண்ணில் இருந்து வணங்குகின்றோம்.

ஸ்ரீ முருக பவனம்
தாவடி,
கொக்குவில். (44619)(16-26-46)

என்றும் தங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்,
மதிமுகராஜா விஜயலட்சுமி (மனைவி).

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை நல்லாசிரியை
திருமதி சனாதநி கங்காதரன்
அவர்களின் அன்புத் தந்தை
**சீனிவாசகம் பரமேஸ்வரன்**
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யா/தோப்பு அருள்நந்தி
வித்தியாலயம்,
அச்சுவேலி.** (44605)(26-11-45)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், நலன்விரும்பிகள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,பழைய மாணவர்கள்.

## நினைவில் ஓராண்டு

மண் மகிழ
19 - 11 - 1951



மண் நெகிழ
26 - 12 - 2004

**அமரர் மயில்வாகனம் பாலச்சந்திரன்**

திதி :மார்கழி பௌர்ணமி

*எம்மைத் தவிக்க விட்டு எங்குதான் சென்றீர்கள்
பணிவிடைகள் பலசெய்ய நாமிங்கே காத்திருக்க
கண்ணிலும் எட்டாமல் பறந்து விட்டீர்கள்
முல்லை மண்ணிலே.*

காரைக்கால்,
இணுவில் கிழக்கு.
(44607)(26-11-45)

உங்கள் நினைவுடன்:
மகன் - ராஜன்,
மருமகள் - குலநாயகி,
பேர்த்திமார் - ஜோதிகா, மதுமிதா.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
16 - 10 - 1916



உதிர்வு
05 - 01 - 2005

**துரையப்பா இராஜதுரை**

திதி: 26-12-2005

அன்பின் உறைவிடமாய்
அமைதியின் திருவுருவமாய்
பாசத்தின் இருப்பிடமாய்
இதயத்தில் கலந்த எம் தெய்வமே!
எம்மோடு நீங்கள் வாழ்ந்த காலங்களும்
உங்கள் அன்பான திருவுருவமும்
என்றும் எம் நெஞ்சை விட்டகலாது.

*உங்கள் நினைவில் உங்கள் ஆத்ம சாந்திக்காய்
பிரார்த்திக்கின்றோம்.*

*இல.23, சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய்.* (44542)(26-11-45) **- குடும்பத்தினர்.**

### வடமராட்சியில் பட்டம் ஏற்றும் 'சீஸன்' ஆரம்பம்

குடத்தனை,டிசெ.26
தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு வடமராட்சிப் பகுதியில் பட்டம் ஏற்றும் 'சீஸன்' ஆரம்பமாகியுள்ளது.

இங்கு நட்சத்திரம், படலம், வட்டம், வீடு, மணிக்கூடு, கொக்கு, பராந்து, ஆள்போன்ற அமைப்புகளில் பட்டங்கள் கட்டப்பட்டு ஏற்றப்பட்டு வருகின்றன.

இந்தப் பட்டங்களைச் சிறுவர்கள் முதல் இளைஞர்கள் வரை ஏற்றிவருகின்றனர். பொங்கல் தினத்தன்று வடமராட்சிப் பகுதியில் பட்டம் ஏற்றும் போட்டியும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(எ-78)

### மதகை புனரமைக்கக் கோரிக்கை

காரைநகர் பிரதான வீதியில் பழைய கண்டிச் சந்தியில் உள்ள மதகு முற்றாகச் சேதமடைந்து விட்டது. இதனையடுத்து இந்த வீதியூடாக போக்குவரத்துச் சபையினால் நடத்தப்படும் பஸ்சேவை வலந்தலைச் சந்தியுடன் இடை நிறுத்தப்படும் நிலை உருவாகியுள்ளது.

நீண்ட காலமாக சேதமடைந்துள்ள இந்த மதகின்மேல் பழைய தகரம் ஒன்று போடப்பட்டு தற்காலிகமாகப் போக்குவரத்து நடைபெற்றுவந்தது. அண்மையில் பெய்த மழையை அடுத்து மேற்படி மதகு அமைந்துள்ள பகுதி மேலும் சேதமடைந்துவிட்டது.

இந்தமதகை புனரமைப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கப் படாதுவிடின் போக்குவரத்துச் சேவைகளை வலந்தலைச் சந்தியுடன் இடைநிறுத்தவேண்டிய நிலை ஏற்படலாம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (எ-73)

### காரைநகரில் ஆழிப்பேரலை நினைவு நிகழ்வு

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் ஓராண்டு நினைவு நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு காரைநகர் அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க முன்றிலில் சங்கத்தலைவர் க.இராஜச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஆழிப்பேரலையில் உயிர் நீத்தவர்களுக்கான அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெறவுள்ளதுடன் ஆழிப்பேரலையில் சிக்கி உயிர்நீத்த சங்க உறுப்பினர் ஆ.மகாலிங்கத்தின் உருவப்படமும் திரை நீக்கம் செய்யப்படும்.

அத்துடன், காரைநகர் சிவகாமி அம்பாள் ஆலயம், சாம்பலோடை ஆலங்கன் வைரவர் ஆலயம் என்பவற்றில் காலை 6.30 மணி தொடக்கம் விசேட பூசை வழிபாடுகளும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (எ-73)

## சுனாமி தந்த
## ஓராண்டுத் துயர் நினைவில்



அன்னைமடியில்
17.12.1976

சுனாமிஅலையில்
26.12.2004

**சுலோசனா சூரியகுமாரி
சூரியமூர்த்தி**

(உயிரியல் முதுமாணிப்பட்டதாரி–பேராதனைப் பல்கலைக்கழகம்)

திதி:14.01.2006

உற்ற மகளே! உன் வாழ்வு சிறந்திடவே
பெற்ற நாள் முதலாய் பற்றி வளர்த்தோமே – கல்வி
உற்ற காலங்களில் பெற்றிட்ட பட்டங்களோ பல
கற்றவர் கோலங்களில் முதுமானி உயிரியலில் நீ
கலை மானாய் துள்ளித்திரிகையிலே உலுப்பிய நில நடுக்கம்
அலைபோல அள்ளி சொரிந்திட்ட வேளை கொலையுண்டாய்
சுகவாழ்வு கைநழுவி சுனாமி கைகோர்த்தாய் – நீ
இக வாழ்வு நிறைவுகண்ட சுனாமிக்கு ஒரு வயது எம்
அகவாழ்வில் அகலாது சுடராக ஒளிர்வாய் என்றும்.

*ஆத்மசாந்திக்காக ஆண்டவனை வேண்டிக் கொண்டு*

14.01.2006 (தைத்திருநாள்) அன்று நடைபெறும் ஆத்மசாந்தி மற்றும் மதியபோசன நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**உன் பிரிவால் ஆறாது உள்ளம் வெந்துதுடிக்கும்
சூரிய மூர்த்தி (ஆங்கில ஆசிரியர்) குடும்பத்தினர்.**

(44539)(52)

**'தெய்வ வாசா'
மூத்தவிநாயகர் கோயிலடி, கரணவாய். கரவெட்டி.**

## ஆழிப்பேரலை அனர்த்தத்தின்
## ஓராண்டு நினைவலைகள்







**கென்றிக் எமறென்சியா** (டல்சியா)
ஆண்டவன் படைப்பு:1978.09.17

**கென்றிக் எட்வீசன் றோய்** (மாணவன் யா/தாளையடி றோ.க.த.க. பாடசாலை)
ஆண்டவன் படைப்பு:1992.08.09

இயற்கை அழிப்பு: 2004.12.26

''கடலின் அலைகள் கொந்தளித்துப் பொங்கினாலும்
கரும்புயல் காற்று கண்ணெதிரில் கண்டாலும்
கலங்கிடவே மாட்டேன்... கலங்கிடவே மாட்டேன்...
உன்னதமானவரே எனக்கு உறைவிடமானாரே''
*(வல்லமை கீதங்கள்)*

கடலன்னை தாலாட்டும் தாளையம் பதியில் - கடல் மடியில்
துயின்ற எம் உறவுகளே
குடும்பத்தின் ஒளிவிளக்காய், பாசம் நிறைந்த சகோதரியாய்
பாதை காட்டிய ஒளி விளக்கே - நீ பாதி வழியில்
எமையெல்லாம் தவிக்கவிட்டு - உடன் எம் கடைக்குட்டியையும்
அழைத்துச் சென்ற மர்மம் தான் என்ன?
குடும்பத்தின் குழந்தைச் செல்வமே- றோய்க்குட்டி
எமைத் தவிக்க விட்டுச் சென்று விட்டாயே!
உன் புன்சிரிப்பும், பாடல்களும் இன்னமும்
எம் காதுகளில் ஒலிக்குதையா
இதைப் பொறுக்க முடியாத பேரலைகள்
உன்னை எம்மிடமிருந்து பறித்ததடா
ஆண்டொன்று உருண்டோடினாலும் - ஆறாது எம் துயரம்
உங்கள் ஆன்மா இறைசாந்தி பெற்றிட
அனுதினமும் உங்களுக்காக வேண்டுகின்றோம்.

தாளையடி கிழக்கு,
தாளையடி.

(44544)(39-26-11-45)

*இவர்களின் பிரிவால் துயருறும்:
அன்பு அம்மாவும் சகோதரங்களும்.*

# ஈரவிழிகளுடன் ஓராண்டு நினைவுகளில்...

தோற்றம்
05.01.1924

மறைவு
26.12.2004



விஷகடி வைத்தியர்
அமரர்
கந்தப்பு கிருஷ்ணபிள்ளை

திருமதி
இரத்தினம் கிருஷ்ணபிள்ளை

தோற்றம்
04.03.1925

மறைவு
20.07.2004

குறைகள் எதுவுமின்றிக் குடும்பத்தில் நிறைவு காட்டி
குறைவில்லாத் தம்பதியாய் நிறைவாக வாழ்ந்தீர்கள்
வாழ்வு ஒரு சுமையல்ல சுகமானதென்று!
வண்ணமுற வாழ்ந்து எம்மை வாழ வைத்த தெய்வங்கள்
கல்விச் செல்வமே நிலையானதென்று - நாம்
கருத்துடனே கற்க வழிகாட்டி நின்றீர்கள்!
பிள்ளைகள் கடமையெல்லாம் பிரியமுடன் புரிந்தீர்கள்
புவி மீதில் தனித்திருந்து புலம்புகின்றோம் ஐயா !
கோபம் வந்துகண்டதில்லை. சுறுசுறுப்பும் குறைந்ததில்லை.
'இளந்தாரி' என்று கூறி இறுமாப்புக் கொண்டிடுவோம்.
அம்மாவை இழந்த குறை அறியாமல் நாமிருக்க
அன்பை அள்ளி நிதம் சொரிந்து ஆறுதலாய் இருந்தீர்கள்.
வெளிநாடு போகவென்று வேட்கையோடு இருந்தீர்கள்.
வேகமாக வந்த அலை வேரோடு சாய்த்ததுவோ!
அன்புப் பேர்த்தியையும் துணைக்கழைத்து சென்றதேனோ
ஏனிந்தக்கதியெமக்கு எப்படித் தாங்கிடுவோம்.

அம்மா!
இல்லத்தில் நீங்கள் இருக்கும் வரை இன்பம் தான் எம் வாழ்வில்
இழந்தோம் உங்களை இருள் சூழ்ந்து போச்சு வாழ்வில்
இலக்குமியாய் இரத்தினமாய் இயங்கி மிளிர்ந்தீர்கள்-இன்று
இன்னல் சூழ்ந்ததம்மா வாழ்வில் இடிவிழுந்து போச்சுதம்மா!
அம்மாவின் பின்பு அன்னையாய் எமக்கிருந்து
ஆறுதல் கூறி அன்பை வழங்கும் அக்காவின்
கண்ணீரைப் பார்த்துக்கலங்கித் தவிக்கின்றோம்.
சொல்ல வார்த்தையின்றிச் சோகத்தில் மிதக்கின்றோம்.
அப்புவும், அம்மம்மாவும் அன்பாகப் பார்ப்பார்களென
அன்புப் பேர்த்தி வந்துவிட்டாள் அணைத்துக்கொள்ளம்மா!
தெய்வமாய் நீங்கள் இருந்து தேற்றிடுங்கள்
காலம் உள்ளவரை கண்ணீர்தான் எங்களுக்கு.....

எம்முடன்
08.01.1980

சுனாமியின் கோரப்பிடியில்
26.12.2004

சிட்டாகப் பவனிவந்த வட்டநிலா -எம்
சிந்தை எல்லாம் நிறைந்திருந்த சின்னநிலா- நிதம்
அன்பையே அள்ளி அள்ளிச் சொரிந்தவளே!
அன்புச் சின்னக்கா உனை இழந்து
ஊமையானோம்
கரு நீளக் கூந்தல் கால்களிடை அசைந்தாட
கலகலப்பாய்ப் பேசிக் கலக்கிடுவாய் இருக்குமிடம்.
சொல்லியழ வார்த்தையின்றி சோகம் மிகுந்துவாட்ட
சோர்ந்து விட்டோம்! சோபை இழந்துவிட்டோம்!
ஆழிப்பேரலை ஆக்கிரமித்தவேளை - யாரை
நினைத்தாயம்மா!
கரம்பற்றக் காத்திருந்தவரும் கவலையில்
மிதக்கின்றார்
கருணையே சிறிதுமின்றிக் காலன் காவுகொண்ட
செய்கையினால்
கலங்கித் தவிக்கின்றோம்! கண்ணீரில்
மிதக்கின்றோம்!

சின்னமகளே!
கடைக்குட்டி நீ எங்கள் கண்கண்ட தெய்வமம்மா!
அக்காவும் அண்ணாமாரும் அருகில்
இல்லையென
காலமெல்லாம் உங்களைக்
கைவிடமாட்டேனென்பாய்
கைவிட்டுவிட்டாயம்மா! உன்னைக்
கைதவறிவிட்டோமம்மா!
காலம் உள்ளவரை கலையாது உன் நினைவு -
நாம் கையெடுத்த
தெய்வமெல்லாம் கைவிரித்து விட்டதுவே!
எல்லாம் இருந்தும் எதுவுமற்றோராகி விட்டோம்
ஏனிந்தக் கதியெமக்கு எப்படித் தாங்கிடுவோம்.



சுனாமியின் கோரப்பசிக்கு இரையாகிய எமது அன்பு மகளின் நினைவாக இன்று காலை 7 மணிக்கு புலோலி, கிராமக்கோடு புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொண்டு எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். அதைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

✱ இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

*பிரிவால் துயருறும்* :- குடும்பத்தினர்

'மனோ இல்லம்' வல்லிபுரப் பரியாரியார் வீதி,
பருத்தித்துறை. தொ.பே.: 0712373378

செல்வி
தனுஷியா தொன்சன்ரைன்
(யாழ்.தேசிய கல்வியியற்கல்லூரி முகிழ்நிலை ஆசிரியை,
யாழ்.தும்பளை சிவப்பிரகாச வித்தியாசாலை உள்ளகப் பயிற்சி ஆசிரியை)

(14537)(52-16)

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
30.11.1972

மறைவு
26.12.2004



அமரர்
## கந்தசாமி குணேஸ்வரன்

முல்லைத்தீவு காவல்பணிமனை பொறுப்பாளர் (I.P.) பரிசோதகர்.

என் உடன்பிறாவாச் சகோதரனே ரமணண்ணா
குணத்தில் சிறந்த குணசீலனே குணேஸ்அண்ணா
பண்பின் பிறப்பிடமே பாசத்தின் ஒளிவிளக்கே
எங்கண்ணா சென்றாய் எம்மை விட்டு
உன்னைப் பிரிந்து நாம் தவியாய்த் தவிக்கின்றோம்
தொண்டைமானாற்றிலே நீராடி
முல்லைத்தீவு கடலை முத்தமிட்டாயா?
ஆண்டொன்று சென்றதண்ணா நீ எம்மை பிரிந்து
ஆனாலும் உன் நினைவலைகள் எம் நெஞ்சைவிட்டு அகலவில்லை

அன்னாரின் பிரிவால் துடிக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து கொள்வதோடு, அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

சிதம்பரநாதன் தினேஸ்வரன்,
கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு.

(44601)(52 – 11 – 45)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



சிவசிதம்பரநாதன் பரிமலாதேவி தோற்றம்: 15.10.1972
சி.சினேக்கா தோற்றம்: 05.11.1994
சி.விவேக்கா தோற்றம்: 24.02.1996
சி.விவேக்கா தோற்றம்: 06.02.1998
சி.சந்தோஷ் தோற்றம்: 17.04.2000

ஆழியின் பிடியில்: 26.12.2004

ஆழி காவு கொண்ட என் அருமை உறவுகளே
உங்கள் உயிர் காவிய பின் அடங்கியதேனோ
ஆழ்கடல் அடங்கியும் அடங்கவில்லை என் வேதனை
மீண்டும் வருவீர்களா என் வேதனை தீர்த்திட

முல்லைத்தீவில் ஏற்பட்ட ஆழிப்பேரலையால் உயிர்நீத்த என் அருமை அன்புள்ளங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

புலவர் வீதி,
நவாலி வடக்கு, மானிப்பாய்.

சிவ சிதம்பரநாதன்(கண்ணன்)
(அப்பா)

# பவளவிழாச்சபை அங்குரார்ப்பணம்

கோப்பாய்,டிசெ.26

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியின் பவள விழாவிற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கென பவள விழாச்சபை உரவாக்கப்பட்டது. அதிபர் வ. அறுமுகம் தலைமையில் நடைபெற்றது இதுதொடர்பான கூட்டத்தில் பவளவிழாச் சபையின் செயலாலராக ஓய்வுபெற்ற நிர்வாக அலுவலர் க. இராசதுரையும் பொருளாளராக ஆசிரியர் ச.வவீசனும் மற்றும் நிர்வாக சபைக்கென 52 உறுப்பினர்களம் தெரிவு செய்யப்பட்டனர்.

திருக்குறள் மையஅங்குரார்ப்பணம் திருவள்ளுவர் சின்னம் அமைத்தல்,முன்னாள் அதிபர் குமாரசாமி நினைவாக கேட்போர் கூடம் நிர்மாணித்தல்,கல்விக்கண்காட்சிமாவட்ட மட்டத்தில் சகல கலாசாரம் மற்றும் கரப்பந்தாட்டப் போட்டிகள் நடாத்துதல் ஆகிய வேலைத்திட்டங்கள் மேற் சபைகும் கூறப்பட்டத (எ-72)

# விண்ணகத் தம்பதிகள்




மண்ணில் 08.06.1922 விண்ணில் 26.12.1994
மண்ணில் 17.05.1925 விண்ணில் 06.07.1998

அன்பின் அப்பாஅம்மா
பூவுலகில் இருந்தபொழுது எம்மை உருவாக்கினீர்கள்
விண்ணகத்தில் இருந்தும் எங்களுக்கு ஆசிகள் வழங்குகிறீர்கள்
நீங்கள் மறைந்தீர்கள் மடியவில்லை
எங்கள் மனதில் என்றென்றும் வாழ்கிறீர்கள்

உங்கள் நினைவுகளுடன்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

963/7, வளன்புரம்,
கொழும்புத்துறை.

தகவல்:
அமலன் மாஸ்ரர்(மகன்)

அலையடித்து ஆறாத்துயரில்...
# ஓராண்டு நீங்காத நினைவுகள்

பிறப்பு 26 12 1958




பிறப்பு 17 04 2003

அருந்தவல்லிா
ரிஷிகாந்
வேம்படி-உடுத்துரை

பிறப்பு 22 11 1981




புஸ்பஸ்ரீ
உடுத்துரை

பிறப்பு 22 04 1949



இறப்பு 12 10 2003

ஆறுமுகம்
வேலாயுதபிள்ளை

அலைகடலால் அல்லலுற்று
அமரராகிவிட்ட
விலை மதிக்க முடியாத
அன்புத்தெய்வங்களே!
நிலை தடுமாறியே நித்தமும் நாம்
தவிக்கின்றோம்.
கொலை செய்த ஆழியைக் கொடுமை
சொல்லி என்ன பயன்?

இறப்பு 26-12-2004

இந்நாளில் இறப்பெய்திய அனைத்து ஆத்மாக்களும் சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம். அனைவரையும் இன்று நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துகின்றோம்.

குடும்பத்தினர்,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

பிறப்பு 05.10.1971
செல்வி வேலாயுதபிள்ளை இந்திராததேவி (ஆசிரியை)
பிறப்பு 12.02.1970
திருமதி தர்மலிங்கம் லலிதாதேவி
பிறப்பு 10.10.1978
திருமதி கணேசலிங்கம் றஜனிதேவி
பிறப்பு 16.11.1998
செல்வி கணேசலிங்கம் றம்மியா
பிறப்பு 25.12.2003
செல்வன் கணேசலிங்கம் ஜதுர்ஷன்

இறப்பு 26 – 12 – 2004

வத்திராயன், தாழையடி.

# சுனாமி அனர்த்த எச்சரிக்கை மையம் மிகவும் அவசியம் சார்க் நாடுகள் இணைந்து இதனை நிறுவுவது புத்திசாலித்தனம்

தமிழர் தாயகப் பிரதேசங்களின் கரையோரப் பகுதிகளை ஆழிப்பேரலை காவுகொண்டு அழித்து இன்று ஒருவருடம் பூர்த்தியாகிறது. ஆழிப்பேரலை தொடர்பாகவும் அதுபோன்ற இயற்கை அனர்த்தங்களை முன் கூட்டியே அறிந்துகொண்டு அழிவுகளைத் தவிர்ப் பதற்கு ஒடுக்கவேண்டிய கூட்டு முயற்சி பற்றியும் விளக்குகின்றது இக்கட்டுரை.

கடந்த ஓராண்டு காலத்தில் நடை-பெற்ற இயற்கை அனர்த்தங்களுள் இந்-தோனேசியா, இலங்கை உட்படப் பத்து நாடுகளில் இரண்டரை லட்சத்திற்கு மேற்பட்ட மக்களைக் காவுகொண்டு பெருஞ் சேதத்தை விளைவித்த 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்துச் சுனாமியும் 2005ஆம் ஆண்டு ஓகஸ்ட் அமெரிக்காவின் நியூ ஓர்லியன்ஸ் மாநிலத்தைச் சின்னாபின்னமாக்கி ஒருசில டசின் மக்களைப் பலி கொண்ட கத்ரீனா சூறாவளியும் எழுபத்தையாயிரத்திற்கு மேற்பட்ட மக்களைக் காவுகொண்ட 2005ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்துக் காஷ்மீர் புவிநடுக்கமும் குறிப்பிடத்தக்கவை. இத்துன்ப நிகழ்வுகள் ஒவ்வொன்றினாலும் உள்ளக ரீதியாக இடம் பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை பல லட்சம். ஏற்பட்ட சொத்து இழப்புக்களோ பல ஆயிரம் கோடி ரூபாய்கள். நியூ ஓர்லியன்சைத் தாக்கிய அதே உத்வேகங் கொண்ட சூறாவளியானது தெற்காசியாவிலே அடிக்கடி சூறாவளித் தாக்கத்துக்கு உட்படுகின்ற வங்காளதேசத்தைத் தாக்கியிருக்குமாயின் உயிர்ச்சேதம் பல லட்சமாக இருந்திருக்கும். ஆனால், நியூ ஓர்லியன்ஸில் ஏற்பட்ட உயிர்ச்சேதம் ஒருசில டசின்களே. இதுபோன்றே ஆழிப்பேரலையால் ஏற்படும் அனர்த்தங்களுக்கு அடிக்கடி முகங்கொடுக்கும் நாடு ஜப்பான். ஆனால், அங்கு இந்தோனேசியாவிலும் இலங்கையிலும் ஏற்பட்டளவு உயிரிழப்புகள் சமீபகாலத்தில் ஏற்பட்டதில்லை. இவற்றிற்குக் காரணம் இந்நாடுகளில் அமைந்துள்ள அனர்த்த முகாமைத்துவக் கட்டமைப்புகளே.



கடல் மிதவையாக உருவாக்கப்பட்டுள்ள சுனாமி எச்சரிக்கைக் கருவி

2004ஆம் ஆண்டு டிசெம்பர் 26 ஆம் திகதி சுனாமி அனர்த்தமும் காஷ்மீர் புவியதிர்வும் சமீபத்திய தமிழ்நாட்டின் பயங்கர மழை, வெள்ளப்பெருக்குகளும் தெற்காசியாவில் பிராந்திய மட்டத்திலும் தேசிய மட்டங்களிலும் மாவட்ட மட்டங்களிலும் கிராம மட்டங்களிலும் செயல் திறன் மிக்க அனர்த்த முகாமைத்துவக் கட்டமைப்புகள் உருவாக வேண்டியதன் அவசியத்தைக் கோடிட்டுக் காட்டி நிற்கின்றன.

### இழப்புகளைக் கட்டுப்படுத்தல்

புவி நடுக்கம், எரிமலைக் கக்கல், சுனாமி, வெள்ளம், மண்சரிவு, வறட்சி, சூறாவளி, சுழல் காற்று போன்ற இயற்கை அனர்த்தங்கள் ஏற்படாமல் தடுக்க மனிதனால் முடியாது. இவ்வனர்த்தங்கள் ஏற்பட்டபின் அவற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தவும் முடியாது. ஆனால் அநேக சந்தர்ப்பங்களில் இவ்வியற்கை அனர்த்தங்கள் ஏற்படக்கூடிய சாத்தியமிருப்பதை எதிர்வு கூறக்கூடிய அளவிற்கு விஞ்ஞானம் வளர்ச்சி அடைந்துள்ளது. ஆகவே வெவ்வேறு மட்டங்களில் அனர்த்த முகாமைத்துவ நிலையங்களை அமைத்து அனர்த்த முன்னெச்சரிக்கைகள் மக்களை உடன் சென்றடையவும் முகாமைத்துவ நிலையங்கள் செயற்றிறன் மிக்கதாக இயங்கவும் ஒரு தேசிய அனர்த்த முகாமைத்துவ செயல் திட்டம் ஒன்றை உருவாக்குவதன் மூலம் உயிர், உடமைச் சேதங்களைப் பெருமளவில் குறைத்துக் கொள்ளமுடியும்.

## அனர்த்த நடவடிக்கைக் குழுக்கள் பிரதேச மட்டங்களில் தேவை

### அனர்த்தங்களை எதிர்வு கூறல்

பெருமழை, வெள்ளம், புயற்காற்று, சூறாவளி போன்றவற்றைக் காலநிலை அவதான நிலையங்கள் எதிர்வு கூறுகின்றன. புவி நடுக்கத்தை எதிர்வு கூறக்கூடிய அள-விற்கு விஞ்ஞானம் வளர்ச்சியடையவில்லை. ஆனால் சமுத்திரத்தில் புவி நடுக்கமொன்று ஏற்பட்ட ஒரு சில நிமிடங்களுள் அந்நடுக்கம் சுனாமியை உருவாக்கியுள்ளதா என்பதைக் கூற முடியும்.

### சுனாமி தரும் கால அவகாசம்

சுனாமியைத் தொலை தூர சுனாமி (Distant tsunami), அவ்விடத்திற்குரிய சுனாமி (Local tsunami) என இருவகைப் படுத்தலாம்.

சமுத்திரத்தில் புவி நடுக்கமேற்பட்ட புவி நடுக்க மையத்திலே உருவாகக்கூடிய சுனாமி, அது உருவாகிய இடத்திலிருந்து அது நகரும் திசையில் எவ்வளவு தூரத்தில் கடலோரம் அமைந்துள்ளதென்பதன் அடிப்படையிலேயே சுனாமி மேற்கூறிய இருவகையாகப் பிரிக்கப்படுகிறது. சுனாமி கரையொன்றை அண்மிக்குமுன் உற்பத்தி தானத்திலிருந்து 600 மைல் (1000 km) தூரத்திற்கு மேல் பயணம் செய்யுமாயின் அது தொலைதூர சுனாமி எனப்படும். இவை பொதுவாக பசுபிக் சமுத்திரத்தில் தோன்றுகின்றன. இவை இச்சமுத்திரத்தில் ஏறத்தாழ ஒருநாள் வரை பயணம் செய்தே கரையையடைகின்றன. இவ்வாறு இச் சுனாமி மாறாவேகத்தில் கூடியதூரம் பயணிப்பதால் அவை தாக்கக் கூடிய பிரதேசங்களிலுள்ள மக்களை இடம்பெயரச் செய்து அவர்களைக் காப்பாற்றக் கூடியதாக இருக்கும்.

அவ்விடத்திற்குரிய சுனாமி, உற்பத்தித் தானத்திலிருந்து ஏறத்தாழ 60 மைல் தொலைவுக்குள் உள்ள கரையோரங்களைத் தாக்குவது. இவை பொதுவாக ஆபத்தானவை. ஏனெனில் இவை மிகக் குறுகிய நேரத்தில் தாக்குவதால் மக்களை எச்சரிப்பதற்கான கால அவகாசம் போதுமானதாக அமைவதில்லை.

2004 டிசெம்பர் சுனாமி உற்பத்தியாகி ஏறத்தாழ இரண்டு மணி நேரத்தின்பின் தான் இலங்கைக் கடலோரத்தைத் தாக்கியது. அதாவது இலங்கையைத் தாக்கிய சுனாமி தொலைதூர சுனாமி. செயற்திறன் மிக்கவொரு அனர்த்த முகாமைத்துவக் கட்டமைப்பு இலங்கையில் இருந்திருக்குமாயின் பல ஆயிரம் உயிர் இழப்புக்களைத் தவிர்த்திருக்க முடியும்.

### சுனாமி ஏற்படுவதை எதிர்வு கூறலும் கண்காணிப்பும்

சுனாமியை ஆழ் சமுத்திரத்தில் மதிப்பீடு செய்து உபகோள்கள் மூலம் தகவல் தரும் (Deep-ocean Assessment and Reporting of Tsunamis (DART)) ஏற்பாடுகள் அமெரிக்கா, யப்பான் போன்ற நாடுகளில் நடைமுறையிலுள்ளன. DART தொகுதி அரை அங்குல உயரமுள்ள சுனாமியைக் கூட உணரும் திறனுடையது.

அமெரிக்காவின் பசுபிக் சமுத்திரக் கடற்கரையோர நகரங்களும் வாய் தீவும் சுனாமி அனர்த்தம் ஏற்படக்கூடிய சாத்தியம் அதிகமுள்ள மாநிலங்கள். இப்பகுதிகளில் கடற்கீழ் புவிநடுக்கங்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. அதனால் இவ்விரு பிரதேசங்களிலும் அமெரிக்கா இரு பெரிய சுனாமி எச்சரிக்கை நிலையங்களை அமைத்துள்ளது. வாய் தீவுக்கூட்டத்தின் ஏவா கடற்கரையில் அமைந்துள்ள PTWC (Pacific Tsunami Warning Centre) எனும் மையம் தொடர்ச்சியாக சுனாமி, பூகம்பம் போன்ற நிகழ்வுகள் ஏற்படுவதைக் கண்காணித்து வருகின்றது. அலஸ்காவில் அமைந்துள்ள ATWC (Alaska Tsunami Warning Centre) எனும் மையம் ஐரோப்பா, அமெரிக்கா பகுதியில் ஏற்படக் கூடிய சுனாமிகளைக் கண்காணிக்கிறது. திறந்த சமுத்திர மிதவைகள் (Open – Ocean buoys) மற்றும் கடல் வற்றுப் பெருக்கமானி (Tide Ga-uges) போன்ற கருவிகள் சுனாமியை உணர்ந்து அவ்வப் பிரதேசத்தில் அமைந்துள்ள நிலையங்களிற்குத் தகவல் தருகின்றன. வற்றுப் பெருக்கு நிலையங்கள் கடல்மட்ட ஏற்ற இறக்கத்தை அவதானித்தபடியுள்ளன. புவியதிர்வு பதிகருவி நிலையங்களும் கடல்மட்ட ஏற்ற இறக்கத்தை அவதானிக்கும். புவியதிர்வு பதிகருவி நிலையங்களும் புவியதிர்வு உயிர்ப்பு உள்ளதா என்பதை எந்நேரமும் பதிவு செய்த வண்ணமுள்ளன. இவை தினமும் இருபத்து நான்கு மணி நேரமும் இயங்கும் நிலையங்கள். இந்நிலையத்தினர் பூகம்பமானது ரிட்சர் அளவில் 7.5ஐ தாண்டியுள்ளது என அறிவிப்பாளர்களாயின் சுனாமி உருவாகியுள்ளதா என்பது கண்டறியப்பட்டு முடிவு ஒரு சில நிமிடங்களுள் அனர்த்த முகாமைத்துவ நிலையங்களுக்கு உடனடி நடவடிக்கைக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. உடனடியாகச் செயலில் ஈடுபடுத்தக் கூடிய பயிற்சியளிக்கப்பட்ட தொண்டர்களை ஒன்று திரட்டக் கூடிய ஆயத்த நிலையிலும் இடம் பெயரும் மக்களுக்கு வேண்டிய போக்குவரத்து, உணவு, உடை, உறைவிட வசதிகள் பற்றிய சகல தகவல்களுடனும் உள்ள அனர்த்த முகாமைத்துவ நிலையங்கள் உடனடியாகச் செயலில் இறங்கி ஆபத்தான இடங்களிலுள்ள மக்களை வெளியேற்றி மாற்று வசதிகள் செய்து கொடுக்கும்..

### இன்றைய அவசரத் தேவை


மனிதனின் பேராசையால் இன்று உலகின் தட்ப வெப்ப நிலைகளில் பல மாறுதல்கள் ஏற்பட்டு இயற்கை அனர்த்தங்கள் அதிக அளவில் ஏற்படுகின்றன. இவற்றிலிருந்து மீள்வதற்கு இயற்கையைச் சீண்டுவதை மனிதன் கட்டுப்படுத்த வேண்டும். ஆனால் இக் கட்டுரையின் நோக்கம் இது பற்றியன்றி இயற்கை அனர்த்தமொன்று ஏற்படுமென்ற தகவலை முற்கூட்டிப் பெற்று அதன் மூலம் மனித குலத்தைப் பேரழிவுகளிலிருந்து காப்பாற்ற அரசாங்கங்களும் பொது அமைப்புகளும் என்ன செய்ய வேண்டுமென்பது பற்றியதாகும்.

அமெரிக்காவை அல்லது ஜப்பானைப் போல சுனாமி எச்சரிக்கை நிலையங்களை உருவாக்கிப் பராமரிக்கக் கூடிய பொருளாதார வலிமை இலங்கை போன்ற நாடுகளுக்கு இல்லை. ஆகவே, தெற்காசிய நாடுகளைப் பொறுத்தவரை சார்க் நாடுகள் அனைத்தும் சேர்ந்து சுனாமி போன்ற கடற்படுக்கை அனர்த்தங்களை எதிர்வு கூறக் கூடிய தெற்காசிய சுனாமி எச்சரிக்கை மையம் (South Asian Tsunami Warning Centre) ஒன்றை அமைத்துக்கொள்வது புத்திசாலித்தனமானது. ஒவ்வொரு நாடும் வெவ்வேறாகச் செயற்படாது ஒன்றுபட்டு செயற்படுவது நடைமுறைச் சாத்தியமானதும் சிக்கனமானதுமாகும். வெளிநாடுகளிலிருந்து கிடைத்திருக்கும் பெருந்தொகை சுனாமி அனர்த்த நிதியத்தின் ஒரு பகுதியை இம்மத்திய நிலையத்தை அமைக்க உபயோகிக்கலாம்.

பிராந்தியத்திலுள்ள ஒவ்வொரு நாடும் அதன் வெவ்வேறு மாவட்டங்களிலும் கால நிலை அவதான நிலையங்களை நிறுவியும் இருப்பவற்றைத் தரமுயர்த்தியும் அவ்வப்பகுதி மக்களுக்கு காலநிலை மாற்றங்கள் பற்றிய தகவல்கள் உடனடியாகச் சென்றடைவதை உறுதிப்படுத்த வேண்டும். இக்கால நிலை அவதான நிலையங்கள் அனைத்தும் தெற்காசிய மத்திய எச்சரிக்கை நிலையத்துடன் ஒரு வலைப் பின்னலாக இணைக்கப்பட்டு தகவல்கள் உடனுக்குடன் பரிமாறப்படுதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நாட்டின் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் அல்லது பிரதேச சபைகள் மட்டத்தில் அல்லது உளளூராட்சி மட்டத்தில் அரச அதிகாரி ஒருவர் தலைமையில் அனர்த்த நடவடிக்கைக் குழுக்கள் அமைக்கப்பட்டு அதிகாரிகளுக்கும் தொண்டர்களுக்கும் அனர்த்தமொன்று ஏற்படும்போது அதற்கு எவ்வாறு முகம் கொடுப்பது என்பது பற்றிப் பயிற்சி அளிக்கப்பட்டு அழைப்பு வரும்போது உடன் செயலில் இறங்கக் கூடிய நிலையில் அவர்களைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

காலநிலை செயற்கைக் கோளுடன் தொடர்பு கொண்டு சமிக்ஞைகளை வழங்கும் தொழில் நுட்ப வசதியுடன் கூடியது இக்கருவி.




பேராசிரியர் இ.குமாரவடிவேல்
விஞ்ஞான பீடாதிபதி,
யாழ். பல்கலைக்கழகம்.

ஒவ்வொரு நடவடிக்கைக் குழுவுக்கும் வெவ்வேறு வகை அனர்த்தங்கள் வரும் போது எவ்வாறு செயற்படவேண்டும் என்பது பற்றிய செயல் திட்டமொன்று தயார் நிலையில் இருத்தல் வேண்டும். இயற்கை அனர்த்தங்களை எதிர்கொண்டு முகாமை செய்வது பற்றிப் பொதுமக்கள் மத்தியில் போதியளவு விழிப்புணர்வு ஏற்படக்கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். இதில் ஊடகங்கள், அரசாங்க அதிகாரிகள், உள்ளூராட்சி சபைகள், மாநகர சபைகள், கிராம சேவையாளர்கள் போன்றவர்களின் பங்களிப்பு இன்றியமையாதது.

தெற்காசிய சுனாமி எச்சரிக்கை மையமொன்றைக் காலம் தாழ்த்தாது நிறுவுவதும் தேசிய மட்டத்திலும் மாவட்ட, கிராம மட்டங்களிலும் செயல்திறன் மிக்க அனர்த்த முகாமைத்துவக் கட்டமைப்புக்களை உருவாக்குவதும் தேசிய அனர்த்த முகாமைத்துவச் செயல் திட்டமொன்று தயார் நிலையில் இருக்க வேண்டியதும் காலத்தின் அவசிய தேவையாகும்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## கோழிக்குஞ்சு விநியோகம்

**Prima** கோழிக்குஞ்சுகள் இன்று 26.12.2005 விநியோகிக்கப்படமாட்டா. 09.01.2006 அன்று விநியோகிக்கப்படும். நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி/47055)

## தவறிவிட்டது

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யே.அஜித் ஜீவராஜ் என்பவரது தே.அ. அட்டை 871533016V யாழ்.நகரில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் 077 9687750 என்ற தொலைபேசி இல்ககத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (44616)

வில்பிறட் அல்பா கில்டன் என்பவருடைய தே.அ.அட்டை, விஷேட அ.அட்டை, முச்சக்கரவண்டிக்குரிய வரிப்புத்தகம், காப்புறுதிப் பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ் நாவாந்துறைக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 78/11, பீச் றோட், நாவாந்துறை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (44611)

இல.260, சில்வா வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சியைச் சேர்ந்த கந்தையா கணேசமூர்த்தி என்பவரது தேசிய அடையாள அட்டை (842093384V) 23.12.2005 வெள்ளிக்கிழமை மருதனார்மடம் சந்தியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் SOMASUNDARAM, NO.13A, IYANAR KOVIL VEETHY, VANNAR PANNAI, JAFFNA எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (44602)

அருணகிரிநாதன் சஞ்சீபன் என்பவருடைய தே.அ.அட்டை (873212462V), விஷேட அடையாள அட்டை என்பன 12.12.2005 அன்று நல்லூருக்கும் திருநெல்வேலிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பனிக்கர் வளவு, திருநெல்வேலி எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (44610)

## வீடு வாடகைக்கு

இல.170, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குழி, கணக்கர் சந்திக்கு அருகில் சகல வசதிகளுடனும் கூடிய 5 அறைகள், 2 பெரிய ஹோல், வாகனத் தரிப்பிட வசதி மற்றும் நன்நீர் வசதியுடன் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. தனியார் நிறுவனங்களுக்கும் வியாபார நிறுவனங்களுக்கும் உகந்தது. தொடர்பு: 021 - 222 7530, 021 - 222 6612. (44305)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1967 ஆம் ஆண்டு பிறந்த, சதய நட்சத்திரம், நோர்வேயில் குடியுரிமை உடைய, நிரந்தர தொழில் புரியும் (தற்போது இங்கு வந்துள்ளார்), நற்பண்புள்ள மணமகனுக்கு நற்பண்புடைய படித்த மணமகளைத் தாயார் தேடுகின்றார். தொடர்பு: 2773, மே/பா உதயன். (44540)

## திருமண சேவை

1970ஆம் ஆண்டு, 1974ஆம் ஆண்டு செவ்வாய் இல்லாத, லண்டன் சிற்றிசன் மணமகன்களுக்கு அழகான மணமகள்கள் தேவை. குறிப்பு: படத்தோடு தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமண சேவை. 230, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (44618)


**UNIVAC**

**Software Engineering Park**

2006 ஆம் ஆண்டில் 1000 கணனி மென்பொருள் பொறியியலாளரில் நீங்களும் ஒருவராக வர

**இன்றே விண்ணப்பியுங்கள்**

**யுனிவெக் போட்டிப்பரீட்சை**

விண்ணப்ப முடிவு திகதி: 31-12-2005

213, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P : 077 6176476


## நீர்வேலியில் மீண்டும் பாதீனியம்

அரியாலை,டிசெ26

கோப்பாய், நீர்வேலிப் பிரதேசங்களில் பாதீனியக் களையின் பெருக்கம் தற்போது அதிகரித்திருப்பதாக இப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அண்மையில் பெய்த கனத்த மழையை அடுத்து தோட்ட நிலங்கள் மற்றும் பொது இடங்களில் பாதீனியக் களையின் பெருக்கம் திடீரென அதிகரித்துள்ளது என்றும் கூறப்பட்டது. (எ-17)

### முதலாம் ஆண்டு நினைவலைகள்



**அமரர்**

**நல்லையா பிரகலாதன்**

*(கண்ணன்)*

தோற்றம் 03-10-1978 மறைவு 26-12-2004

*ஈரவிழிகளுடன் இன்றும் உன்னைத் தேடுகிறேன்.*

துவாளி வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

*மீளாத நினைவுகளுடன்:*
**பா.திரேஷ்குமார்**
*(மச்சான்).*

(44441)(32-45-46)


**மகளிருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்**

சாதாரண Facial அழகுக்கலையின் அடிப்படைப் பயிற்சி, இந்து-கிறிஸ்தவ மணப்பெண் அலங்காரம் மற்றும் மடிசார் உட்பட 4 விதமாக சேலை அணியும் பயிலமர்வுகள்

காலம் : டிசெம்பர் 30ஆம், 31ஆம் திகதிகளில் காலை 9.30 - பி.ப.2.30 மணி வரை

இடம் : கலாலயா பயிற்சியகம், யாழ்ப்பாணம் (பெருமாள் கோயிலுக்கு அருகில்)

இருநாள்களுக்குமான கட்டணம் ரூபா 1000/= மட்டும்

(440543)(32-45-46) -பதிவாளர்


## யாழ்நகரில் நடைபாதை வியாபாரிகளுக்கிடையில் மோதல் ஒருவர் படுகாயம்

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் நடைபாதை வியாபாரம் செய்பவர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் தலையிலும், கைகளிலும் கொட்டன் அடிக்கு இலக்கானார்.

நேற்றுக்காலை 8.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அடம்பன் வீதி, குருநகரைச் சேர்ந்த பழனிச்சாமி சந்திரகுமார் (வயது17) என்பவரே படுகாயமடைந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-78)

## சாவகச்சேரி இந்து மாணவர்களுக்கு


யாழ்ப்பாணம்,டிசெ.26

சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவர்களுக்கான தேர்ச்சி அறிக்கை வழங்கலும், மாணவர்களின் பெற்றோருடனான சந்திப்பும் ஏற்கனவே அறிவித்தபடி நாளை செவ்வாய்க் கிழமை நடைபெறமாட்டாது என்றும்-

முதலாம்தவணை ஆரம்பிக்கப்படும் போது தேர்ச்சி அறிக்கைகள் வழங்கப்படும் என்றும்-கல்லூரி அதிபர் தெரிவித்தார். (எ)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 13 - 03 - 1949



உதிர்வு 06 - 01 - 2005

## அமரர் செல்லத்துரை பாலசிங்கம்

*எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்*
*ஊரினது கலங்கரை விளக்காய்*
*பொதுத்தாபனங்களின் இதயமாய்*
*மக்கள் நல்வாழ்வுக்குத் தன்னை*
*அர்ப்பணித்து எம்மை ஆறாத்துயரில்*
*ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட*
*எங்கள் அன்புத் தெய்வத்தின்*

*முதலாம் ஆண்டு நினைவஞ்சலி நாளை (27.12.2005) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அன்னாரின் ஆத்மசாந்திப் பிரர்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.*

**இன்பர் சிட்டி,**
**பருத்தித்துறை.** (44617)(32-45-46) **-குடும்பத்தினர்.**

# ஆழிப்பேரலையின் ஓராண்டு நினைவலைகள்




*அழியாத உங்கள் நினைவில்*
*ஓராண்டு சென்றுவிட்டதே!*
*பாசமும் நேசமும் பொங்கிட வளர்த்தேனே!*
*உங்கள் காலடிச் சுவடுகள்*
*இன்னும் மறையவில்லை*
*பாசத்தின் கரையின் தூரம்*
*கண்ணுக்கு எட்டவில்லை*
*காலத்தின் கோலமதால்*
*கடல் அன்னை சீற்றங் கொண்டு*
*உங்களைக் காவு கொண்டனையோ?*
*அப்பா நான் எங்கு செல்வேன் ஆறுதலுக்கு!*
*ஆயிரம் உறவிருந்தும் உங்கள் மூவருக்கும்*
*ஈடாக முடியாது அழுது புலம்புகின்றேன்!*
*அவனி உள்ளவரை அணையாது உம் நினைவு!*
**உங்களிற்கு இறைவன் ஆயத்தம்செய்த இல்லத்தில் வாழ தினமும் பிரார்த்திக்கின்றேன்.**

(44536)(33-32-45-46)

கட்டைக்காடு,
முள்ளியான்.
T.P.: 077 3268395

**பிரிவால் துயருறும்:**
**எ.கபிரியேல்பிள்ளை (ராசன்)**
**(கணவர் - அப்பா).**

# மரண அறிவித்தல்கள்

## சில்வெஸ்ரர் தருமலிங்கம்



காலஞ்சென்ற வேலாயுதம்-இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் எலிசபெத்நேசம் அவர்களின் அன்புக்கணவரும் முன்னாள் செனட்டர் A.V.இராஜேந்திரா முதலியார் அவர்களின் மருமகனுமான சில்வெஸ்ரர் தருமலிங்கம் **(Attony At Law)** 20.12.2005 கனடாவில் கரலமானார்.

அன்னார் புவனேஸ்வரி (டாக்டர் - நியூசிலாந்து), ராஜேஸ்வரி (டாக் டர்- இங்கிலாந்து), ஜெறாட் ஜெயக்குமார் (கனடா), சாவித்திரி (கனடா), சிறானிகுமாரி (லண்டன்), அன்ரன் ஜெயராஜ் (கனடா), மரீனாதர்சினி (பரிஸ்டர் - கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் டெஸ்மன் (டாக்டர்- நியூசிலாந்து), குழந்தைவேல் (டாக்டர்- இங்கிலாந்து), திருமதி ஜெறாட் ஜெயக்குமார், டன்ஸ்ரன், தியோபிலஸ் மலர்விழி ஆகியோரின் அன்பு மாமனாரும் தனலக்சுமி (மலர்), கனகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஐயாத்துரை, சந்திராவின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கனடா ரொறன்ரோ கத்தோலிக்க சேமக்காலையில் 28.12.2005 புதன்கிழமை நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

**ANTON THARUMALINGAM,**
**84, ROCHMAN BIVD,**
**SCARBORO,**
**ONTARIO MIH 152,**
**CANADA.** (44550)(32-46-45)

தகவல்:
**வே.கனகலிங்கம்,**
*171, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.*

## திருமதி பொலின் தம்பிப்பிள்ளை



கரம்பொன்னை பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்ப்பாணம் 14/2, கோயில் வீதியில் வசித் தவரும் தற்போது லண்டனில் வசிப்பவருமாகிய திருமதி பொலின் தம்பிப்பிள்ளை அவர்கள் நேற்று (25.12.2005) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் கிறிஸ்ரி தம்பிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பேதுருப்பிள்ளை- சிசிலியா ஆசிர்வாதம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற திருமதி றெஜீனா தம்பிப்பிள்ளையின் மருமகளும் கிறிஷா (லண்டன்), தர்ஷன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் டிலோஜன், ரானியா ஆகியோரின் அன்பு மாமியும் அருமை நாயகம் (கனடா), இலங்கநாயகம் (கொழும்பு), மதுரநாயகம் (கனடா), அருள்நாயகம் (அமெரிக்கா), கெலன் மனோகரி (கனடா), சவுந்தரநாயகம் (கனடா), கனகநாயகம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் டேவின் ஜேஷவா, ஜோஆனா டமிக்கா, ஜியோ வினா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**கிறிஸ்ரி தம்பிப்பிள்ளை** *(கணவர்)*
*தொ.பே: 0776639535*
*00441753545486 (மகள்)*
*00442083350642O (மகன்).*

*79, சப்பல் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*(44617)(32-45-46)*

நாட்டில் உருக்குக் கட்டுமானப் பணிகளில்
முன்னணியில் திகழும் நிறுவனம் ஒன்றுக்கு
பின்வரும் வேலைகள் தொடர்பான வடக்கு-கிழக்கில்
இருந்து
உப ஒப்பந்தகாரர்கள் தேவை

வெளிவாசல் கதவு (GATE) உற்பத்தியாளர்கள்
மின் ஒட்டுநர்கள்

தயவு செய்து உங்கள் விவரங்களைக் கீழ்கண்ட
முகவரிக்கு அனுப்பவும்.

விளம்பர இல. 2766
உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 16 - 08 - 1922

உதிர்வு 06 - 01 - 2005



**Dr.சபாரத்தினம் அருளம்பலம்** (பல் டாக்டர்)
(திதி:அபரபக்க ஏகாதசி)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்(திருக்குறள்)

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக....

66,அருளம்பலம் லேன்,
அரியாலை,யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
(44484)(18-34-13)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 05 - 11 - 1972

ஆழிப் பேரலையின் பிடியில் 26 - 12 - 2004



**திருமதி விஜயகுமார் புஸ்பலதா(ஆசிரியை)**

26.12.2004 அன்று ஆழிப்பேரலையில் அகப்பட்டு அமரர்களான யா/வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆசிரியை திருமதி விஜயகுமாரி புஸ்பலதா மற்றும் மாணவச் செல்வங்களான நவரத்தினம் ருக்சலா, தவராசா ரேவதி, யேசுதீபன் ஜெயப்பிரதா, அன்ரன் ரகுநாதன் மேரிநெல்சா, தவராசா அருள்ராஜ், லோகராசா சுமித்ரா, தவராசா சுலக்ஷ்ன், சின்னராசா சுவேந்தினி, யோகராசா அஜித்குமார், சிவகுமார் குமாரிக்கா ஆகியோரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இவர்கள் நினைவுடன்:
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(44502)(18-34-13)

## எமது உள்ளத்தில் உறைந்துள்ள அன்புத் தெய்வத்தின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 29 -06-1951
விண்ணில் 26-12-2004

அமரர்
**கிறிஸ்தோப்பிள்ளை இராயப்பு**

*எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய்*
*எம் மீது பாசமழை பொழிந்து - உம்*
*பிள்ளைகளை கண்கலங்காமல் காத்துவந்த*
*எம் அன்பு அப்பாவே - நாம்*
*என்றும் உங்களையே நினைத்திருக்க*
*நீங்கள் மட்டும் - எமை விட்டு*
*பிரிந்து சென்றதேனோ?*
*ஆன்டொன்று சென்றாலும் ஆறிடுமா - எம் கவலை*
*எம் உயிர் உள்ளவரை உம் நினைவு*
*எம்மோடு நிலைத்திருக்கும் எந்நாளும்!*
*உங்கள் ஆத்மா நித்திய வான் வீட்டில்*
*சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

வடமராட்சி கிழக்கு,
செம்பியன்பற்று வடக்கு,
செம்பியன்பற்று.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

(44380)(18-34-13)

## கூ.சங்கத்திற்குள் நாக பாம்பு

அரியாலை, டிசெ.26

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் களஞ்சியக் கட்டடத்தில் காணப்பட்ட சுமார் 8 அடி நீளமுடைய நாக பாம்பு அங்கு நின்ற தொழிலாளர்களினால் அடித்துக் கொல்லப்பட்டது. இச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்தப் பாம்பு அரிசி மூடைகளிடையே இருந்ததை தொழிலாளி ஒருவர் கண்டார். இதன் பின்னர் மற்றவர்களுக்குத் தெரிவித்தார். இதன் பின்னரே பாம்பு அடித்துக் கொல்லப்பட்டது.

இந்த நாக பாம்பு முற்றவெளிப் பற்றைப் பகுதியில் இருந்து வந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

(ஓ-17)

## கொதி எண்ணெய்பட்டு சிறுவன் காயம்

தென்மராட்சி,டிசெ. 26

கொதி எண்ணெய் தெறித்துப் பட்டதில் சிறுவன் காயமடைந்தான்.

கச்சாயைச் சேர்ந்த 13 வயதுச் சிறுவன் ஒருவனே இதில் காயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கொதி எண்ணெய்க்குள் போடப்பட்ட பலகாரம் வெடித்ததால் கொதி எண்ணெய் தெறித்துப் பாய்ந்து காயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஓ-117)

SALE SALE SALE SALE SALE SALE



நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு
காவேரியின்
மாபெரும் மலிவு விற்பனை
24.12.2005 முதல் 31.12.2005 வரை
புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட
* அனைத்து ரக சாறி வகைகள்,
* ஸ்கேட் & பிளவுஸ்,
* சல்வார், எலிபன்ட் கிட்ஸ்,
* சூட்டிங் & சேட்டிங் வகைகள்,
* சிறுவர் சிறுமியர்களுக்கான றெடிமேட் ஆடைகள் அனைத்தும்
மலிவு விலையில்.....
காவேரி சில்க்ஸ்
48, பெரியகடை, யாழ்ப்பாணம்.
222-2533
(சி.47009) (39)

நாதன்ஸ் யாழ்ப்பாணம்
பிரசன்னா, லைலா
உங்கள் பிரகாஷ்ராஜ் வழங்கும்
கண்ட நாள் முதல்
காட்சி நேரம்:
10.30, 2.00, 5.15, 8.15

மனோகரா யாழ்ப்பாணம்



இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சூர்யா, திரிஷா, வடிவேல் நடித்த
ஆறு
காட்சி நேரம் - 10.30, 1.30, 4.30, 7.30, 10.30

நாகம்ஸ் சுன்னாகம்
பிரசன்னா, மீராஜஸ்மின் நடித்த
கஸ்தூரிமான்
தினசரி: புது நேரம்
11.30, 1.30, 4.30, 7.30

ராஜா யாழ்ப்பாணம்
விஜய், ஜோதிகா, விவேக்
நடித்த
திருமலை
காட்சிநேரம்: பு.நே. 10.30, 2.30, 6.30

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் அருளம்பலம்

(இளைப்பாறிய அதிபரும் அகில இலங்கை சமாதான நீதிவானும்)



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வடக்கு புன்னாலைக்கட்டுவனை வதிவிடமாகவும் தற்போது இல.125,வவுனியா,பண்டாரிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் அருளம்பலம் 24.12.2005 சனிக்கிழமை வவுனியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம்-சின்னாச்சி பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் இலங்கைநாயகம்(அமரர்),அன்னபூரணம்(அமரர்),அன்னம்மா,மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் புவனேந்திரன்(சுவிஸ்),ராஜேஸ்வரி(ஆசிரியை,யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி), பத்மநாதன்(சுவிஸ்),சந்திரேஸ்வரி(அத்தியடி),சண்முகநாதன்(கனடா),திலகேஸ்வரி(பிரான்ஸ்),வசந்தராஜன்(நோர்வே),சூரியகுமார்(சுவிஸ்),சந்திரகுமார்(HNB வவுனியா,அகில இலங்கை சமாதான நீதிவான்),கனகாம்பிகை(ஜேர்மனி),ஞானாம்பிகை(ஆசிரியை,யா/வண்ணை நாவலர் மகாவித்தியாலயம்)ஆகியோரின் பாசமிகு தந்தையும் காஞ்சனமாலா(சுவிஸ்),காலஞ்சென்ற புவனராஜகுகன்(தெல்லிப்பழை),சரோஜினி(சுவிஸ்),பாலசிங்கம்(அத்தியடி),அஜந்தி(கனடா),குலசேகரம்(பிரான்ஸ்),இராஜேஸ்வரி(நோர்வே),மகேஸ்வரி(சுவிஸ்),நாகேஸ்வரி(வவுனியா),தேவதாஸன்(ஜேர்மனி),ஜெகதீஸ்வரன்(HNB,யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனும் திருமதி அபிராமி கிருஷான்(லண்டன்),காலஞ்சென்ற அனந்தன்(சுவிஸ்),சிவாகினி,சுபாகினி(கந்தர்மடம்),பார்க்கவி(சுவிஸ்),கோபிநாத்(கனடா),ரோகினி(அத்தியடி),பிரவீன்,பிரசாந்(கனடா),ஆரணி(பிரான்ஸ்),சரவணன்,மயூரன்,துர்க்கா(நோர்வே),பகலவன்(சுவிஸ்),கீர்த்திகா,தக்ஷனா,திலக்ஷன்(வவுனியா),ஜேசுதன்,தருஷன்,தர்ஷனா(ஜேர்மனி),ஆரபி,சாம்பவி(கலட்டி)ஆகியோரின் அன்புப் பேரனும் இசானியின்(சுவிஸ்) அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார் ,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

45, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம், 222 5229
125, பண்டாரிக்குளம், வவுனியா.
024 222 3442

(44629)
(18-34-13)

தகவல்:
*ரீ.ஜெகன் (மருமகன்),*
*வசந்தி (மகள்).*

## முன்பள்ளி திறப்பு

வடமராட்சி மேலைப் புலோலியில் ஆழிப் பேரலை அனர்த்தப் பணிமனையின் அனுசரணையுடன் கியூமெடிக்கா நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்ட சதாவதானி முன்பள்ளிக்கட்டடம் இன்று திங்கட்கிழமை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் சட்டத்தரணி என்.தங்கராஜா , கியூமெடிக்கா நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர், பருத்தித்துறை பிரதேச செயலாளர் உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(எ-7)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 19-11-1951
மறைவு 26 -12-2004

**அமரர் மயில்வாகனம் பாலச்சந்திரன்**
(சாரதி)
*(வானர் குடியிருப்பு ,புலோலி வடமேற்கு, பருத்தித்துறை)*

*அலைகடல் சென்ற எம் ஆருயிர் பாலா*
*ஆண்டொன்று ஆகிவிட்டது நீர் எம்மை விட்டுச் சென்று*
*நீங்கவில்லை உம் நினைவு எம்மைவிட்டு*
*என்றும் உங்கள் நினைவுடன் வாழும்...*
*அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அன்று கடல் அலையின் மடியில் மாண்ட அனைவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

சென்தோமாஸ் ரான்ஸ்போட்
கடற்கரை வீதி, பருத்தித்துறை.

பிறான்ஸ்சிஸ் றேடர்ஸ்
கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

பிறான்ஸ்சிஸ் றேடர்ஸ்
பிரதான வீதி,
பருத்தித்துறை.

(44184)
(18-34-13)

## அமைச்சர் டக்ளஸ் கண்டனம்

நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலையானது வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டிய ஒன்றாகும். இப்படுகொலை யாரால் நிகழ்த்தப்பட்டிருந்தாலும் அது கண்டனத்திற்குரியதே இவ்வாறு ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவனாந்தா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் அவர்களின் கொலை தொடர்பாக விடுத்துள்ள கண்டனச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வடக்கிலும், கிழக்கிலும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் அரசியல் படுகொலைகளின் வரிசையில் இப்பொழுது நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலையும் இடம்பிடித்துள்ளது துரதிஷ்டமானதாகும், யுத்த நிறுத்த உடன்படிக்கை அமுலிலுள்ள காலத்தில் இவ்வாறான படுகொலைகள், சமாதானத்தின் மீது நம்பிக்கையற்று யுத்த முனைப்புகளில் ஈடுபட்டு வருபவர்களாலேயே மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

- எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## வெட்டுக் காயத்துடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் அயலில் குடியிருப்போர் கூறினர்.

மல்லாகம் நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் சம்பவம் நடைபெற்ற இடத்தில் சடலத்தைப் பார்வையிட்டு அதனைப் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ஒ-6-7-11-14-29)

## குரும்பசிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டது எனவும் -

காலையில் சென்றுபார்த்தபோது இருவருமே இறந்த நிலையில் வீதியில் காணப்பட்டனர் என்றும் அந்தப் பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் கூறினர்.

இரண்டுபேரின் உடல்பகுதி முழுவதும் பல சன்னங்கள் துளையிட்ட அடையாளங்கள் காணப்பட்டன. மல்லாகம் நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் சடலங்களை நேரில் பார்வையிட்டு விசாரணைகளை நடத்தியதுடன், பிரேத பரிசோதனையின் பொருட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அவற்றை ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார். (க-11)

## புதுடில்லியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியன குறித்து ஜனாதிபதியுடன் பேச்சுக்களை நடத்துவதே உத்தேசச் சந்திப்பின் நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை மற்றும் நோர்வே வெளிவிவகார அமைச்சுக்களின் நேரடி ஒத்துழைப்புடனேயே அமைதிப் பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டும், விசேட தூதுவர் என்ற தனியொருவரின் கீழ் இந்தப் பேச்சுகளை நடத்தத் தேவையில்லை என சாரப்பட இலங்கை அரசு முடிவு செய்திருப்பதே மேற்படி சந்திப்பிற்கு ஜனாதிபதி மறுத்துவிட்டதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் நோர்வே மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சர்களுக்கிடையிலான நேரடிப் பேச்சுகள் ஹொங்கொங்கில் இடம் பெற்றன. அதில் எரிக் சொல்ஹெய்ம் கலந்து கொள்ளவில்லை.

அதில் கலந்துகொண்ட நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜெனாஸ் ஸ்ரோரர், இலங்கை வெளிவிவார அமைச்சர் மங்கள சமரவீரவிடம், வேறொரு விசேட தூதுவரையும் அனுசரணைக்குழு ஒன்றையும் நோர்வே நியமிக்கத் திட்டமிட்டுள்ள போதிலும் சமாதானப் பணிகளின் பிரதான பங்களிப்பை எரிக் சொல்ஹெய்மே தொடர்ந்தும் மேற்கொள்வார் எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி மஹிந்த - எரிக் சொல்ஹெய்ம் இடையிலான உத்தேச சந்திப்பு இடம்பெறாமல் போவது சமாதான முன்னெடுப்புகளில் பெரும் தாக்கத்தையும், தாமதத்தையும் ஏற்படுத்தி உள்ளது என அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது. (க)

## பதற்றத்தின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறும் நத்தார்கொண்டாட்டங்கள் சோபையிழந்திருந்தன. வீதிகளில் நடமாட மக்கள் அஞ்சி வீடுகளிலேயே தங்கியதால் நத்தார் தினம் இம்முறை களைகட்டவில்லை. (ஒ)

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர் காணாமற் போயிருந்தனர். அவர்களில் ஒருவரின் சடலமே நேற்றுக்காலை கரை ஒதுங்கிய போது கண்டெடுக்கப்பட்டதாக மன்னார் பொலீஸார் தெரிவித்தனர். (ஒ-6)

## கிரனேட்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கு ஏற்பட்ட சேதவிவரங்கள் உடனடியாகத் தெரியவரவில்லை. எனினும் இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து இராணுவத்தினர் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அத்துடன் அப்பகுதி முழுவதை யும் சுற்றிவளைத்துத் தேடுதலும் நடத்தினர்.

வைத்தியசாலைக்கு வந்து சென்றவர்கள் தவிர வீதியில் சென்ற அனைவரும் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். குண்டுத் தாக்குதல்களைத் தொடர்ந்து, வைத்தியசாலை முன்பாக உள்ள தனது வீட்டில் இருந்த வல்வை சிதம்பராக் கல்லூரி மாணவர் ஒருவர் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டார். எனினும் அவர் பற்றிய விவரங்களை அங்கிருந்த பொதுமக்கள் தெளிவுபடுத்தியதை அடுத்து படையினர் அவரை விடுவித்தனர்.

இந்தச் சம்பவத்தால் அப்பகுதியூடான வாகனப் போக்குவரத்து பல மணி நேரங்களுக்குத் தடைப்பட்டிருந்தது. (ம-6-70)

## நடிகை பானுமதி காலமானார்



பிரபல திரைப்பட நடிகை பானுமதி (வயது-80) நேற்று முன்தினம் இரவு சென்னையில் காலமானார். நடிகையாக, பாடகியாக, இசையமைப்பாளராக, தயாரிப்பாளராக, எழுத்தாளராக நடனப் பெண்மணியாக, டைரக்டராகப் விளங்கிய நடிகை பானுமதி ராமகிருஷ்ணா, பத்மபூஷன் விருது பெற்றவர். ஆந்திராவில் ஓங்கோல் என்னுமிடத்தில் பிறந்த இவர் சுவர்க்கசீமா என்னும் தெலுங்குப் படத்தின் மூலமாக அறிமுகமானார். ரங்கோன் ராதா, அபூர்வ சகோதரர்கள், மலைக்கள்ளன், தாய்க்குப்பின் தாரம், அம்பிகாபதி, கள்வனின் காதலி, அலிபாபாவும் நாற்பது திருடர்களும், நாடோடி மன்னன், பத்துமாத பந்தம், அன்னை போன்ற படங்ளில் நடித்து வெற்றி வாகை சூடினார். எம்.கே.ராதா, நாகேஸ்வரராவ், எம்.ஜி.ஆர்., சிவாஜிகணேசன், என அந்நாளைய முன்னணி நட்சத்திரங்கள் அனைவருடனும் நடித்துள்ளார்.

இளைய தலைமுறையில் நடிகர் பிரசாந் நடித்த செம்பருத்தி திரைப்படத்தில் நடிகை பானுமதி முக்கிய வேடம்தாங்கியிருந்தார். (ஒ)

## நான்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளைமோர் தாக்குதலை யடுத்து வீடுவீடாகச் சென்று படையினர் தேடு தலை நடத்தியதுடன் மக்களையும் கடுமையாகத் தாக்கியிருந்தனர். படையினரின் இந்தக் காட்டுமிராண்டித் தனத்தின்போது குறித்த ஐவரும் காணாமல் போயிருந்தனர் என்றும் கூறப்பட்டது.

இந்நிலையில் நேற்று நண்பகல் அளவில் இவர்களது சடலங்கள் எரியூட்டப்பட்ட நிலையில், மீட்கப்பட்டுள்ளன.

வீட்டுக்குள் துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்துக்கொண்டு நுழைந்த சீருடையினர் இவர்களை வெட்டிச் சுட்டுக் கொன்றுவிட்டு வீட்டுக்குள் இருந்த தளபாடங்கள் மற்றும் பொருள்களை போட்டு எரித்துள்ளனர்.

சிறுபிள்ளையின் கால் ஒன்றும், பெரியவர்களின் கால் ஒன்றும் மட்டுமே எஞ்சி இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (க-6)

## இன்று முதல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிப்புறக்கணிப்பிற்கான அழைப்பில், சிங்கள படைகளின் அராஜகங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து இயல்பு வாழ்க்கையையும் மனித கௌரவத்தையும் வென்றெடுக்க வேண்டும். எமது பாதுகாப்பை உறுதி செய்யும் வரை இயல்பு வாழ்க்கைக்கு உத்தரவாதம் வழங்கும்வரை இன்று திங்கட்கிழமை முதல் அரச பணியாளர்களாகிய நாம் பணிப்புறக்கணிப்பினை தொடர்சியாக மேற்கொள்வோம். உடனடி மனிதாபிமானப் பணிகள் தவிர்ந்த அனைத்துப் பணிகளையும் புறக்கணிப்போம். இப்பணிப் புறக்கணிப்பிற்கான ஒத்து ழைப்பை அரச பணியாளர்கள் மற்றும் அனைவரும் வழங்க வேண்டும் என்றும் கோருகின்றோம்- என்று தமிழ்த் தேசிய தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பு கேட்டுள்ளது.

இதேவேளை, அரச படைகளினதும் ஒட்டுக் குழுக்களினதும் அராஜக நடவடிக்கைகளைக் கண்டித்து நாளை செவ்வாய்க்கிழமை துக்கதினம் அனுஷ்டிக்குமாறு யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

இது குறித்து பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த சில நாள்களாக தமிழ் மக்கள் சிங்களப் படைகளால் கண்மூடித்தனமாகக் கொல்லப்படுகிறார்கள். பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்படுகிறார்கள். அவமானப்படுத்தப்படுகிறார்கள். முதியோர், சிறுவர் என்ற பேதமின்றி தாக்கப்படுகிறார்கள். ஸ்ரீலங்கா படையினரது அடாவடித்தனத்தால் கடந்த இரு நாள்களில் மட்டும் எட்டுப் பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா படையினரும் அவர்களை அண்டிவாழும் துரோக ஒட்டுக்குழுக்களும் தமிழ் மக்களால் வெறுக்கப்படுகிறார்கள், மக்களை பாதுகாப்பதற்கல்ல - தமிழ் இனத்தை அழிப்பதற்காகவே தெருவெங்கும் சந்திக்குச் சந்தி படையினர் குவிக்கப்பட்டுள்ளனர் என்பது தெளிவாகிவிட்டது.

அத்துடன், சிங்களப் படைகளும், அவர்களது எடுபிடிகளுமாகிய ஒட்டுக்குழுக்களும், ஜனநாயகப் பதாகையை உயர்த்தி தமிழ் மக்களது மனித உரிமைகளுக்காக நாடாளுமன்றத்திலும், அனைத்துலக அரங்கிலும் குரல் கொடுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களை கொல்லும் கொடூரத்தை தொடங்கிவிட்டனர்.

தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ் மக்களுக்காக ஜனநாயக வழியில் போராடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் மதிப்பிற்குரிய அமரர் ஜோசப் பரராஜசிங்கம், கிறிஸ்துமஸ் ஆராதனையின்போது தேவாலயத்திற்குள்ளேயே சுட்டுக்கொல்லப்பட்டார். அவருடன் சென்ற அவரது மனைவியாரும் மற்றும் பொதுமக்களும் சுடப்பட்டு படு காயத்திற்குள்ளாகியுள்ளனர்.

மனிதத்தை மிதித்துவிட்டு கோழைத்தனமாக ஸ்ரீலங்கா படையின் உயர்பீடத்தினால் திட்டமிடப்பட்டு, கொலையாளிகளுக்கு பாதுகாப்பை படையினர் வழங்க கொலைவெறியினரால் ஜோசப் பரராஜசிங்கம் கொல்லப்பட்டமை மிலேச்சத்தனமானதாகும்.

சிங்களப் படைகளால் கோரமாக கொல்லப்பட்ட எமது உடன் பிறப்புகளை மனதில் இருத்தி துக்க நாளாக, நாளை செவ்வாய்க் கிழமை அனைத்து அரசாங்க, கூட்டுறவு, அரச சார்பற்ற அலுவலகங்களில், வர்த்தக நிலையங்களில், சனசமூக நிலையங்களில், வீடுகளில் கறுப்புக் கொடிகட்டி, மக்கள் கூடும் இடங்களில் துக்க இசையை ஒலிபரப்பி எமது துயரத்தை வெளிப்படுத்துவோம் - என்றுள்ளது. (ஒ-6)

## யாழ். நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைத்து அடையாளம் காட்டினர்.

கடமைக்குச் சென்ற அவர்கள் பின்னர் வீடு திரும்பவில்லை என்று கண்டதை அடுத்து தேடியபோதே அவர்கள் கொல்லப்பட்டமை அடையாளம் காணப்பட்டுள்ளது என பொலீஸார் தெரிவித்தனர்.

"எனது மகன் யாழ். மத்திய கல்லூரியில் இரவுக் காவலாளியாகக் கடமை புரிந்து வந்தவர். பிற்பகல் மாலை 5 மணி யளவில் கடமைக்குச் செல்வார். காலை 8.30 மணியளவில் வீட்டிற்கு வருவார். ஆனால், நேற்றுக் காலை அவர் வரவில்லை. அவர் இறந்தார் என்ற செய்தியே கிடைத்தது."

- இவ்வாறு மரணமடைந்த கிருஷ்ணன் விமலேஸ்வரன் என்பவருடைய தாயாரான திருமதி கிருஷ்ணர் செல்லம்மா தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் தெரிவித்ததாவது:-

எனக்கு இரண்டு பிள்ளைகள் மட்டுமே உள்ளனர். அவர்களில் இவர்தான் மூத்தமகன். இவருடைய உழைப்பையே நம்பி நாம் வாழ்க்கையை நடத்தி வந்தோம். கடந்த மூன்று மாதத்திற்கு முன்னரே எனது மகனுக்கு நிரந்தர பணி நியமனம் கிடைக்கப்பெற்றது.

இப்பொழுது இராணுவத்தினரால் சுடப்பட்டுள்ளார். எனது மகனின் இறந்த உடலைக்கூட தருவதற்குப் பின்னடிக்கின்றார்கள். - என்று தாயார் தன் கண்களில் நீர் வடியக் கூறுகின்றார்.

மற்றைய நபரான பாலசிங்கம் சந்திரகுமார் மானிப்பாயைச் சேர்ந்தவர். அவர் கொட்டடியில் உள்ள கராஜ் ஒன்றில் பணியாற்றிவந்துள்ளார். அவர் எவ்வாறு இந்தச் சம்பவத்திற்குள் சிக்கிக் கொண்டார் என்று தெரியவரவில்லை.

ஏனைய மூவரதும் சடலங்கள் நேற்று மாலை வரையும் அடையாளம் காணப்படவில்லை. தொடர்ந்தும் வைத்தியசாலை பிரேத அறையில் அவை வைக்கப்பட்டுள்ளன. (ம-14-15-86)

## படுகொலையுண்ட ஜோசப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை - அதுவும் அரச படைகளின் உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள தேவாலயத்தில் ஆராதனையில் ஈடுபட்டிருந்த சமயம் அவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டமை - தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையைப் பெரும் சீற்றத்துக்குள் ஆழ்த்தியிருப்பதாகத் தெரிகின்றது.

ஜோசப் எம்.பியின் மறைவை ஒட்டி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரன் ஒப்பமிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சுயநலவாழ்வைத் துறந்து, பொதுநல சேவையை இலட்சியமாக வரித்து, அந்த உயர்ந்த இலட்சியத்திற்காக உறுதியோடு உழைத்த ஓர் உத்தம மனிதரை இன்று தமிழீழ தேசம் இழந்து விட்டது. தமிழீழ மண்ணினதும், தமிழீழ மக்களினதும் விடிவிற்காக ஓயாது ஒலித்த ஓர் உரிமைக் குரல் இன்று ஒடுங்கிவிட்டது. பகைவனின் கோழைத்தனமான - கோரமான- தாக்குதலுக்கு ஒரு மகத்தான மனிதர் பலியாகிவிட்டார். இது, தமிழீழ விடுதலை வரலாற்றில் நிகழ்ந்த மாபெரும் துயர நிகழ்வு.

ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் ஓர் அபூர்வமான மனிதர், அசாத்தியமான குணவியல்புகள் கொண்டவர். இனிமையான பேச்சும், எளிமையான பண்பும், பெருந்தன்மையான போக்குமே அவரது ஆளுமையின் சிறப்பியல்புகள். நெஞ்சில் உறுதியும், நேர்மையும் கொண்ட ஓர் உன்னதமான அரசியல்வாதி. தமிழீழ மக்களால் பெரிதும் போற்றப்பட்ட சிறந்த மனித உரிமைப் போராளி. அனைவரையும் கவர்ந்த ஒரு தமிழினப் பற்றாளர். இவரது சாவு தமிழர் தேசத்திற்கு என்றுமே ஈடு செய்யமுடியாத பேரிழப்பு.

பௌத்த-சிங்கள பேரினவாதத்தின் அடக்கு முறைக்குள் வாழ அவர் என்றும் விரும்பியதில்லை. இந்த அடக்கு முறைக்குள் தமிழீழ மக்களது வாழ்வு சிக்குண்டு, சிதைந்து போவதை அவர் அறவே வெறுத்தார். இந்த அடக்கு முறையில் இருந்து தமிழீழ மக்கள் முற்றாக விடுபட்டு, விடுதலை பெற்று, சுதந்திரமாக, கௌரவமாக, நிம்மதியாக வாழ்வதையே தனது வாழ்வின் இலட்சியமாக அவர் வரித்துக் கொண்டார். இந்த இலட்சியத்தால் உந்தப் பெற்று தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு என்றும் உறுதுணையாக நின்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் அதன் இலட்சியத்தையும் முழுமையாக முழுமனதுடன் ஏற்று தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்குப் பெரும் பங்களிப்புச் செய்தார். பல்வேறு சிக்கலான சூழ்நிலைகளில் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கும், ஆபத்துகளுக்கும் மத்தியில் மிகுந்த துணிவுடன் தமிழ்த் தேசியத்திற்கும், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் பல்வேறு வழிகளில் கைகொடுத்து உதவினார். மட்டக்களப்பு மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினராகவும், வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் நிறுவுநர்களில் ஒருவராகவும், தமிழீழ மக்களது உரிமைக்காக இடையறாது தொடர்ந்து உழைத்தார். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயங்களையும், உண்மைகளையும் உலகுக்குப் பரப்புரை செய்தார். அன்னார் ஆற்றிய அரும்பணிகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. என்றுமே பாராட்டுக்குரியவை.

ஜோசப் பரராஜசிங்கம் அவர்களின் இனப் பற்றிற்கும் விடுதலைப் பற்றிற்கும் மதிப்பளித்து அவரது விடுதலைப் பணியைக் கௌரவிக்கும் முகமாக "மாமனிதர்" என்ற அதியுயர் தேசிய விருதை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகிறேன். சத்திய இலட்சியத்துக்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களைச் சாவு என்றும் அழித்துவிடுவதில்லை. சரித்திர நாயகனாக எமது தேசத்தின் ஆன்மாவில் அவர் என்றும் வாழ்வார்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" - என்று உள்ளது.

CATWAS.COM
COMPUTER ACADEMY
No.26, Somasundram Avenue, Chundukuli, Jaffna.
TP: 021 222 3805
ONE MONTH DIPLOMA COURSES
Ms Office 1500/=
DTP 1750/=
Hard Ware 1500/=
இன்று மட்டும் பதிவை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு அனுமதிக் கட்டணம் இலவசம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.12.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# பொதுக்கட்டமைப்பு சீர்குலைந்ததால் வாழ்வியல் நெருக்கடிக்குள் தமிழ்மக்கள்!

செவ்வி
குகா, அற்புதன்

✱ **கேள்வி :** ஆழிப்பேரலை அனர்த்தம் இடம் பெற்று ஒரு வருடம் பூர்த்தியாகின்ற நிலையில் தமிழர் தாயகத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை நிலை எப்படியிருக்கிறது?

• பதில்: ஆழிப்பேரலையால் எமது தமிழீழத்தினுடைய கரையோரப் பிரதேசம் முழுமையாகவே அழிந்த நிலைதான் ஏற்பட்டது.

இந்த மக்கள் முன்னரும் யுத்தத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, இடம் பெயர்ந்து தொழில் வசதிகள், இருப்பிட வசதிகள் எல்லாவற்றையுமே இழந்து மீண்டும் அந்த மக்கள் அந்தப் பகுதிகளில் குடியேறி தமது வாழ்கையை மெல்ல மெல்ல ஒழுங்கமைத்துக்கொண்டு வந்தார்கள்.

அந்த நிலையில் ஆழிப்பேரலை வந்து அவர்களது வாழ்க்கையை முற்றாகவே

✱ கேள்வி : பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான மூன்று கட்டப்பணிகள் எப்படியிருந்தன?

**சர்வதேச உதவிகள் முடக்கம்**

• பதில் : உடனடி மீட்புப்பணிகளை விடுதலைப் புலிகளின் கட்டமைப்புகளும் தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் இணைந்து மேற்கொண்டன.

இரண்டாம் கட்டமாக அவர்களுக்கு தற்காலிக குடியிருப்புக்களை அமைத்து ஆறுதல்படுத்துகின்ற பணிகளைக் கூட புனர்வாழ்வுக்கழகம், புலம்பெயர்ந்த மக்களின் உதவி, சர்வதேச நிறுவனங்கள் என்பவற்றுடன் எங்களுடைய கட்டமைப்புகளும் இணைந்தே மேற்கொண்டன.

மூன்றாவது கட்டமான மறுவாழ்வு, மீள் கட்டமைப்பு, மீள்குடியேற்றப் பணிகளுக்கு

**அரசாங்கம் தன்னுடைய பணிகளை காட்டும் நோக்கோடு தங்களுக்குக் கிடைத்த பெருமளவு நிதியில் ஒரு சிறு பகுதியை தமிழர் தாயகப் பகுதிகளுக்குக் கிள்ளித் தெளிக்கிறது.**

நாசமாக்கி விட்டது. உடுத்த உடைகூட இல்லாமல் நிர்க்கதிக்குள் ளாக்கி எமது மக்கள் பெரிய அவலத்தைச் சந்தித்தனர்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தென்கிழக்காசிய நாடுகள் அனைத்துக்குமே உலக நாடுகள் பெருமளவான உதவிகளை வழங்கின. அந்த உதவிகளை எமது மக்களுக்கு கொண்டு வருவதற்கு நாங்கள் எடுத்த சகல முயற்சிகளும் முடக்கப்பட்டன.

**கட்டமைப்புக்கு இணங்கினோம்**

எமது தலைவரின் பணிப்புக்கு இணங்க ஸ்ரீலங்கா அரசோடு நாங்கள் ஓர் இணைந்த கட்டமைப்பை உருவாக்கச் சம்மதித்தோம். சர்வதேச சமூகமும் அதனை எதிர்பார்த்தது. எனவே, எமது தலைவரின் இணக்கப்பாட்டை தெரிவித்து தாமதமின்றி, கட்டமைப்பை உருவாக்குவதில் அக்கறையாக இருந்தோம்.

அந்த விடயத்தில் இருதரப்பும் விவாதித்துக்கொண்டிருந்த நிலையில் நோர்வே தரப்பு நடுநிலையான ஒரு பொதுக்கட்டமைப்புக்கான வரைபைச் சமர்ப்பித்தது. அதில் கூட பல குறைபாடுகள் இருந்தன. அது முழு அளவில் எமக்குத் திருப்தியைத் தரவில்லை.

எனினும், எமது மக்களுக்கான மனிதாபிமானப் பணிகளை முன்னெடுக்கவேண்




டும் என்ற ஒரே நோக்கத்திற்காக எமது தலைவர் அதற்கு இணங்கம் தெரிவித்தார். அதற்குப்பின்னரும் இலங்கை அரசாங்கம் அதனை மாற்றியமைக்கவேண்டும் என்று விடாப் பிடியாக நின்று பெரிய நெருக்கடிகளைக் கொடுத்து திருத்தங்களைச் செய்தது.

அவர்கள் திருத்தம் செய்த நிலையிலும் நாங்கள் அதனை ஏற்றுக்கொண்டு ஒப்பமிடும் நிலைக்கு வந்தோம். அதுவும் கிட்டத்தட்ட ஆறுமாதம் வரை இழுத்தடிக்கப்பட்டு கடைசியில் சர்வதேச அழுத்தங்கள், நிர்ப்பந்தங்களுக்குப் பணிந்து அவர்கள் ஒப்பந்தத்துக்கு வந்தார்கள்.

ஒப்பந்தம் செய்து சில நாள்களிலேயே அதனை முடக்குவதற்கான சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கிவிட்டார்கள். சட்டரீதியான தடை ஒன்றை வைத்து அதன் மூலம் பொதுக்கட்டமைப்புக்கு இறுதியாக இருந்த கொஞ்ச நஞ்ச உயிரையும் இல்லாமல் செய்து விட்டார்கள்.

சுனாமியால் பேரவலத்தைச் சந்தித்த மக்கள் தற்போது ஏற்பட்ட மழை வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டு ஒரு வாழ்வியல் நெருக்கடியைச்சந்தித்து நிற்கிறார்கள். அவர்களுக்கான மறுவாழ்வுப்பணிகள் எவையுமே பெரியளவில் முன்னெடுக்கப்படவில்லை.

நிச்சயமாக சர்வதேச உதவிகள் பாரியளவில் தேவை. அதற்காகத்தான் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அதனை அரசு சீர்குலைத்த நிலையில் எமது மக்களுக்கு பலத்த நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

ஆழிப்பேரலை



## சுனாமி நிவாரணத்திலும் போலித்தனம்; அரசைச் சாடுகிறார் தமிழ்ச் செல்வன்

யால் எமது மக்களிடம் இருந்த கொஞ்ச நஞ்ச கட்டமைப்பும் இல்லாமற்போய் விட்டது. வீதி அமைப்புகள், மீன்பிடித் துறைமுகங்கள், குடியிருப்பு வசதிகள் அனைத்து அடிப்படைக் கட்டுமானங்களும் செயலிழந்த நிலையில்தான் இந்த மக்களுடைய வாழ்வு இருக்கிறது.

இப்போது சர்வதேச நிறுவனங்கள் ஓரளவுக்கு - சிறு அளவில் - அந்த வேலைத்திட்டங்களைத் தொடங்குகிறார்களே ஒழிய அது பூரண திருப்தி அளிக்கும் வகையில் இல்லை.

எமது மக்களுக்கான சர்வதேச உதவிகள் முடக்கப்பட்டிருப்பதால் திட்டமிட்ட முறையில் மறுவாழ்வுப் பணிகளை ஆரம்பிக்க முடியாத நிலையில் நாங்கள் இருக்கின்றோம்.

✱ கேள்வி: தமிழர் தாயகப்பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தின் உதவிகள் வேறு வகையில் கிடைக்கின்றனவா?

**கிள்ளித் தெளிக்கிறது அரசு!**

• பதில் : அரசாங்கம் தன்னுடைய பணிகளை காட்டும் நோக்கோடு போலித் தனமாக தங்களுக்குக் கிடைத்த பெருமளவு நிதியில் ஒரு சிறு பகுதியைக் கிள்ளித் தெளிக்கிறது.

அரசாங்க செயலகங்கள் ஊடாக சிறு அளவில் எமது மக்களுக்கு செய்திருக்கிறார்கள். குடியிருப்பு வசதிகளுக்கு இரண்டரை லட்சம் ரூபா தரப்படும் என்று சொல்லப்பட்டு படிப்படியாக கொடுக்கின்றார்கள். அது கூட திட்டமிடப்படாத முறையில் ஏதோ கடமைக்கு தள்ளிவிட்டதுபோல் தான் இருக்கிறது.

அது உண்மையிலேயே அந்த மக்களின் குடியிருப்புகளை அமைக்க போதாது. அந்தப் பணத்தை மக்கள் வேறு தேவைகளுக்கு - தங்களுடைய அவசர தேவைகளுக்கு பயன்படுத்தி விட்டுத்தான் இருக்கிறார்கள்.

வெளிநாட்டு உதவிகளைக் கவர்ந்திழுப்பதற்கான ஒரு நடவடிக்கையைத்தான் அரசு இங்கு செய்திருக்கிறதே தவிர, எமது மக்களுக்கான முழு அளவிலான - நிறைவான - திட்டமிடலோடு ஒழுங்கமைக்கப்பட்ட வேலைத்திட்டத்துக்கு உதவியளிக்க மறுத்து அதனை சீர்குலைக்கின்றார்கள் என்பதுதான்

உண்மை.

✱ கேள்வி: ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கான செயலணிக்குழு அமைக்கப்பட்டது. அதில் உங்களுடைய பிரதிநிதியும் இடம் பெற்றிருந்தார். அந்தச் செயலணியின் செயற்பாடு எப்படியிருக்கிறது?

**அரசின் செயல்களால் செயலணிகள் சீர்குலைவு!**

• பதில் : ஒவ்வொரு மாவட்டத்திலும் நாங்கள் அப்படியான செயலணியை உருவாக்கி னோம். அதாவது, எமது பிரதிநிதிகள், அரசாங்கத்தின் பிரதிநிதிகள், சர்வதேச நிறுவனங்கள், புனர்வாழ்வுக்கழகம், மக்கள் அமைப்புகள் எல்லாம் உள்ளடக்கப்பட்டு ஆரம்பக் கட்டப்பணிகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டன.

பின்பு இலங்கை அரசின் திட்டமிட்ட குழப்ப நடவடிக்கையின் காரணமாக இப்பொழுது எல்லாமே சீர்குலைந்த

நிலையில்தான் இருக்கிறது.

இருந்தாலும் எமது திட்டமிடலுக்கும் அபிவிருத்திக்குமான செயலகம் ஆங்காங்கே எமது கட்டமைப்புகளை நிறுவி உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்களை ஒருங்கிணைத்து ஓரளவுக்கு மக்களை ஆறுதல்படுத்

**ஜனாதிபதி தன்னை ஒரு மனிதாபிமானமுள்ள தலைவனாகக் காட்டிக் கொள்வதற்காக போலித்தனமான அறிவிப்புக்களை வெளியிடுகிறார். ஆனால், எமது மக்களுக்கு அதனால் எந்தவிதமான நன்மையும் இதுவரை வந்து சேரவில்லை.**

துவதற்கான சில முயற்சிகளை இப்போது செய்து கொண்டிருக்கிறது.

✱ கேள்வி : அரசசார்பற்ற நிறுவனங்களின் பணிகள் எப்படியிருக்கிறது?

**சர்வதேச நிறுவனங்களுக்கு அரசு நெருக்கடி!**

• பதில்: அரசார்பற்ற நிறுவனங்கள் உற்சாகமாக இருந்து பலவேலைத்திட்டங்களை முன்னெடுக்கத் திட்டமிட்டார்கள். ஆனாலும் சர்வதேச உதவிகள் முழுவதும் அரசு மட்டத்திலேயே திருப்பப்பட்டதால் முழு அளவிலான மறுவாழ்வு, மீள் குடியேற்றப் பணிகளை செய்வதற்கு அரசசார்பற்ற நிறுவனங்களிடம் போதிய நிதி இருக்குமோ என்பது கேள்விக்குறிதான்.

ஆனாலும், அவர்கள் செய்வதற்கு முனைந்து நிற்கிறார்கள். இலங்கை அரசினுடைய கெடுபிடிகள், தடைகள், சட்டதிட்டங்கள் அவர்களின் செயற்பாட்டைப் பலவீனப்படுத்தியிருக்கின்றன என்றே நாங்கள் கருதுகிறோம்.

சர்வதேச நிறுவனங்களிடம் ஆரம்பத்தில் இருந்த வேகமான முனைப்பு குறையத் தொடங்கிவிட்டது.

✱ கேள்வி: ஜனாதிபதி மஹிந்த பதவிக்கு வந்தவுடன் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கென்று ஆணைக்குழு ஒன்றை நியமித்திருந்தாரே...?

**மஹிந்தவின் போலித்தனம்**

• பதில்: அதில் எந்த முன்னேற்றமும் இல்லை. அது குறித்து அவர்கள் எங்களோடு கருத்துப் பரிமாறவும் இல்லை. அனுசரணையாளர்கள் ஊடாகவும் உறுதியான கருத்துப் பரிமாறல் செய்யவில்லை.

ஜனாதிபதி தன்னை ஒரு மனிதாபிமானமுள்ள தலைவனாகக் காட்டிக்கொள்வதற்காக இப்படியான ஒரு போலித்தனமான நிலைப்பாட்டை எடுத்தரோ தெரியவில்லை. ஆனால் எமது மக்களுக்கு அதனால் எந்தவிதமான நன்மையும் இதுவரை வந்து சேரவில்லை.

**திட்டங்கள் உண்டு; ஆனால் அவை கிடப்பில்!**

✱ கேள்வி : இந்த மக்களின் எதிர்கால மறுவாழ்வுப் பணிகளுக்கான திட்டங்கள் ஏதோனும் வைத்திருக்கிறீர்களா?

• பதில்: எமது மக்களின் எதிர்கால மறுவாழ்வுப் பணிகள் தொடர்பான முழு அளவிலான திட்டமிடலை நாங்கள் செய்து வைத்திருக்கிறோம். ஆனால், அந்தத் திட்டமிடலுக்கு ஏற்ப சர்வதேச உதவிகள் இங்கு வந்தடையாத நிலையில் அவையெல்லாம் கிடப்பில் போடப்பட்ட நிலையில்தான் உள்ளன.

இயற்கை அவலத்தைச் சந்தித்த மக்களுக்கு இப்போது வன்முறைகளையும் நெருக்கடிகளையும் கொடுத்து யுத்த பீதியை உருவாக்குகின்ற போக்கை இப்போது இலங்கைப்படைகள் தீவிரப்படுத்தியிருக்கின்றன.

இருந்த பாரிய பிரச்சினையோடு மேலதிகமாக அடுத்த ஓர் அச்சுறுத்தல் அவர்கள் மீது திணிக்கப்பட்டிருக்கிறது. இதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான எந்தவோர் எதிர்காலத் திட்டங்களையும் நடைமுறைப் படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. ✱




எவருமே எதிர்பார்த்திராத அந்தக் கொடுமையான சம்பவம் நடந்தேறியது. உலகையே உலுப்பிவிட்ட இராட்சத அலைகள் இலங்கையின் தமிழர் தாயகப்பகுதிகள் பலவற்றையும் துவம்சம் செய்திருந்தன.

இந்தக் கொடூரமான ஆழிப்பேரலையின் தாக்கத்தினால் தமிழர் பிரதேசத்திலேயே மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட - அழிவடைந்த - மாவட்டங்களில் முல்லைத்தீவும் ஒன்று.

முல்லைத்தீவு நகரை அண்டிய கரையோரக் கிராமங்கள் பலவும் முற்றாக அழிந்தன.

**இழப்புகள் ஏராளம்**

முல்லைத்தீவு மாவட்டத்தில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர். அங்குள்ள மக்களின் வாழ்வாதார, பொருளாதார வளங்கள் யாவும் அழிக்கப்பட்டன. கிராமங்களின் சகல உட்கட்டுமானங்களும் முழுதாகச் சிதைக்கப்பட்டன.

முல்லைத்தீவில் மொத்தமாக 7 ஆயிரத்து 421 குடும்பங்களைச் சேர்ந்த 27 ஆயிரத்து 604 பேர் பாதிக்கப்பட்டனர். ஆயிரத்து 178 ஆண்களும் ஆயிரத்து 958 பெண்களுமாக மொத்தம் 3ஆயிரத்து 148 பேர் ஆழிப்பேரலைக்கு இரையாகினர்.

இவர்களைவிட 177 பேர் காணாமல் போயிருக்கின்றனர். 5 ஆயிரத்து 457 வீடுகள் பாதிப்படைந்தன. மூன்று பாடசாலைகள் முழுமையாக அழிந்தன. 11 பள்ளிகள் பகுதியாகச் சேதமடைந்தன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரம் பெரும்பாலும் மீனவர்களைக் கொண்ட பகுதியாகையால் மீனவர்களுக்கே இழப்புகள் அதிகமாக ஏற்பட்டன.

மீனவர்களின் தொழில் வளங்கள் யாவும் முற்றாக அள்ளுண்டு போயின. முல்லைத்தீவு நகரை அண்டிய கிராமங்கள் பலவும் ஆழிப்பேரலைக்கு இரையாகின. முல்லைத்தீவு நகரை அண்டிய சில கிராமங்கள் இருந்த இடமே தெரியாமல் தொலைந்து போயின.

இவ்வாறு இயற்கைப் பேரனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு சீரழிந்து போயுள்ள மக்களின் வாழ்வியல் ஆழிப்பேரலையின் ஓராண்டு நிறைவிலாவது இயல்பு நிலைக்கு வந்துவிடும் என்ற எதிர்பார்ப்பு பலரிடம் இருந்தது. ஆனால் நடந்தது அதுவல்ல.


**புனர்வாழ்வுப் பணிகள்**

உறவுகளையும் உடைமைகளையும் முற்றாக இழந்து தாங்கொணாத் துன்பங்களுக்கு உடனடியாக பாடசாலைகளிலும் கோயில்களுமாக வைத்துப் பராமரிக்கப்பட்டனர். பின்னர் அவர்கள் இடைத் தங்கல் முகாங்களுக்கு மாற்றப்பட்டனர்.

மாவட்டத்தில் பாதிப்படைந்த சகல மக்களும் 21 இடைத்தங்கல் முகாங்களில் பராமரிக்கப் படுகின்றனர்.

இரண்டாம் கட்ட வேலைத்திட்டம் என்று பிரிக்கப்பட்டிருந்த இடைத் தங்கல் முகாங்களில் மக்கள் 9 மாதங்கள் முதல் ஒரு வருடம் வரையான காலப்பகுதியில் தங்கவைக்கப்படுவர் என்றும் அந்தக் காலப்பகுதியில் நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டு அங்கு குடியமர்த்தப் படுபவர் என்றும் கூறப்பட்டிருந்தது.

ஆனால், நிரந்தர வீடுகளை அமைப்பதில் அரசும் அரச சார்பற்ற நிறுவனங்களும் மந்தமான நிலையில் இருப்பதாகவேபடுகிறது.




ஒருவருடம் கழிந்தும் இடைத்தங்கள் முகாம் வாழ்வு தொடர்கிறது


**பாதுகாப்பு எல்லை!**

நிரந்தர வீடுகளை அமைப்பதற்கு முன்னர், பாதிக்கப்பட்ட காணிகளை இரு பகுதிகளாகப் பிரித்து கடலில் இருந்து 200 மீற்றர் தூரத்துக்கு இடைப்பட்ட பிரதேசம் கடல் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த எல்லைப் பரப்புக்குள் வீடுகளை அமைக்கமுடியாது என்று வரையறுக்கப்பட்டது.

கள்ளப்பாடு, தீர்த்தக்கரை, வண்ணாங்குளம், சிலாவத்தை, முல்லைத்தீவு தெற்கு, கோயிற் குடியிருப்பு, அளம்பில், உடுப்புக்குளம், தீயோகு நகர், செல்வபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஆயிரத்து 490 குடும்பங்கள் காணிகளை இழந்தன.

இவர்களுக்கான நிரந்தர வீடுகளை அமைப்பதற்கு வேறு பகுதிகளில் காணிகள் தெரிவுசெய்யப்பட வேண்டிய தேவை எழுந்தது. இதன்படி முல்லைத்தீவு நகருக்குச் சமீபமாக உள்ள வெவ்வேறு பகுதிகளில் காணிகள் தெரிவு செய்யப்பட்டன. அங்கிருந்த அரச மற்றும் தனியாருக்குச் சொந்தமான சில காணிகள் அவரவரின் அனுமதியோடு பெறப்பட்டு காணியற்றோருக்கு தலா இரண்டு பரப்புக் காணி வீதம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இன்னும் அங்கு வீடமைப்புப் பணிகள் தொடங்கியதாக இல்லை.

இது ஒரு புறமிருக்க பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே வசித்தவர்


உயிரிழந்தோர் நினைவாக முல்லைத்தீவில் அ



## ஒப்பந்தகாரர்கள் எவருமில்லை; இதனால்தான் பணிகள் தாமதம்!

**- முல்லை. அரச அதிபர்**

பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வுப் பணிகளில் அரசாங்கத்தின் பங்களிப்பு எப்படியிருக்கிறது?

மக்களின் நிலைமை இயல்புக்குத் திரும்பிவிட்டதா என்று முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரிடம் கேட்டோம்.

அவர் கூறியதாவது-

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வுப் பணிகளைச் செய்து கொண்டிருக்கும்போது மழையும் வந்ததால் இங்கு பெரிய வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. நிரந்தர வீடுகளுக்கான அத்திவார வேலைகளை துரிதாமாகச் செய்யமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

கடல் பாதுகாப்பு எல்லைக்கு வெளியே உள்ள மக்களுக்கு வீடமைப்புக்கென 50 ஆயிரம் ரூபா வீதம் கொடுத்துள்ளோம். அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியோடு வள்ளங்கள் போன்ற தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இன்னும் அது சரியானமுறையில் வழங்கி முடிக்கப்படவில்லை.

**அரச உதவிகள்**

சுமார் 200 வீடுகள் வரை இப்போது துரிதாமாக கட்டி முடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. முகாம்களில் இருக்கின்ற மக்களுக்கான குடிதண்ணீர் மற்றும் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவதற்காக திறைசேரியிலிருந்து எமக்கு நிதி கிடைக்கிறது. கட்டமைப்புகளைச் சீர்படுத்துவதற்கான அரசாங்கத்தின் உதவிகள் இன்னமும் எமக்குக் கிடைக்கவில்லை. நலன்புரி நிலையங்களைப் பராமரிப்பதற்கான நிதி எங்களுச்கு அரசிடமிருந்து வந்துகொண்டுதான் இருக்கிறது.

நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களுக்கு குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளை ஏற்படுத்தி வழங்குவதற்காக பெருமளவு ஆளணியும் வாகனங்களும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன.

**பொதுக்கட்டமைப்பு குழப்பம்;**
**கட்டுமானப் பணிகள் பாதிப்பு!**

முல்லைத்தீவில் 25 இற்கும் மேற்பட்ட திணைக்களங்கள் ஆழிப்பேரலையால் சேதமாகின. பொதுக்கட்டமைப்பு குழப்பப்பட்டதால் அதற்கான நிதி இங்கு வரவில்லை. அதனால் அந்தத் திணைக்களங்களும் இன்னும் அமைக்கப்படவில்லை.



இங்கு வீதிகள் சேதமான நிலையில் உள்ளன. குறிப்பாக மழையினால் வீதிகள் இருந்ததை விட மோசமான நிலையில் உள்ளன.

இங்கு ஒப்பந்தகாரர்கள் இல்லை. 'நிகொட்' திட்டத்தில் இப்போதும் கூட பத்துக்கும் மேற்பட்ட வேலைகள் ஒப்பந்தகாரர்கள் இல்லாத காரணத்தால் நிலுவையில் இருக்கின்றன.

இந்த மாவட்டத்தில் பல அபிவிருத்திப் பணிகள் தேவையாக இருக்கின்றன. வெறுமனே மக்களுக்கு உணவு கொடுத்து வீடும் கொடுத்தால் மக்களை இயல்பு நிலைக்குக் கொண்டுவர முடியாது. உட்கட்டுமான வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியது மிகவும் அவசியமாகும்.

முன்னர் யுத்தத்தினாலும் பிறகு ஆழிப்பேரலையாலும் இப்போது வெள்ளத்தினாலும் முல்லைத்தீவு மாவட்டம் மிகவும் மோசமான அழிவைச் சந்தித்து நிற்கிறது.

இங்கு வைத்தியசாலைக்கான கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. பிரதேச செயலகம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

'நிகொட்', 'நீர்ப்', 'கார்ப்' போன்ற திட்டங்கள் ஊடாக ஓரளவுக்கு கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கு அனுமதி கிடைத்திருந்தாலும் அந்தப் பணிகளைத் துரிதமாக செய்து முடிப்பதற்கு சில சிக்கல்கள் இருக்கின்றன.

அதாவது, வீதிகளின் நிலைமை மோசமாக இருப்பதால் கட்டுமானப் பணிகளுக்கான மூலப்பொருள்களை இங்கு கொண்டு வருவதில் சிரமம் ஏற்பட்டிருக்கிறது.

அதனால், ஒப்பந்தகாரர்களும் இங்கு பணிசெய்வதை விரும்பவில்லை. இதனால், முல்லைத்தீவு மாவட்டத்தில் அழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வுப் பணிகளைத் துரிதமாக செய்து முடிக்கமுடியவில்லை.

முதலில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டம் பின்னர் ஆழிப்பேரலையாலும் இப்போது மழைவெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டு சிதைந்தது.

இப்போது அழிவிலிருந்து மெல்ல மெல்ல மீண்டு கொண்டிருக்கின்ற இந்த மாவட்டத்துக்கு உதவிகள் இன்னமும் ஏராளமாகத் தேவைப்படுறது.

அழிவின் அளவுக்கு ஏற்ப ஒப்பீட்டு ரீதியில் போதிய உதவிகளை வழங்குவதற்கு அரசு முன்வரவில்லை என்ற குற்றச்சாட்டு பொதுவாக இருக்கிறது.

அரசசார்பற்ற நிறுவனங்கள் குறிப்பிடத்தக்களவு பணிகளைச் செய்தாலும் கூட அவற்றின் வேகமும் ஆரம்பத்தில் இருந்ததை விட இப்போது குறைக்கப்பட்டிருக்கிறது என்றொரு கருத்தும் உண்டு.

மொத்தத்தில் முல்லைத்தீவை மீண்டும் முழுமையாகப் புனரமைத்து அழகொளிரச் செய்வதற்கு - பாதிக்கப்பட்டு நொந்துபோயிருக்கும் மக்களின் வாழ்வில் ஒளியேற்றுவதற்கு அனைத்துத் தரப்பினரும் இன்னும் கடுமையாக உழைக்கவேண்டும். *







...தொடர்கிறது

களுக்கு அவரவரது காணியில் நிரந்தர வீடுகளை அமைக்கத் திட்டமிடப்பட்டு அதற்கான வேலைகள் இப்போதுதான் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அரசசார்பற்ற நிறுவனங்கள் 5 ஆயிரத்து 464 வீடுகளை அமைப்பதற்கு இணக்கம் தெரிவித்திருக்கின்ற போதிலும் அங்கு ஆக, 144 வீடுகளுக்கான வேலைகள் மட்டுமே இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

அதேபோல அரசின் 'நேர்ப்' திட்டத்தின் கீழ் 199 வீடுகளுக்கான பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. பத்துக்கும் மேற்பட்ட தொண்டு நிறுவனங்கள் வீடமைப்புப் பணிகளைப் பொறுப்பேற்றிருக்கின்றன.

**இடைத்தங்கல் முகாம் மக்களின் நிலைமைதான் என்ன?**

இடைத்தங்கல் முகாம்களில் வசிக்கின்ற மக்களுக்கு உணவுப் பொருள்கள் உட்பட பெரும்பாலான பொருள்கள் அரசினாலும் தொண்டு நிறுவனங்களாலும் வழங்கப்படுகின்றன; வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அன்றாடப் பாவனைப் பொருள்கள் முதல் பிள்ளைகளுக்கான கற்றல் உபகரணங்கள் வரை வழங்கப்பட்டுள்ளன.

வெற்றுக் காணிகளில் வரிசையாகக் காணப்பட்ட சிறு சிறு குடிசைகளைக் கொண்டு இடைத்தங்கல் முகாங்கள் அமைந்திருக்கின்றன. இந்த இடைத்தங்கல் முகாங்களுக்கு மின்சார இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இரவிலும் அதிகாலையிலும் மின்சாரம் கிடைக்கிறது.

**கல்வி நிலைமை**

சிறுவர்களுக்கான கல்விச் செயற்பாடுகளுக்காக அங்கு பல்வேறு வசதிகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் ஏனைய தொண்டு நிறுவனங்களும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றன. இடைத்தங்கல் முகாங்களை அண்டியதாக முன்பள்ளிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு வசதியாக பொதுநோக்கு மண்டபங்களும் அமைக்கப்பட்டுள்ளன. அழிவடைந்துள்ள பாடசாலைகள் தற்காலிக இடங்களில் இயங்குகின்றன.

**• சுகாதாரம்**

குடிதண்ணீர் மற்றும் மலசலகூட வசதிகளைச் சிறந்த முறையில் ஏற்படுத்தி முகாங்களில் சுகாதாரத்தைப் பேணுவதற்கு துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள போதிலும் அங்கு சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படவே செய்கின்றன.

குடியிருப்புகள் மிகவும் நெருக்கமாக இருப்பதால் பல்வேறு சமூகப் பிரச்சினைகளும் அந்த மக்களிடம் தலைதூக்குவதாக அறியமுடிந்தது. இடைத்தங்கல் முகாங்களில் மக்கள் ஓரளவுக்கு அடிப்படை வசதிகளை பெற்றுக் கொள்கின்றனர் என்பது உண்மைதான். ஆனாலும்,தொடர்ச்சியா அங்கு அவர்கள் இருப்பது வாழ்வியல் ரீதியான - குடும்ப உறவுகள் ரீதியான- உளவியல் ரீதியான பல்வேறு பிரச்சினைகளையும் முரண்பாடுகளையும் ஏற்படுத்துகிறது என்பதும் மறுக்க முடியாததாகும்..

**முற்றாக அழிவடைந்த கடற்றொழில் வாய்ப்புகள்**

தொழில் வாய்ப்பை பொறுத்தவரையில் முல்லைத்தீவு மாவட்ட கரையோர மக்கள், பெரும்பாலும் சொந்தமாக தொழில் வாய்ப்புகளை வைத்து தொழில்.செய்து வளமாக வாழ்ந்தார்கள். ஆனால் ஆழிப்பேரலை வந்து அந்த மக்களின் தொழில் வளங்கள் அனைத்தையுமே அள்ளிச் சென்றுவிட்டன.


ஆயிரத்து 173 கண்ணாடி இழைப்படகுகளும், ஆயிரத்து 627 இயந்திரங்களும் 4ஆயிரத்து 500 மீன்பிடி வலைகளும் அலையில் அள்ளுண்டு போயின. இவற்றைவிட 250 வரையான பாரம்பரிய மீன்பிடி உபகரணங்களும் அழிந்துவிட்டன. இவற்றில் ஆயிரத்து 221 படகுகளை வழங்குவதற்கு தொண்டு நிறுவனங்கள் முன்வந்திருக்கின்றன. எனினும் 863 படகுகளும் 563 இயந்திரங்களும் 210 வலைகளுமே இதுவரை அந்த மக்களுக்கு கிடைத்திருக்கின்றன. இழப்பின் தாக்கத்திலிருந்து மக்கள் ஓரளவுக்கு விடுபட்டிருக்கிறார்கள். மீண்டும் தொழிலுக்குச் செல்வதற்கு அவர்கள் தயாராகிவிட்டார்கள்.


ஆனால் அவர்களுக்கு தொழில் உபகரணங்கள் இன்னமும் முழுமையாகக் கிடைக்கவில்லை.

கிடைக்கின்ற உபகரணங்களை முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கின்றது.

ஆழிப்பேரலையினால் அழிவடைந்த கடற்றொழில் உபகரணங்களின் பெறுமதி 73 கோடி ரூபாவுக்கு மேல் என்கிறார்கள். சமாசத்தின் செயலாளர் சமாசத்திற்கு மட்டும் மூன்றரைக் கோடி ரூபா சொத்திழப்பு என்றார் அவர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான மறுவாழ்வுப் பணிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து மேற்கொள்வதற்காக மாவட்ட திட்டமிடல் மேம்பாட்டு செயலகம் ஒன்று முல்லைத்தீவில் அமைக்கப்பட்டிருக்கின்றது. ✱





...த்தீவில் அமைக்கப்பட்டுள்ள கல்லறைகள்...

## பொதுக்கட்டமைப்பு முடங்கியதால் வீடமைப்புப் பணிகளில் மந்தம்! - திட்டப் பணிப்பாளர்



நலன்புரி நிலையங்களில் இருந்து மக்கள் இடைத்தங்கல் முகாமுக்கு வரும்போது அவர்களுக்குரிய வசதிகள் செய்துகொடுக்கப்பட்டன.

இருப்பிடம் மட்டுமன்றி ஏனைய வசதிகளான மலசலகூட வசதி, குடிதண்ணீர் வசதி, குழந்தைகளுக்கான கல்வி வசதி, சுகாதார வசதி என்பன ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. இதற்கேற்ப அவர்களுக்குரிய திட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டன.

கடற்றொழில் உபகரணங்கள் இல்லாதபோது எங்கள் வாழ்வாதாரப் பின்னணியும் இருக்கவில்லை. இதற்கும் திட்டங்கள் தீட்டப்பட்டு செயற்படுத்த முயற்சிக்கப்பட்டது. இத்திட்டங்களை சரியான முறையில் முன்னெடுக்கமுடியவில்லை. இதற்குக் காரணம் பாதிக்கப்பட்ட மக்களுக்கென அரசிடமிருந்து நிதியோ உதவிகளோ எங்களுக்கு சரியாகக் கிடைக்கவில்லை.

நாங்கள் இயலுமானவரை எங்களிடம் உள்ள சகல வளங்களையும் பயன்படுத்திக் கொண்டு சர்வதேச நிறுவனங்களின் உதவிகளோடு எமது மக்களை 3-4 மாத காலத்துக்குள் இடைத்தங்கல் முகாம்களில் குடியமர்த்திவிட்டோம். ஒட்டுமொத்தமாக எல்லா இடங்களிலும் குடியமர்த்தப்பட்டு அவர்களுக்குரிய வசதி வாய்ப்புகள் தொடர்ந்து வழங்கப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் பராமரிக்கப்பட்டுவருகின்றனர்.

இங்கு எப்படித்தான் இருந்தாலும் மக்களுக்கு தமது சொந்த வீட்டில் இருக்கும் உணர்வு இல்லை.

இதனால், இடைத்தங்கல் முகாம்களில் இருக்கும் மக்களை நிரந்தர இடங்களில குடியமர்தவேண்டி உள்ளது.

நிரந்த இடங்களில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கும் போது கடல் வலயம் வரையறுக்கப்பட்டது. பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு கடல்வலயத்தை வரையறுக்கும் போது கடலிலிருந்து 200 மீற்றர் தூரம் கடல் வலயமாக்கப்பட்டது. கடல் வலயமான 200 மீற்றருக்குள் மக்கள் வந்து குடியமர முடியாது; மீளத் தமது நிரந்தர வீடுகள் அமைக்கமுடியாது.

இவ்வாறு இருக்கும் பகுதி கைவிடப்படும் நிலை ஏற்படுகிறது. அந்தப் பகுதி மக்களுக்குரிய காணிகளை வேறு இடங்களில் இனங்கண்டு வழங்க வேண்டும். புதிய காணிகள் இனங்காண்பது ஆரம்பத்தில் பிரச்சினையாக இருந்தது. மக்களில் 95 வீதமானோர் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டுவருகின்றனர்.

மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு வேறு இடங்களில் குடியேற விரும்பவில்லை.

இவ்வாறு இருக்கும் மக்களிடம் தொடர்ச்சியாகக் கதைத்து வேறு இடங்களிலுள்ள காணிகளைப்பகிர்ந்துள்ளோம்.

நிரந்தர வீடுகளுக்குரிய திட்டங்களை மேற்கொள்ளும் போது நிரந்தர வீடுகளை மட்டும் கருத்திற்கொள்ளாது அவர்களுக்குரிய ஏனைய வசதி வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியிருக்கிறது.

நிரந்தர வீட்டுத் திட்டக் கிராமங்களில் மக்களை குடியமர்த்த எங்களுக்கு பெருமளவு நிதி தேவைப்பட்டது. அரசினால் எமக்கு எந்த ஒரு நிதியும் கிடைக்கவில்லை.

சர்வதேச நிறுவனங்கள் இப்பிரதேசத்தில் 5ஆயிரத்து 900 வீடுகளை அமைத்துத் தருவோம் எனத் திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான செயலகத்தில் ஒத்துக்கொண்டிருந்தன.

ஆழிப்பேரலை பாதித்தது மட்டுமல்ல போரால் பாதிக்கப்பட்ட மக்களையும் இதில் உள்ளடக்கவேண்டி இருந்தது.

இன்றுவரை முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்த சர்வதேச நிறு வனங்களால் 144 வீடுகள் அமைப்பதற்கான ஆரம்ப வேலை மட்டும் தான் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

உலக வங்கியின் நிதி அரசின் (நேர்ப்) வடக்கு -கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாண திட்டத்தினூடாக மக்களுக்கு வழங்கப்படுகிறது. கட்டம் கட்டமாக நிதி வழங்கப்படும். மக்கள் தாமாக வீட்டைக் கட்ட வேண்டும்.

உலக வங்கி வழங்கும் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவினால் வீடுகளை முழுமையாக அமைக்க முடியாது என்பதனால் குறுகிய காலத்துக்குள் நாங்கள் பெருமளவு வீடுகளை அமைக்கவேண்டியிருக்கிறது.

கடல் வலயத்துக்கு உட்பட்ட பகுதி மக்களுக்கு வழங்கப்பட்ட காணிகளில் விரைவாக வீடுகளைக் கட்டவேண்டும். நிறுவனங்களிடம் தொடர்ச்சியாக க் கேட்டு வருகிறோம்.

200 மீற்றருக்கு வெளியே உள்ள மக்களுக்குத்தான் உலக வங்கியின் நிதி கிடைத்தது. 200 மீற்றருக்கு உள்ளே இருந்த மக்களுக்கு காசு கிடைக்கவில்லை. அரசின் ஆரம்பத் திட்டத்தின் படி 200 மீற்றருக்கு உள்ளே இருப்பவர்களுக்கு வீடும் வெளியே இருப்பவர்களுக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணமும் வழங்குவதுதான்.

எங்கள் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் போதிய நிறுவனங்கள் உதவமுன்வந்தது. இதனால், எல்லோருக்கும் வீடமைத்துக் கொடுக்கத் திட்டமிட்டிருந்தோம்.

இன்று அரச சார்பற்ற நிறுவனங்கள் கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றவில்லை.

தொடர்ச்சியாக நிறுவனங்கள் விரைவில் கட்டிமுடிக்க வேண்டுமென நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றோம்.

நேரடியாகப் பொதுக்கட்டமைப்பினூடாக நிதியைப் பெற்று வீடமைத்துக் கொடுக்கலாம் என்றுதான் எங்கள் திட்டம் இருந்தது. ஆனால், பொதுக்கட்டமைப்பு முற்று முழுதாகச் செயலிழந்ததால் வீடமைப்புப் பணிகள் மந்தமாகவே இடம்பெற்றுவருகின்றன என்றார். ✱



# “...இயல்பு நிலை ஏற்பட இன்னமும் இரண்டு வருடங்களாவது தேவை...”

*ஆழிப்பேரலை அனர்த்தம் இடம்பெற்று இன்றுடன் ஒரு வருடம் பூர்த்தியாகின்றது. இந்த நிலையில் தமிழர் தாயகத்தில் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களின் புனர்வாழ்வுப் பணிகள் குறித்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.ரெஜி உதயனுக்கு வழங்கிய விசேட செவ்வி இது.*

**கேள்வி:** தமிழர் தாயகத்தில் ஆழிப்பேரலையால் ஏற்பட்ட இழப்புக்கள், பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வுப் பணிகள் குறித்து...?

**பதில்:**ஆழிப்பேரலையின் தாக்கம்இடம் பெற்று ஒருவருடகாலம் பூர்த்தி அடைகிறது. இந்நிலையில் வடக்கு - கிழக்கில் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்டு 3 லட்சத்து 41 ஆயிரம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். 72 ஆயிரத்திற்கு மேற்பட்ட வீடுகள் முற்றுமுழுதாக அழிக்கப்பட்டுள்ளன. 92 கிராமங்கள் வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் முழுத்திட்டமாக வடக்கு - கிழக்கில் பல்வேறு வகையான நிவாரணப் பணிகளை மேற்கொண்டுள்ளோம். எந்த விதமான வேறுபாடுமின்றி நாம் செயற்பட்டு வருகின்றோம்.அதே நேரத்தில் சர்வதேச நிறுவனங்களும் உரிய நேரத்தில் வந்து உதவிகளை மேற்கொண்டனர். அதனால் காயப்பட்ட மக்களை உயிராபத்துக்களிலிருந்த காப்பாற்ற முடிந்தது. அத்துடன் மக்களுக்கான அத்தியாவசிய உதவிகளையும் செய்யக் கூடியவாறு இருந்தது.

இரண்டாம் கட்டமாக மக்கள் தொடர்ச்சியாக முகாம்களில் இருக்க முடியாத நிலைமை தோன்றியது. சமூகப்பிரச்சினைகள், சுகாதாரச் சீர்கேடுகள், மருத்துவ வசதிகள் இன்மை, பிள்ளைகளின் கல்வி போன்ற காரணங்களால் அவர்கள் முகாம்களில் இருப்பதை விரும்பவில்லை.

### இடைத்தங்கல் முகாம்

இந்த நிலையில் இலங்கையிலேயே முதன் முறையாக நாங்கள் தான் இடைத்தங்கல் முகாம்களை உருவாக்கும் திட்டத்தை கொண்டு வந்தோம்.

அதன்மூலம் மக்களுக்குத் தற்காலிக குடியிருப்புகளை நிறுவிக்கொடுத்தோம். அதன் பின்னர் சகல நிறுவனங்களும் முன்வந்து உதவிகளைச் செய்தன.

இந்தநேரத்தில் அதாவது தற்காலிகக் குடியிருப்புகளைப் பொறுத்த மட்டில் அரசு எந்த விதமான உதவிகளையும் மேற்கொள்ள வில்லை. முழுக்கமுழுக்க சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும், புனர்வாழ்வு கழகமுமே இதனைச் செய்தன.

இந்தச் செயற்பாடுகளை நாம் சிறப்பாகச் செய்தமைக்காக அரசு கூட எம்மைப் பாராட்டிப் பரிசு தந்தது.

இரண்டாம் கட்டவேலைத்திட்டங்கள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை மக்களுக்கு மூன்றாம் கட்டம் நோக்கிய நகர்வுகளை மேற்கொள்ளவேண்டியிருந்தது.

ஏனெனில், தற்காலிக வேலைத்திட்டத்தை நாம் ஆகக் குறைந்தது ஒன்பது மாதத்திற்கு ஏற்றதாகவே மேற்கொண்டிருந்தோம். ஆகக்கூடியது ஒரு வருடம், அந்தக்காலப் பகுதியில் நாம் நிரந்தரக் குடியிருப்புகளை அமைப்பதற்கான வேலைத்திட்டங்களை ஆரம்பித்திருக்க வேண்டும். நிரந்தர வேலைத் திட்டங்களை ஆரம்பிக்கும் போது தான் நாம் நிறையப் பிரச்சினைகளை எதிர்கொண்டோம்.

## புனர்வாழ்வுக்கழகத்தின் பணிகளுக்கு புலம்பெயர்ந்த உறவுகள் பேருதவி

நாம் மட்டுமல்ல உள்ளூர் நிறுவனங்கள், மக்கள், சர்வதேச நிறுவனங்கள் என்பனவும் இந்தப் பிரச்சினைகளை எதிர்கொண்டன. இன்று வரைக்கும் இப்பிரச்சினைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

மூன்றாம் கட்டவேலைத்திட்டத்தைப் பொறுத்த வரையில் முதலில் கிராமங்கள் புனரமைக்கப்படவேண்டும். புனர்வாழ்வுக் கழகம்- கிராமத்தில் குடும்ப ரீதியாக வீடு, மலசல கூடம், கிணறு அமைத்துக் கொடுத்தல், அவர்களுக்குத் தொழில்வாய்பை ஏற்படுத்திக்கொடுத்தல், வைத்தியசாலையை புனரமைத்தல், வீதிகள், பாடசாலைகள், வடிகாலமைப்புகள் புனரமைத்தல், சந்தை புனரமைத்தல் எனக் குறிப்பிட்ட கிராமத்தை முழுமையாகப் புனரமைக்கவேண்டும்.

### புனர்வாழ்வுப் பணிகளில் எதிர்கொள்ளும் சவால்கள்

இவ்வாறு ஒரு கிராமத்தை புனரமைப்புச் செய்ய முற்படும் போது எமக்கு மூன்று வகையான சவால்கள் இருந்தன.ஒன்று என்னவென்றால் நிலம் இல்லை. அதாவது கடற்கரையில் இருந்து 200 மீற்றர் பாதுகாப்பு எல்லையிலுள்ள மக்களை மீண்டும் குடியேற்ற வேண்டுமெனின் அதற்குப் பாதுகாப்பான காணிகள் வேண்டும்.

ஒட்டுமொத்தமாக வடக்கு-கிழக்கில் உள்ள அரச நிலங்களின் உரிமைஅரசிடமே உள்ளது. அவர்களால் உரியகாலப்பகுதியில் அதற்குரிய அனுமதி வழங்கப்படாமையாலும் கிட்டத்தட்ட நான்கு ஐந்து மாதங்களாக எதுவித செயற்பாடுகளும் மேற்கொள்ளப் படாமலிருந்தது.

அதேபோன்று அடுத்தபடியாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் நிரந்தரவேலைத் திட்டங்களை மேற்கொள் வதற்குரிய பொருள்களைக் கொண்டு செல்வதில் நிறைப் பாதுகாப்புப் பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தன.

சிலஇடங்க கண்ணி தொடர்பான



பிரச்சினைகள் இருந்தன. சர்வதேச நிறுவனங்கள் வீடமைக்கும் இடங்களில் கண்ணி வெடி அகற்றியமைக்கான சான்றிதழ்களை வழங்கினால்தான் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளலாம் எனத் தெரிவித்தன. அதுவும் எமக்கொரு தடையாகவே இருந்தது.

மிகப்பெரிய தடை என்னவென்றால் வடக்கு- கிழக்கில் நிரந்தரக் கட்டமைப்பை மேற்கொள்ள சர்வதேச உதவிகள் தேவை. சாதாரணமாக அரசசார்பற்ற நிறுவனங்களால் இவற்றை மேற்கொள்ள முடியாது.

**கேள்வி:** ஆழிப்பேரலையால் அழிவடைந்த வடக்கு-கிழக்கை புனரமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவில்லையா?

### முழுமையான திட்டங்கள் அரசிடம் இல்லை!

**பதில்:** ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு மிகப்பெரிய திட்டங்களைக் கொண்டது. இதற்கு உதவி செய்வதற்கு நிறைய நாடுகள் முன்வந்தன. அவர்கள் வழங்கும் நிதியை ஓர் ஒழுங்குபடுத்தலின் கீழ் வழங்குவதற்கு எந்தவிதமான கட்ட மைப்பும் இருக்கவில்லை.

அரசு தனக்குக் கிடைக்கின்ற சர்வதேச உதவிகளை பாகுபாடின்றி வடக்கு-கிழக்கு மக்களுக்கு செலவழிக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதமுமில்லை. கடந்த காலங்களில் ஏற்பட்ட அனுபவங்களை இதற்கு ஆதாரமாகக் கூறமுடியும்.

வடக்கு - கிழக்கை புனரமைப்பதற்கான உருப்படியான திட்டங்களும் அரசிடம் இல்லை. தென்னிலங்கையில் ஆழிப்பேரலையால் 20 ஆயிரம் வீடுகளே பாதிக்கப்பட்டன. ஆனால் வடக்கு - கிழக்கில் 78 ஆயிரம் வீடுகள் பாதிக்கப்பட்டன. சுனாமியால் இடம்பெயர்ந்த மக்களில் 90 வீதமானவர்கள் வடக்கு-கிழக்கைச் சேர்ந்தவர்களே.

நிலைமை இப்படியிருக்க தென்னிலங்கையில் அரசு இதுவரை 5 ஆயிரம் வீடுகள் வரை கட்டி முடித்திருக்கிறது. ஆனால் வடக்கு-கிழக்கில் ஆயிரம் வீடுகள் கூட கட்டிமுடிக்கப்படவில்லை.

வடக்கு-கிழக்கில் ஏதேனும் செய்ய வேண்டும் என்றால் கூட அதற்கான முடிவுகளும் திட்டங்களும் தென்னிலங்கையை அடிப்படையாக வைத்தே எடுக்கப்படுகின்றன.

தற்போது புதிய அரசாங்கம் 'அதிகார சபை' என்ற அமைப்பை இதற்கென உருவாக்கியிருக்கிறது. வெளிநாடுகளிலிருந்து உதவிகளைப் பெறுவதற்கான- கவர்ச்சிகரமான- ஒரு கட்டமைப்பே இந்த அதிகார சபை. இதனால் எமது மக்களுக்கு எந்தப் பலனும் கிடைக்காது.

**கேள்வி:** புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தொண்டு நிறுவனங்களின் பணிகளுக்கு அரசினால் ஏதாவது தடைகள் ஏற்பட்டனவா?

### அரசின் இடையூறால் பணிகள் பாதிப்பு

**பதில்:** வடக்கு - கிழக்கைப் பொறுத்த வரையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மூன்றாம் கட்டப் புனர்வாழ்வுப் பணிகளில் 75 வீதத்துக்கும் மேற்பட்ட வேலைத்திட்டங்களைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் ஏனைய சர்வதேச தொண்டு நிறுவனங்களுமே முன்னெடுக்கின்றன.

இவ்வாறு பணிகளைச் செய்கின்ற தொண்டு நிறுவனங்களுக்கு ஸ்ரீலங்கா அரசாங்கத்தரப்பால் பல்வேறு இடையூறுகள் ஏற்படுகின்றன.

அரசு தனது சட்டதிட்டங்களைப் பின்பற்ற வேண்டும் என்று தொண்டு நிறுவனங்களை வற்புறுத்துகிறது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள குக்கிராமம் ஒன்றில் அபிவிருத்திப் பணிகளைச் செய்வதற்கு அரசிடம் அனுமதி பெறவேண்டியிருக்கிறது.

வெளிநாட்டிலுள்ள வளங்கள் மற்றும் அங்குள்ள தொழில்நுட்ப வல்லுநர்கள் இங்கு வருவதற்கு அரசு கட்டுப்பாடுகளை விதிக்கின்றது. இங்குள்ள நிலைமைகளை ராஜதந்திரிகள் வந்து பார்வையிடுவதற்கு முற்றாகத் தடையிருக்கிறது.

இத்தகைய அரசின் திட்டமிட்ட தடைகளால் தொண்டு நிறுவனங்களின் செயற்பாடுகளையும் வெகுவாகப் பாதிக்கின்றன. புனர்வாழ்வுக் கழகத்தின் பணிகளிலும் அரசினதும் அரச படைகளினதும் கெடுபிடிகள் தடைகள் கடந்த காலங்களில் அதிகமாக ஏற்பட்டிருந்தன.

கிழக்கில் எமது அலுவலகங்கள் மீது பல தடவைகள் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. ஒரு பணியாளர் உயிரிழந்தும் பலர் காயமடைந்தும் உள்ளனர்.

கொழும்பில் எமது பொருள்கள் பல தடவைகள் தடுத்துவைக்கப்பட்டிருந்தன. அவற்றில் சில மீண்டும் கிடைத்தன. பல பொருள்கள் கிடைக்காமலே போய்விட்டன. இப்போதும் கூட 500 மீன்பிடிப் படகுகள் செய்வதற்கான மூலப் பொருள்கள் சுங்கத்திணைக்களத்தால் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன.

### புலம் பெயர்ந்தோர் பேருதவி

**கேள்வி:** புனர்வாழ்வுக் கழகத்தின் பணிகளுக்கு புலம் பெயர்ந்த தமிழ் உறவுகளின் பணி எப்படியிருக்கிறது?

**பதில்:** புலம்பெயர்ந்த எமது உறவுகளின் உதவி வழக்கம் போல சுனாமிப் பணிகளுக் கும் கிடைத்தன. புனர்வாழ்வுக் கழகத்தின் பணிகளில் 75 வீதத்துக்கும் மேற்பட்டவை புலம் பெயர்ந்த மக்களின் உதவியுடனேயே முன்னெடுக்கப்படுகின்றன. அவர்களது உதவி இல்லாவிட்டால் நாங்கள் இந்தப் பணிகளைச் செய்திருக்கவே முடியாது.

**கேள்வி:** வடக்கு - கிழக்கல் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தமிழர் புனர் வாழ்வுக்கழகம் தனது சொந்த நிதியில் எத் தனை வீடுகளை அமைத்துக்கொடுத்திருக் கிறது? எப்படியான புனர்வாழ்வுப் பணி களைச் செய்கிறது?

### புனர்வாழ்வுக்கழகத்தின் பன்முகப் பணிகள்

**பதில்:** எல்லா நிறுவனங்களும் மக்களுக்கு வீடுகட்டிக்கொடுப்பதையே முதன்மையாகச் செய்தன. ஆனால் நாங்கள் அவ்வாறில்லாமல் மக்களை முதலில் தொழிலுக்கு அனுப்பவேண்டும் என்ற நோக்கத்திலேயே செயற்பட்டோம். அடுத்த கட்டமாகத்தான் வீடமைப்புப் பணிகளைத் செய்தோம்.அதற்கமைவாக மக்களுக்கு படகு, இயந்திரம், வலைகள் என்பவற்றை வழங்குவதற்கு 600 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட தொகையைப் பயன்படுத்தினோம்.

அந்த உபகரணங்களையும் கூட இங்கேயே உற்பத்தி செய்வதன் மூலம் முழு நன்மைகளையும் எமது மக்கள் பெறவேண்டும் என்பதற்காக வடக்கு-கிழக்கில் 8 இடங் களில் படகு உற்பத்தித் தொழிற்சாலைகளை அமைத்துள்ளோம்.

வீடமைப்பைப் பொறுத்தவரையில் அம்பாறையில் நாவிதன் வெளியிலும் மட்டக்களப்பில் பூனைச்சேனை, வாகரை ஆகிய இடங்களிலும், திருகோணமலையில் கல்லடி, பாட்டாளிபுரம் பகுதிகளிலும், முல்லைத்தீவில் கள்ளப்பாட்டிலும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வீட்டுத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எமது சொந்த நிதியில் இப்போது மூவாயிரம் வீடுகளை அமைக்கத் திட்டமிட்டிருக்கிறோம். ஆனால் 400 வீடுகள்தான் முடிக்கப்பட்டிருக்கின்றன. ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

இதனைவிட 7 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 4 தொழிற் பயிற்சி நிலையங்கள், 3 சிறுவர் இல்லங்கள், 72 முன்பள்ளிகள், சிறுவர்களுக்கான 11 மனமகிழ்வுப் பங்காளர்கள் போன்றவற்றை ஆழிப்பேரலையால் பாதிக்கபட்டோருக்காக அமைத்திருக்கின்றோம்.

மீன்பிடி சமாசங்களுக்கு 150 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட தொகையைக் கடனாக வழங்கியிருக்கின்றோம். குளிரூட்டப்பட்ட வாகனங்களை வழங்கியிருக்கின்றோம்.

இப்படியாக பாதிக்கப்பட்ட மக்களை இயல்பு நிலைக்கு கொண்டுவருவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றோம்.

**கேள்வி:** பாதிக்கப்பட்ட மக்கள் மீண்டும் இயல்பு நிலையை அடைவதற்கு இன்னும் எவ்வளவு காலம் எடுக்கும் என்று கருதுகிறீர்கள்?

**பதில்:** அது உதவி வழங்கும் நிறுவனங்களின் செயற்பாடுகளிலேயே தங்கியிருக்கிறது.

போரை விட ஆழிப்பேரலை மக்களிடம் இருந்த எல்லா வளங்களையும் நாசமாக்கி விட்டது. ஆகவே அவைகளை மீளக் கட்டியெழுப்புவதற்கு எல்லாவகையான வசதிகளையும் செய்யவேண்டியிருக்கிறது. எல்லோரும் ஒற்றுமையாக ஒரே நோக்கத்தின் அடிப்படையில் பணிகளை விரைவாக்ச்




செய்வோமாயின் இந்தக் கிராமங்களைக் இன்னும் இரண்டு வருடங்களில் பூரணமாகக் கட்டியெழுப்ப முடியும்.

**செவ்வி:**
**அற்புதன்**

ஆனால், அரசும் ஏனைய சில நிறுவனங்களும் நடைமுறைக்கு சாத்தியமற்ற- சூழலுக்குப் பொருந்தாத விடயங்களைக் கதைத்துக் கொண்டிருப்பதால் காலம் விரயமாகுமே ஒழிய பணிகள் முழுமையடையாது.

**கேள்வி:** அமெரிக்காவின் முன்னாள் அதிபர் பில் கிளின்ரனை சமீபத்தில் கொழும்பில் சந்தித்துப் பேசியிருந்தீர்கள். அந்த வகையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடனான அமெரிக்காவின் உறவு எப்படியிருக்கிறது?

**பதில்:** தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அமெரிக்காவில் சட்ட பூர்வமாகப் பதிவு செய்யப்பட்ட- அந்த நாட்டின் வரிச்சலுகை உள்ள ஓர் அரச சார்பற்ற நிறுவனமாக இயங்கிவருகின்றது. ஆழிப்பேரலைக்குப் பின்னர் அமெரிக்காவின் மிகப் பெரிய இரண்டு நிறுவனங்கள் எங்களுடன் இணைந்து பணிசெய்கின்றன.

'ஒப்பரேசன் யு.எஸ்.ஏ' 'சிற்றி ஹோம் இன்ரநஷனல்' ஆகிய அமைப்புகள் எங்களோடு இணைந்து இங்கு வேலை செய்கின்றன.

எமது நிறுவனத்துக்கு அமெரிக்காவில் எந்தத் தடைகளும் இல்லை. அதனால் தான் அண்மையில் அங்கு ஏற்பட்ட 'கத்தரினா' சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாமும் எமது பங்களிப்பை வழங்கியிருந்தோம். ✱